வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 212 | பக்கங்கள் : 20



07 பா. ஜ. க. வை தோற்கடிக்க முடியுமா?



08 கடந்த வருடம் இன்றைய தினத்தில்...!



09 புலம்பெயர் தேசத்திலிருந்து தாயகத்தை நோக்கிய நிதி



10 சிங்களத்தின் எதிர்காலத் தலைமைக்கு சிங்க(ள)க் குட்டிகள்

# கூட்டமைப்பு வழி தவறினால் வெளியேற தயங்கமாட்டோம்!

## எச்சரிக்கிறது ஜனநாயகப் போராளிகள் கட்சி



யாழ்ப்பாணம், ஜூலை 09

“வவுனியாவில் சீனித் தொழிற்சாலை அமைப்பது தொடர்பான விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் செயற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. எம்முடன் எந்தப் பேச்சும் நடத்தாமல் இந்த விடயத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த சீனித் தொழிற்சாலை நிறுவப்படுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இதன் பின்னணி என்ன என்பது எமக்கு நன்றாகத் தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வழியில் இருந்து விலகி பயணிக்குமானால் அதிலிருந்து வெளியேறுவதற்கு நாம் தயங்க மாட்டோம். நாம் பதவிகளுக்கு ஆசைப்பட்டவர்களல்லர்.”

19

# மருதங்கேணி கடலில் மூழ்கி சிறுவன் பலி!

## லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தவேளையில் அனர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 09

மருதங்கேணி கடலில் மூழ்கி, மீட்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் நேற்றுமுன்தினம் கடலுக்கு குளிக்கச் சென்றிருந்த நிலையில், இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

கடலில் மூழ்கிய சிறுவன் பிரதேச மக்களால் மீட்கப்பட்டு, மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

19

# ரணில்-மோடி சந்திப்பு ஏற்பாடுகள் மும்முரம்!

## இந்திய இராஜதந்திரி கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க, கடந்த வருடம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி இந்த விஜயத்தை அவர்

19

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தமிழ் இனப்படுகொலைக்கான ஆதாரம்!

## சுட்டிக்காட்டுகின்றார் மாவை சேனாதிராசா



யாழ்ப்பாணம் ஜூலை 09

கொக்குத்தொடுவாயில் தோண்டப்படும் மனிதப் புதைகுழிகள் சர்வதேசத்தின் முன்னிலையில் இனப்படுகொலையை நிருபிப்பதற்குரிய ஆதாரங்களாகும் என தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று நடந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்

19

# மைத்திரிக்கான கால அவகாசம் புதன்கிழமை முடிவடைகின்றது!

கொழும்பு, ஜூலை 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு, தனிப்பட்ட பணத்தில் இழப்பீடு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய கால அவகாசம் எதிர்வரும் புதன்கிழமையுடன் நிறைவடையவுள்ளது.

பிரதம நீதியரசர் தலைமையிலான ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வு இந்த ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி ஏகமனதாக தீர்ப்பளித்தது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 10 கோடி ரூபாயும், முன்னாள்

19



# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகப் பதிவுக்கு எதிர்ப்பு!

கிளிநொச்சி, ஜூலை 09

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் பதிவுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தினால் அழைக்கப்பட்டவர்களிற்கான பதிவுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது காணாமல் போனோர் அலுவலக ஆணை யாளர் ரி.ஜோகராஜா, கிளிநொச்சி

19

# பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் சேவை நீடிப்பு?

கொழும்பு, ஜூலை 09

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு 3 மாத காலத்துக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, விக்கிரமரத்ன இன்று அல்லது நாளை பணிக்குச் சமூகமளிக்க

19

# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிறஞ்சன்

## புதன்கிழமை கடமையேற்கிறார்



யாழ்ப்பாணம், ஜூலை 09

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக ம.பற்றிக் டிறஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் கிடைத்தது.

அவர் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை

19

# அமைச்சரவை அதிகாரத்துடன் மாகாண அமைச்சர் பதவிகள்!

## பஸில் அணியினருக்கு வழங்க திட்டம்?

கொழும்பு, ஜூலை 09

அமைச்சரவை அதிகாரங்களுடன் கூடிய மாகாண அமைச்சர்கள் சிலரை நியமிப்பது சம்பந்தமாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரியவருகிறது.

தேவையான சந்தர்ப்பங்களில் மாகாண அமைச்சர்கள் அமைச்சரவையின் கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடிய வகையில் இந்த நியமனங்களை வழங்க அரசாங்கம்

19

# அரச வைத்தியசாலைகள் கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின்சாரம் துண்டிப்பு

## இலங்கை மின்சார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 09

சுகாதார அமைச்சுக்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் நிலுவையில் உள்ள மின் கட்டணங்களை செலுத்தாவிட்டால் அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார அறிவித்துள்ளது.

அத்துடன் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான வைத்தியசாலை மற்றும் நிறுவனங்கள் செலுத்தவேண்டிய மொத்த மின் கட்டண நிலுவைத் தொகை மூன்று பில்லியன் ரூபாவைக் கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டண நிலுவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும் நாடு முழுவதும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான நானூறுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்கள் காணப்படுவதாகவும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் நிலுவையில் உள்ள மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மாதாந்தம் 13.5 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், அடுத்த ஆறு மாதங்களுக்கு நிதி அமைச்சிடம் இருந்து 67 பில்லியன் ரூபா சுகாதார அமைச்சினால் கோரப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

இருப்பினும் சுகாதார அமைச்சுக்கு போதிய பணம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், அதனை என்ன செய்வது என்பதில் சிக்கல் எழுந்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)



# தரை தட்டிய கப்பல்களை மீட்கவரும் இந்திய கப்பல்!

மன்னார், ஜூலை 09

மன்னார் பேசாலை - நடுக்குடா பகுதியில் நேற்று முன் தினம் தரைதட்டிய கப்பல் மற்றும் பாச் எனப்படும் கொள்கலன் தாங்கி ஆகியவற்றை மீட்பதற்காக இந்தியாவிலிருந்து கப்பலொன்று இலங்கைக்கு வரவுள்ளது.

குறித்த கப்பல் நேற்று மாலை 5 மணியளவில் நாட்டை வந்தடையும் என இலங்கை கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

மாலைதீவிலிருந்து இந்தியாவின் தூத்துக்குடி நோக்கிப் கொள்கலன் தாங்கியை இழுத்துக்கொண்டு பயணித்த கப்பல் ஒன்று, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, மன்னார், பேசாலை - நடுக்குடா பகுதியில் நேற்று முன் தினம் தரைதட்டியது.

அந்தக் கப்பலில், 11 பணியாளர்கள் உள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இந்தியாவின் சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திற்கு அறியப்படுத்தியுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கமைய, குறித்த நிறுவனமும் கடற்படையும், சமுத்திரவியல் சேவை மற்றும் மீட்பு பணியகமும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்தியாவிலிருந்து மாலைதீவுக்கு பொருட்களைக் கொண்டு சென்ற, குறித்த கொள்கலன் தாங்கி, அங்கிருந்து மீண்டும் கப்பல் ஒன்றின் மூலம் இந்தியாவை நோக்கி இழுத்துச் செல்லப்பட்ட வழியில், இலங்கை கடற்பரப்பில் தரை தட்டியுள்ளது.

87 மீற்றர் நீளமான குறித்த கொள்கலன் தாங்கி, எந்தவித பொருட்களும் அற்ற நிலையிலேயே கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கப்பல் மூலம் குறித்த கொள்கலன் தாங்கி இழுத்துச் செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில், கடற்பிராந்தியத்தில் வீசிய கடும் காற்று மற்றும் அலையின் சீற்றம் காரணமாக, குறித்த கப்பலும், கொள்கலன் தாங்கியும் இலங்கை கடற்பரப்பை நோக்கி இழுத்து வரப்பட்டிருக்கலாம் என கடற்படை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த கப்பல் மற்றும் கொள்கலன் தாங்கி ஆகியவற்றை மீட்பதற்காக, இந்தியக் கப்பல் ஒன்று இலங்கையை வந்தடையவுள்ளது.

அந்தக் கப்பல் நாட்டை வந்தடைந்த பின்னரே, எவ்வாறான நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கலாம் என கடற்படை பேச்சாளர் குறிப்பிட்டார்.

கடலின் சீற்றம் குறித்து அவதானம் செலுத்தவேண்டியுள்ளதுடன், குறித்த கொள்கலன் தாங்கி எந்தளவு ஆழத்திற்கு கரைதட்டியுள்ளது என்பதை ஆராய வேண்டும் என்றும் கடற்படைச் பேச்சாளர் கூறினார். (அ)

# பத்திரிகையாளரின் தந்தையார் மறைவு



யாழ்ப்பாணம், ஜூலை 09

பத்திரிகையாளர் தனபாலசிங்கத்தின் தந்தையார் ஓய்வு பெற்ற தபால் திணைக்கள அலுவலர் ஆழ்வார் வீரகத்தி (வயது 91) சிறிதுகால சுகவீனத்தின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியில் நடைபெறும். (அ)

# 'விலையுயர்ந்த விதைகள்' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 08

நல்லூர்வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த வே.முத்தையா அவர்களின் 100ஆவது அகவை நிறைவு நாளை முன்னிட்டு கவிஞர் கெங்கா ஸ்ரான்லியின் 'விலையுயர்ந்த விதைகள்' எனும் கவிதைநூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர்வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் முனைவர் சி.சிவலிங்காராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வெளியீட்டு உரையை, கவிஞர் ரஜிதா அரிச்சந்திரனும், மதிப்பீட்டுரையை கவிஞர் வைவரவநாதன் வசீகரனும், வாழ்த்துரையை ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் சதா. கனகலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# 16 வருடங்கள் கடந்தும் திருத்தப்படாத நுளம்பு கட்டுப்பாடு தொடர்பான சட்டம்

கொழும்பு, ஜூலை 09

2007 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நுளம்பு கட்டுப்பாட்டுச் சட்டம், 16 வருடங்கள் கடந்த பின்னரும் திருத்தப்படவில்லை என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சம்பந்தப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருக்கவேண்டும். அத்துடன், அவர் விரும்பினால், சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது குறிப்பிட்ட பகுதியின் பொது சுகாதார பரிசோதகருக்கு அதிகாரங்களை வழங்கலாம். எனினும் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்படாமையால் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் டபிள்யூ.ரி. ரொஷான் குமார தெரிவித்தார்.

இதேவேளை, நிலவும் பருவ மழை காரணமாக டெங்கு பரவுவதில் அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் தீவிரமடையலாம் என கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி கூறினார். (அ)

# பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 1100 ஊழியர்கள் சுய விருப்பில் ஓய்வு

## நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல்

கொழும்பு, ஜூலை 09

பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 1100 ஊழியர்கள் விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி ரத்னசிறி களுபஹன தெரிவித்தார்.

அவர்களுக்கான நட்ட ஈட்டை வழங்குவதற்கு 2660 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வுபெறும் ஊழியர்களுக்கான நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நிதியை திரட்டுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, ஜூன் மாத சம்பளத்தின் நிலுவை தொகையை வழங்கக் கோரி பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் நேற்று முன் தினம் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

நிதி நெருக்கடி காரணமாக ஊழியர்களுக்கு முழுச் சம்பளத்தையும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி ரத்னசிறி களுபஹன தெரிவித்தார்.

எனினும், நாளை திங்கட் கிழமை முழு சம்பளம் வழங்கப் படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரூ.160,000 மில்லியன் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள் ஏலம்!

கொழும்பு, ஜூலை 09

ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மில்லியன் ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 12ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளதென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளதென மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய 2 விபசார விடுதிகள் சுற்றிவளைப்பு; 7 பேர் கைது

கொழும்பு, ஜூலை 09

இரத்மலானை பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் நடத்தப்பட்ட இரண்டு விபசார விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன.

அங்கு, அந்த விபசார விடுதிகளின் நிர்வாகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் விபச்சாரத்தில் ஈடுபட்ட ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 மற்றும் 39 வயதுடைய கட்டுகஸ்தோட்டை, நுகேகொடை, நாகொல்ல, பத்தேகம மற்றும் கெக்கிராவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப் பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ராஜபக்ஷவினரிடம் இருந்து ரணிலைப் பிரிக்கவேண்டும்

## சர்வகட்சி போராளிகள் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 09

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்ஷவினரிடம் இருந்து பிரித்து எடுப்பது தமது அடுத்த பிரதான அரசியல் நோக்கம் என காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்வரிசை செயற்பாட்டாளர்க ளான சர்வகட்சி போராளிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

ரணில் விக்கிரமசிங்கவை எதிரியாக கருதி செயற்படாமல், மூலோபாய பங்காளியாக கருதி செயற்படத் தயாராக இருப்பதாக அந்த அமைப்பின் செயற்பாட்டாளர் நிராஷான் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மிகவும் குறுகிய அரசியல் நோக்கங்களை பயன்படுத்தியதால், பனிப்போர் முடிவுக்கு வந்து, அமெரிக்க உலக வல்லரசாக மாறிய நேரத்தில் உலக வலையமைப்பில் எமக்கு உரித்தாகவேண்டிய இடத்தை நாம் இழந்தோம்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் நாம் தவறுகளை திருத்தவேண்டும். தவறைத் திருத்துவதற்காக நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் இருக்கும் திறமைசாலிகளை ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும்.

அப்படி இணைத்துக்கொள்ளும்போது ரணில் விக்கிரமசிங்கவை ராஜபக்ஷவினரிடம் இருந்து பிரித்தெடுக்கவேண்டும்.

அடுத்த ஜனாதிபதி மொட்டுக்கட்சியை சேர்ந்தவராக இருப்பார் என நாமல் கூறியதை பார்த்தோம்.

நாங்கள் இருக்கும் வரை ராஜபக்ஷ ஒருவருக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளை வகிக்க இடமளிக்க மாட்டோம் என்பதை நாமல் ராஜபக்ஷவுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

ராஜபக்ஷவினரிடம் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை பிரித்தெடுப்பதே எமது அடுத்த பிரதான அரசியல் நோக்கம்.

வரலாற்றில் தன்னை பற்றி எழுதும்போது மக்களின் பணத்தைக் கொள்ளையிட்ட திருட்டுக் குடும்பத்தைப் பாதுகாத்த நபர் என எழுதப்படவேண்டுமா என்பதை ரணில் விக்கிரமசிங்க சிந்திக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளிலும் உள்ள திறமையானவர்களை ஒன்றிணைத்து, சரியான அரசியல் பயணத்தை மேற்கொண்டு பொருளாதாரத்தை வலுப்படுத்தவேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவளித்து வருகின்றோம்.

ஆனால், அவர் ராஜபக்ஷவினரை பாதுகாக்க எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எதிர்ப்போம்-என்றார். (அ)

# ஜனாதிபதியுடன் இணக்கமாக செயற்படுவோர் நீக்கப்படுவர்

## கூறுகின்றார் ஹிருணிகா

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படுவோரை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ விரைவில் நடவடிக்கை எடுப்பார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் கொடுக்கல், வாங்கலில் ஈடுபடும் ஐக்கிய மக்கள் சக்தியினர் பற்றி தான் முறைப்பாடு செய்துள்ளதாகவும் நீண்ட காலம் செல்லும் முன்னர், அவர்களுக்கு எதிராக கட்சியின் தலைவர் நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகப்போவதில்லை எனக் கூறியுள்ள ஹிருணிகா, கட்சியை தூய்மைப்படுத்தி சரியான வழிக்கு கொண்டு வர முடிந்தளவில் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் ஈடுபடும்போது அறிவை பயன்படுத்த வேண்டும் எனவும் சதுரங்க விளையாட்டை விளையாடுவது போல் அதனைச் செய்ய முடியாது எனவும் ஹிருணிகா மேலும் கூறினார். (அ)

# 'செவாலியர் இளவாலை அமுது' நூல் இன்று இணுவிலில் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 09

புலம்பெயர் எழுத்தாளர் சிவ.தணிகாலசத்தின் "செவாலியர் இளவாலை அமுது" என்ற நூல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில், இணுவில் பொது நூலக தகவல் தொழில் நுட்ப விரிவுரை மண்டபத்தில் அறிமுகப்படுத்தப்பட விருக்கிறது.

மேனாள் பேராசிரியர் தேவராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் அவ்விழாவில் வரவேற்புரையை ம.ஜெயகாந்தனும் ஆசியுரைகளை செஞ்சொல்செல்வர் ஆறு திருமுருகனும், சோ.அரவிந்தக் குருக்களும் வழங்கவிருக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெறும். விழாவுக்கான வாழ்த்துரைகளை இரா.அருட்செல்வம், சி. புரந்தரா ஆகியோர் விழங்க விருக்கின்றனர்.

நூல் அறிமுக நிகழ்வில் முதற் பிரதியை இராமலிங்கம் மகாராஜ் பெற்றுக் கொள்கிறார். நூலின் ஆய்வுரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும் வெளியீட்டுரையை ஈ.குமரனும் நிகழ்த்தவிருக்கின்றனர்.

நூலாசிரியர் சிவ தணிகாசலத்தின் ஏற்புரையைத் தொடர்ந்து சொ.ஹரிசங்கரின் நன்றியுரையோடு விழா நிறைவு பெறும். (அ)

# குடும்பநலப் பணியாளர் பற்றாக்குறை; நாடளாவிய ரீதியில் 3000 வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூலை 09

குடும்ப நலப் பணியாளர்கள் பற்றாக்குறையினால் எதிர்காலத்தில் தாய், சேய் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளதாக அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட 1,600 பேரை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களாக பயிற்சிக்காக இணைத்துக் கொள்வதில் அரசாங்கம் காலதாமதம் செய்வதாக அதன் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

நாட்டில் குடும்ப சுகாதார சேவையாளர்களுக்கான 3000 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

# இலங்கை போக்குவரத்துச் சபை நாளாந்த வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 09

இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் 158 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

நாளாந்தம் 12 இலட்சம் பயணிகள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளில் பயணிப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, சுற்றிவளைப்புகள் அதிகரித்துள்ளமையினால், இலங்கை போக்குவரத்து சபையின் நாளாந்த வருமானம் அதிகரித்துள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தபால் அதிபரை மிளகாய் தூளினால் தாக்கிய நபரினால் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 09

மாத்தறை - கொட்வில - மெதகொடவில உப தபால் நிலையத்திற்கு வந்த நபர் ஒருவர் தபால் அதிபரை மிளகாய் பொடியால் தாக்கியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நபர் மிளகாய் பொடியை வீசி தாக்கி தபால் நிலையத்தில் பணத்தை திருட முயற்சித்துள்ளதாக கொட்வில பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், சந்தேகநபரின் முயற்சி தவிர்க்கப்பட்டதால் முகத்தை மூடியவாறு தபால் நிலையத்துக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர், தபால் அதிபரிடம் சில விடயங்களை விசாரிப்பதற்காக சென்றதாகவும், இதனால் அவரது முகத்தில் மிளகாய் பொடியை வீசி தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் தபால் நிலையத்தில் பணத்தையும் இந்த நபர் திருட முயன்றுள்ளார்.

அப்போது, தபால் நிலைய அதிபர் சந்தேக நபருடன் போராடி பணத்தை கொள்ளையடிப்பதை தடுத்ததாகவும், அப்போது தபால் நிலையத்தில் 60,000 ரூபாய் பணம் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும், சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அரசியல்வாதிகளுக்கு எதிரான 95 வழக்குகளை மீளப் பெற்றுள்ளது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு

## அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 09

இலஞ்சம்,ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழு கடந்த நான்கு ஆண்டுகளில் தாக்கல் செய்த அரசியல் அதிகாரத்துடன் சம்பந்தப்பட்ட 95 வழக்குகளை திரும்ப பெற்றுக்கொண்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தொழில்நுட்ப விடயங்கள் காரணமாக இந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. உண்மையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் அரசியல் பிடிக்குள் இருப்பதே இதற்கு காரணம்.

இலஞ்ச ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டு 94 வழக்குகளை தாக்கல் செய்தது. நான்கு



வழக்குகளை திரும்பப் பெற்றது. 2020 ஆம் ஆண்டு 55 வழக்குகளை தாக்கல் செய்தது. மூன்று வழக்குகளை திரும்பப் பெற்றது. 2021 ஆம் ஆண்டு 69 வழக்குகள் தொடரப்பட்டன. 42 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 2022 ஆம் ஆண்டு 71 வழக்குகள் தொடரப்பட்டன. 46 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. எந்த காரணங்களின் அடிப் படையில் இந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இந்த நிறுவனம் முற்றாக அரசியல் பிடிக்குள் சிக்கியுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம், சட்டமா அதிபர், அதிகாரிகள், விசாரணை நடத்தும் நிறுவனங்கள் எப்படி அரசியல் மயமாகும்?

ஆட்சி மாறி புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், தமக்கு எதிராக விசாரணை நடத்திய அதிகாரிகளை பழிவாங்கியது.

ஷானி அபேசேகர போன்ற அதிகாரிகளை இரண்டு மூன்று ஆண்டுகள் சிறையில் அடைத்தனர். கொலை செய்ய திட்டமிட்டனர்.

நேர்மையான அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இல்லை. விசாரணைகளில் அரசியல்வாதிகள் சிக்குவார்கள் என்பதால், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் அதிகாரிகளைச் சிறையில் அடைக்கின்றன-என்றார். (அ)

# மஹரகம வைத்தியசாலையில் செயலிழந்து காணப்படும் கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம்

கொழும்பு, ஜூலை 09

மஹரகம வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் "லீனியர் ஆக்ஸிலரேட்டர்" என்ற கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரம் இரண்டு வாரங்களாக செயலிழந்துள்ளதால், குழந்தைகளுக்கான சிகிச்சை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 15 குழந்தைகளுக்கு தினமும் இந்த இயந்திரம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்வீச்சு சிகிச்சையானது வீரியம் மிக்க செல்களை அழிக்க அதிக ஆற்றல் கற்றைகளைப் பயன்படுத்துவதன் மூலம் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க உதவுகிறது. சில புற்றுநோய் அல்லாத கட்டிகளுக்கு சிகிச்சையளிக்கவும் மருத்துவர்கள் கதிர்வீச்சு சிகிச்சையையும் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனிதப் புதைகுழிகள் தோண்டப்படும்போது வெளிநாட்டு நிபுணர்கள் பிரசன்னம் அவசியம்

## வலியுறுத்துகின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.



**கொழும்பு, ஜுலை 09**

**மனிதப் புதைகுழிகள் தோண்டப்படும்போது வெளிநாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்பு பெறப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாயிலிருந்து பல மனித எச்சங்கள் தற்போது மீட்கப்பட்டுள்ள நிலையில் அதில் தமது உறவுகளும் இருக்கலாமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சர்வதேச விதிமுறைகளை கடைப்பிடித்து வெளிநாட்டு நிபுணர்கள், தடயவியலாளர்கள் ஆகியோரின் உதவிகளையும் புதைகுழிகள் தோண்டும்போது பெறவேண்டும்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த பொலிஸார் தயக்கம் காட்டியுள்ளனர்.

இதேநேரம் மனிதப் புதைகுழி தொடர்பில் விடுதலை புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டால், அதற்காக கருணா அம்மன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# பிக்கு, தாய், மகளை தாக்கிய 8 பேர் கைது!

கொழும்பு, ஜுலை 09

நவகமுவ, பொமிரிய ரஸ்ஸபான பிரதேசத்தில் விகாரையொன்றினுள் வைத்து பல்லேகம சுமண தேரர் மற்றும் தாய், மகளை தாக்கிய சம்பவம் தொடர்பில் 8 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர் ஒருவருடனும் அவரது மகளுடனும் அவர் இருந்தபோது, பலவந்தமாக நுழைந்த பிரதேச இளைஞர்கள் குழுவொன்று அவரையும் ஏனைய இருவரையும் தாக்கி அங்கிருந்த தளபாடங்களையும் சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட இரண்டு பெண்களும் சிகிச்சை பெற்று நவகமுவ வைத்தியசாலையில் இருந்து வெளியேறியதாகவும், அவர்களும் நேற்று பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ், சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட எட்டு சந்தேக நபர்களும் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

# அரசுக்கு எதிராக 40 வழக்குகள்!

## தாக்கல் செய்துள்ளது சஜித் கட்சி

கொழும்பு, ஜுலை 09

அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இதுவரையும் போராடி வருகின்றது என்று கூறியுள்ள அக்கட்சியின் முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் அது தொடர்பில் இதுவரை 40 இற்கு மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானது முதல் இன்றுவரை மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அவர் பதவியை விட்டோடி அடுத்தவர் அவரது இடத்துக்கு வந்த போதிலும் பெரிய மாற்றம் ஒன்றும் இடம்பெற்று விடவில்லை.

புதிய வறுமையால் 40 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உருவாகியுள்ளது. இது மிகவும் பாரதூரமான நிலைமை. மூன்று வேளை சாப்பிட்டவர்கள் அதை இரண்டு வேளையாக மாற்றியுள்ளனர். இரண்டு வேளை உண்டவர்கள் ஒரு வேளையாக மாற்றியுள்ளனர்.

இந்த நிலைமை மோசமடையுமே தவிர பிரச்னை தீர்வதற்கு வழியில்லை. அரசு உண்மையான பிரச்னைகளைத் தீர்ப்பதை விட்டுவிட்டு தேவையற்ற வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றது.

அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நாம் போராடி வருகின்றோம். இதுவரை 40 இற்கு மேற்பட்ட வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றோம். நாம் தொடர்ந்தும் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகப் போராடுவோம்.” - என்றார். (அ)

# இலங்கை மதச் சார்பற்ற நாடாகவேண்டும் என்ற கொள்கையை தேரர்களின் நடத்தை காட்டுகிறது

## சுட்டிக்காட்டுகிறார் மனோ கணேசன் எம்.பி.

கொழும்பு, ஜுலை 09

பாலியல் சம்பவங்களில் ஜப்பானில் அகப்பட்ட மாகல் கந்தே சுதந்த தேரர் மற்றும் இலங்கையில் அகப்பட்ட பல்லேகம சுமண தேரர் என்ற தேரர்கள், மட்டக்களப்பில் பொலிஸாரை தாக்கிய அம்பிட்டிய சுமனரத்ன தேரர் ஆகிய மூவரும் அரசியல் தேரர்கள். இந்த சம்பவங்களைச் செய்த சமீபகால தேரர்களின் நடத்தை, இந்நாடு மதசார்பற்ற நாடாக வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது.

ஏனெனில், இந்த அரசியல் தேரர்கள், சமகாலத்தில் இந்நாட்டில் அரசியல் சீர்திருத்தம் நடைபெறுவதை, இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை, எப்போதும் எதிர்க்கும் அணியில் இருந்துள்ளனர். இனவாதத்தை கிளப்பும் அணியில் இருந்துள்ளனர். அதனாலேயே விசேட சலுகை அதிகாரம் பெற்று எவற்றையும் செய்து தப்பலாம் என்றும், குறிப்பாக தமிழ், முஸ்லிம் மற்றும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக எல்லையற்ற அதிகாரத்தை கொண்டு இவர்கள் செயல்பட்டு வருகின்றனர் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தேரர்கள் மீது சமூகத்தில் எழுந்து வரும் விமர்சனங்கள் தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியதாவது

இலங்கையில் அகப்பட்ட சுமண தேரர் சம்பவத்தில் தொடர்புற்ற அந்த பெண்களை படமெடுத்து, தாக்கியமை குற்றமாகும். பாலியல் சுதந்திரம் என்பது பலாத்காரம் இல்லாத சுயவிருப்ப தனிப்பட்ட விவகாரம். ஆகவே பெண்கள் மீதான தாக்குதல் பிழையானதாகும். அதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால், இதை முன்னிலைபடுத்தி இந்த பிக்கு தப்பி விடக்கூடாது. இலங்கையில் இருப்பது தேரவாத பௌத்தம். உலகில் தேரவாத பௌத்தத்தின் தலைமையகம் இலங்கை தான். தேரவாத துறவிகளுக்கு, மத ரீதியாக பாலியல் உறவுகள் தடை செய்யப்பட்டுள்ளன. தாய்லாந்தின் மஹாயான பௌத்த துறவிகளுக்கு இத்தகைய தடை கிடையாது.

ஆகவே இது இலங்கை பௌத்தத்துக்கு உள்ளே பெரும் சிந்தனை குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த பிரச்னையை, பௌத்த துறவிகளின் நடத்தை பற்றிய சீர்திருத்தங்களை, இலங்கையின் சிங்கள பௌத்த சகோதரர்களும், அவர்களது மத தலைவர்களும் பார்த்து கொள்ளட்டும். இதில் நாம் தலையிட தேவையில்லை.

ஆனால், நாட்டின் தேசிய நடத்தை மற்றும் அரசியல் சமூக சீர்த்திருத்தம் பற்றிய விவகாரங்கள் எமது பிரச்னையுமாகும். இதில் நமது அக்கறை இந்நாட்டின், அரசியல் மறுசீரமைப்பில் , “இது செய்யலாம்” “இதை செய்ய கூடாது” என இந்த தேரர்கள் இனியும் கூற வரக்கூடாது, என்பதாகும்.

நான் எப்போதுமே, எந்த மதமும் அரசியலில் நேரடியாக தொடர்பு படக்கூடாது எனக் கூறி வருகிறேன். இந்த நாடு மதச் சார்பற்ற நாடாக வேண்டும் எனவும் ரொம்ப நாளாகவே கூறி வருகிறேன். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்நாட்டின் சிங்கள முற்போக்காளர்களுடன் இணைந்து அரசியலில் மத சார்பற்ற கொள்கையை நாம் முன்னெடுக்க வேண்டும். அமைதி காக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இதில் கரங் கோர்க்க வேண்டும். மதசார்பின்மை என்பதற்குள்ளே இந்நாட்டில் புரையோடிபோயுள்ள பல பிரச்னைகளுக்கான தீர்வுகள் ஒளிந்திருக்கின்றன என நான் நம்புகிறேன்-என்றார். (அ)

# கார் மோதி சிறுவன் பலி! அவனது தந்தை படுகாயம்

கொழும்பு, ஜுலை 09

வாகன விபத்தில் 5 வயது சிறுவன் சாவடைந்துள்ளார். அவரின் தந்தை படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து கொழும்பு, மகரகமவில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றது.

வேகமாகப் பயணித்த காரும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 36 வயதுடைய குடும்பஸ்தரும், அவருடன் பயணித்த 5 வயது மகனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சிறுவன் உயிரிழந்தார்.

காரின் சாரதியைக் கைது செய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# யாழ்.-கொழும்பு விமான சேவை; இரண்டு நிறுவனங்கள் இணக்கம்

கொழும்பு, ஜுலை 09

இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணம் வரை இரண்டு உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு பீச் எயார் மற்றும் சினமன் எயார் விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இதேநேரம் மட்டக்களப்பு, திருகோணமலை, மத்தள, கட்டுநாயக்க உள்ளிட்ட விமான நிலையங்களிலிருந்து உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனை தெரிவித்தார்.

கொரோனா தொற்றை அடுத்து நிறுத்தப்பட்ட பல விமான சேவைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையில் இண்டிகோ உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாக அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் அதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கான விமான சேவைகளை மேலும் அதிகரிக்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடு மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பலாலி விமான நிலைய ஓடுபாதை விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளும்போது இந்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
09.07.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி ஆனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கழுதை தேய்ந்து கட்டெறும்பாக?

தமிழ் தேசிய அரசியலில் பலவாறான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான விவாதங்களின் பெரும்பாலானவை சமூக ஊடக விவாதங்களாகும். இவ்வாறான விவாதங்கள் ஒரு போதும் செயலாக உருமாற முடியாதவை. இலங்கையின் தேசியவாத அரசியல் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க ஒரு முறை கூறியது சரிதானோ - என்று எண்ணக் கூடியளவிற்கே, நிலைமைகள் காணப்படுகின்றன.

அதாவது, சிங்கள தேசியவாதம் கிராமங்களுக்குள் இருக்கின்றது - தமிழ் தேசியம் சைபர் தளத்திலிருக்கின்றதென்று ரணில் ஒரு முறை கூறியிருந்தார். ரணில் விடயங்களை சரியாக புரிந்திருப்பதால்தான், தமிழ் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக வரவேண்டுமென்று கூறுகின்றாரோ. - ஏனெனில், தமிழ் தேசியமென்னும் சொல்லின் கீழ் தமிழ் கட்சிகள் ஒன்றுபடவில்லை. தமிழர்கள் ஒரு தேசமாக இருக்கின்றார்கள் என்பதெல்லாம் வெறும் கற்பனையென்று எண்ணக் கூடியளவிற்கே நிலைமைகள் சீரழிந்து செல்கின்றன. வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றி, யாழ்ப்பாணத்திலிருந்து இப்போதும் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகள் என்போரும் பேசிவருகின்றனர்.

ஆனால் நடைமுறையில் நிலைமை மிகவும் சிக்கலானதாக மாறியிருக்கின்றது. அதன் சாத்தியத்தன்மை தொடர்பில் எவருமே நமபிக்கையுடன் நோக்கவில்லை. கிழக்கில் அவ்வாறான உரையாடலே இல்லை. மாறாக, அதனை எதிர்க்கும் தரப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியிலேயே பலமடைந்து வருகின்றன. அதே வேளை, வடக்கு மாகாணத்திலும் அரசாங்க ஆதரவு தமிழ் கட்சிகளில் செல்வாக்கு அதிகரித்துவருகின்றது.

இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அதனை தெளிவாகவே எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இந்த நிலைமைகளை எவருமே ஆழமாக நோக்குவதாக தெரியவில்லை. தொடர்ந்தும் வசதியுள்ள மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது பற்றியே சிந்திக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் தேசம் - தேசியமென்று கூறிக்கொண்டு, தொடர்ந்தும் அரசியல் யதார்த்தங்களை உணர மறுப்பது எவ்வாறு சரியானதொரு அணுகுமுறையாக இருக்க முடியும்? இது தொடர்பில் தமிழ் சமூகம் சிந்திக்க முன்வராதா?

தமிழ் தேசிய அரசியலின் உண்மையான நிலைமை - கிட்டத்தட்ட கழுதை தேய்ந்து, கட்டெறும்பான கதையாகிவிட்டது. மேடை பேச்சுக்களிலும், அறிக்கைகளிலும், கருத்துருவாக்கமென்னும் பெயரிலான எழுத்துக்களிலும், முகநூல்களிலும் - அதிலும் அதிகம் உண்மையான முகத்தை காட்டாத முகநூல்கள் - நினைவுகூர்தல் நிகழ்வுகளிலும்தான், இப்போது தமிழ் தேசியம் வாழ்கின்றது. தவிர, தமிழ் தேசிய அரசியலுக்கான செயற்பாட்டு தளம் முற்றிலுமாக இழக்கப்பட்டுவிட்டது. தமிழ் தேசியம் பேசுகின்ற அல்லது தமிழ் தேசியத்தை பெயரில் வைத்திருக்கின்ற அனைத்து கட்சிகளுமே, அடுத்த தேர்தல் வெற்றியை இலக்கு வைத்திருக்கும் கட்சிகளாகும். தேர்தல் வெற்றிக்கான வியூகங்களை தாண்டிய அரசியலைப்பற்றி அவர்களால் கற்பனைகூடச் செய்ய முடியாது.

ஏனெனில் இந்த அரசியல் ஆட்டத்தில், பாராளுமன்ற உறுப்புரிமை ஒன்றுதான், அவர்களது அரசியல் அடையாளமாகும். எனவேதான், தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து மட்டுமே கட்சிகள் செயற்படுகின்றன. இந்த இலக்கிற்காக ஒவ்வொருவரும் வேறுபட்ட சுலோகங்களை உச்சரிக்கலாம். ஒருவர் சமஷ்டி எனலாம் - இன்னொருவர் ஒரு நாடு இரண்டு தேசமெனலாம் - இன்னொருவர் 13 ஐ ஆரம்பப்புள்ளியாக எடுக்கலாம் ஆனால் அது ஒரு இறுதித் தீர்வல்லவென்று கூறலாம். ஆனால் நீங்கள் முன்வைக்கும் நிலைப்பாடுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பது எவ்வாறென்று கேட்டால், எவரிடமும் பதிலில்லை. இந்த அடிப்படையில் நோக்கினால், கடந்த 74 வருடகால அரசியலில் - நீங்கள் கூறுவதை எவ்வாறு அடையப் போகின்றீர்கள் என்னும் கேள்விக்கு, தெளிவான,உறுதியான பதிலோடு இருந்தவர் பிரபாகரன் மட்டுத்தான்.

இன்றைய சூழலில் அரசியலை கையாளப் போவதாக கூறுபவர்கள், முதலில் இந்த யதார்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும். இதனை மறுத்துச் செல்வது இலகுவானது - ஆனால் அரசியலில் மக்களுக்கு சாதகமாக எதுவும் நிகழாது. தமிழர் அரசியலானது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை யாக - இறுதியில் கட்டெறும்பும் கண்ணுக்கும் தெரியாத நிலைமையே உருவாகும்.

# வீரமாகாளி ஆலயத் தொண்டர் சபையின் நிதிப் பங்களிப்பில் கற்றல் உபகரண உதவி



யாழ்ப்பாணம், ஜூலை 09

யாழ் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி ஆலயத் தொண்டர் சபையின் நிதிப் பங்களிப்பில் ஆலயச் சூழலுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 100 மாணவர்களுக்கு காசோலைகள் நேற்று வழங்கப்பட்டன.

ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகியது. கடந்த 06 ஆம் திகதி வைரவர் சாந்தி உற்சவத்தினை முன்னிட்டு 100 மாணவர்களுக்கு தலா 4000 ரூபா மதிப்புள்ள கற்றல் உப கரணங்களைக் கொள் முதல் செய்வதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிரு முருகன், ஆலய குருக்களான சிவதர்சக் குருக்கள், ஹரிதர்சக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான காசோலைகளை வழங்கினர்.

சைவ ஆலயங்கள் மக்கள் நலப்பணிகளில் ஈடுபடுவதில்லை என தற்காலத்தில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் யாழ் வண்ணை ஸ்ரீவீரகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இவ்வாறு மாணவர்களுக்கு கற்றல் மேம்படுத்தல் நலத் திட்டங்கள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என சமூக ஆர்வலர்கள் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

மேலும் கடந்த வருடம் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலப்பகுதியில் ஆலய தொண்டர் சபையினால் உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலிச் சான்றிதழ் தயாரித்த கிராமசேவையாளர் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 09

கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் மாணவிகளைச் சேர்ப்பதற்காக போலிச் சான்றிதழை தயாரித்த குற்றச்சாட்டில் கிராம சேவகர் ஒருவர் கண்டி விசேட குற்றப் புலாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

வரெல்லகம பிரதேசத்தில் வசிக்கும் 58 வயதுடைய கிராம அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது பெயரையும் கல்வி அமைச்சின் தலைப்பையும் பயன்படுத்தி போலியான ஆவணங்களைத் தயாரித்து வழங்கிய இவர் 29 பிள்ளைகளைப் பாடசாலையில் அனுமதிக்க போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தியுள்ளார். (அ)

# தயாசிறி ஜயசேகரவின் மகனிடம் வழிப்பறியில் ஈடுபட்டவர் கைது!

கொழும்பு, ஜூலை 09

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் மகனின் சங்கிலி மற்றும் பணத்தை திருடிய சந்தேக நபர் தெஹிவளையில் கைது செய்யப்பட்டதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் அன்றைய தினம் கொள்ளையடித்த சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான வெள்ளைத் தங்க நகையை சந்தேகநபரிடம் இருந்து பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி பம்பலப்பிட்டி லயர்ட்ஸ் வீதியிலுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு அருகில் தனது காதலியுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது சந்தேகநபர் சைக்கிளில் காருக்கு அருகில் சென்று பணம் கேட்டுள்ளார்.

பணம் இல்லை என்று கூறியதும், சந்தேக நபர் கூரிய கத்தியை காட்டி காரின் டாஷ்போர்டில் இருந்த 3000 ரூபாயை கொள்ளையடித்துச் சென்றதுடன், காருக்குள் இருந்த பையை கொள்ளையடிக்க முயன்றபோது, உள்ளே இருந்த வெள்ளை தங்க நகையை திருடிச் சென்றிருந்தார். (அ)

# பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரிப்பு!

## கட்டுப்படுத்த களமிறங்கியது எஸ்.ரி.எவ்.


கொழும்பு, ஜூலை 09

தென் மாகாணத்தில் பாதாளக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. தினமும் அவர்களுக்குள் மோதல் இடம்பெற்று கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

இவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொலையாளிகளைக் கைது செய்வதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் களத்தில் குதித்துள்ளனர்.

அவர்களுக்குப் பயந்து தென் மாகாணத்தைச் சேர்ந்த அதிகமான பாதாளக் குழுவினர் கொழும்புக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -85

# நண்பர்கள் இல்லாத உலகம், எப்படி இருந்திருக்கும்?

கணபதி சர்வானந்தா

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. – திருக்குறள்.

படிக்கப் படிக்க நூலின் நயம் மேன்மேலும் இனிமை தருவது போல நல்ல பண்பு உடையவர்களின் தொடர்பானது பழகப் பழக மேன்மேலும் இன்பம் தருவதாகும் என்கிறார் புலிகேசிகன்.

நட்பில் வசப்பட்டவன், நட்பால் வசப்பட்டவன், இன்றுவரை நட்பின் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவன் என்ற வகையில் அதனை மெய்ப்பிப்பதாக ஒரு பதிவு என் கண்ணில் பட்டது.படித்தேன் சுவையாக இருந்ததனால் அதனை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். நல்ல நட்பு ஒரு நல்ல துணைக்கு ஈடானது. என்றும் உங்களை உயர்த்திவிடும். உங்களைத் தாங்கிக் கொள்ளும். நல்ல நட்பு ஒரு நிலைக் கண்ணாடி போன்றது. அந்த நட்பில் உங்களை நீங்கள் அப்படியே பார்க்கலாம். உங்களிடம் இருப்பதை இல்லை என்று சொல்லவோ அல்லது இல்லாததொன்றை இருப்பதாகச் சொல்லவோ வாய்ப்பில்லை.

நன் நட்பால் உயர்ந்தவர்கள் பலருண்டு. நட்பால் பாதிப்புக்குள்ளாதிருக்க நட்பாய் நடிக்கும் ஒருவரை இனங் காண்பதென்பது உங்கள் திறன் சார்ந்த விடயம். உண்மை நட்பு எப்பொழுதும் உங்கள் உயர்வுக்குத் துணைநிற்பதோடு உணர்ந்து தானாக முன்வந்து வலிந்துதவும். நன் நட்பை ஒரு வரம் என்றும் சொல்லலாம், பேறு என்றும் எடுத்துரைக்கலாம்.

ஹேர்ஸ்ரோறிஸ் (Her Stories) என்ற முகநூல் பக்கத்தில் பொ. அனிதா பாலகிருஷ்ணனின் கட்டுரை. அவர் ஒருத்தியின் கதையாக நண்பி ஒருவரின் அனுபவங்களைக் கீழ் கண்டவாறு பதிவிட்டிருக்கிறார்.

நண்பர்கள், அவள் வாழ்க்கைப் பயணத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இன்றியமையாதவர்கள். ஆனால், இந்த எல்லாக் காலகட்டத்திலும் அவள் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் தூக்கிச் சுமந்தவர்கள். அவளைவிட அவளை நன்கறிந்தவர்கள். அவளை அவளுக்காக நேசிக்கும், அவள் ஏற்ற இறக்கங்களை அருகில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பகிர்ந்து கொள்பவர்கள். அவளை மீண்டும் தன்னிலையடையச் செய்யும் அவள் சாயும் தோள்கள். அவளுக்கு தோழி என்கிற பெயரில் இயற்கை அளித்த தலைசிறந்த ஆசிர்வாதம்.

நண்பர்கள் இல்லாத உலகத்தைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடிவதில்லை. நம் பிரச்சினைகளை யாரிடம் பகிர்வோம்? அதைப் பொறுமையாகக் கேட்டுத் தீர்வு தர யாருளர். எம்மனதில் உள்ளதை வெளியில் கொட்டித்தீர்க்க வடிகால் இல்லாது என்ன செய்வோம்? நம் ரகசியங்களை யார் தங்களுடையதாகக் கருதி பாதுகாப்பார்கள்? மனதார நம் மகிழ்ச்சியை நம்மைவிட அதிகம் கொண்டாடும் ஒரு சில உறவுகளில் முதல் வரிசையில் நிற்கும் அவர்கள் இல்லாத ஒரு வாழ்க்கையை எப்படி எதிர்கொள்வோம்? நாம் செய்யும் நல்லதைப் பாராட்டவும் தவறுகளை உரிமையுடன் கண்டித்து நம்மை நல்வழிப் படுத்தும் நண்பர்கள் கிடைப்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் எத்தனை இன்றியமையாத ஒன்று!

அத்தகைய நல்ல நண்பர்கள் அவளுக்கும் பலர் உண்டு. சிறுவயதிலிருந்து, தன் பக்கத்து வீட்டில் தொடங்கி, பள்ளி, கல்லூரி, பணிபுரியும் இடம், தங்கும் விடுதி என எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் அவளுக்குத் தோள் கொடுப்பதோடு அவள் துவழும் நேரங்களில் தட்டிக் கொடுக்கும் நண்பர்களை வாழ்க்கை அவளுக்கு அளித்திருக்கிறது. இந்த எல்லாக் காலகட்டங்களிலும் அவளுக்கு உறுதுணையாக இருந்து இன்று வரை அவள் இன்பம் துன்பம் எதிலும் அவள் முதலில் தேடி ஓடும் ஒரு தோழி என்கிற பெரிய பரிசையும் அவள் பெற்றிருக்கிறாள். சிறு வயது தொட்டு இன்றுவரை அவள் மனம்விட்டு பேசக் கூடியதாக ஒரு தோழி...

அவள் எழுதிய முதல் கவிதைக்கு கிடைத்த ஆரம்ப ரசிகர்கள், விமர்சகர்கள் அவள் பள்ளித் தோழிகளே. அவர்கள் இல்லாமல் அவளின் அந்தத் திறமை மெருகேறியோ, அவள் நாட்குறிப்பைத் தாண்டி வெளியுலகையோ கண்டிருக்காது. வெளியுலகை அவளுடன் சேர்ந்து ஆராய்ந்து அவளுடன் காலடி எடுத்து வைத்த சக வழிப்போக்கர்கள் அல்லவா அவர்கள்!

கல்லூரி நாட்களில் விடுதிச் சாப்பாட்டில் நாக்கு செத்த அவளுக்கு வீட்டு உணவு என்கிற அமிர்தத்தைக் கொண்டு வந்து பகிர்ந்துகொள்ளும் தோழிகள். புத்தகப் புழுவாக படிப்பைத் தவிர வேறு உலகம் இல்லை என்று இருந்த அவளை அதையும் தாண்டி வாழ்க்கையில் வாழ, தெரிந்து கொள்ள பல இருக்கின்றன என்று எதார்த்த வாழ்வை அவளுக்கு அறிமுகம் செய்த அறைத் தோழிகள்.குறைந்த காலத்தில் அதிகமான நல்ல அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக்கிடைத்த , வாழ்க்கை அளித்த எல்லா சவால்களையும் நகைச்சுவை உணர்வால் கடந்து, அவள் கவலையையும் மறக்க வைத்தவர்கள் அவர்கள்.

கொரோனா ஊரடங்கு நேரத்தில் சமூக வலைத்தளங்களில் அறிமுகமாகி, பின்பு நேரில் சந்தித்தவர்கள். வாசிப்பு உலகில் சஞ்சரிக்கும் அவளின் சக புத்தகப்புழுவான தோழர்கள், தோழிகள். வாசிப்பால் பிணைக்கப்பட்ட உலகெங்கிலிருந்தும் கிடைத்த நண்பர்கள். படிப்பு, வேலை என்று பல காலமாக மறந்துவிட்ட அவள் கவிதைகளை மீண்டும் எழுத, தமிழ் புத்தக விமர்சனங்கள் எழுத ஊக்கப்படுத்திய கவிஞனான தோழன். நடு இரவிலும் அவள் கவலைகளைக் கேட்டு, ஆறுதல் அளிக்கும் தோழிகள். இன்று பாஷை தெரியாத ஊரில் அவளைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டு அவள் வாழ்க்கையை எளிதாக்கும் தோழிகள்.

இப்படி இருக்கும்போது நண்பர்கள் இல்லாத உலகம், எப்படி இருந்திருக்கும்? என்று எண்ணிப் பார்ப்பதென்பது...?

●

# இந்தவார ராசிபலன் 09.07.2023 - 15.07.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 24
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி




எதிலும் நிதானமாக செயல்படுவது நன்மை அளிக்கும். கடந்த கால கசப்பு உணர்வு மாறும். சொந்தத் தொழில் செய்பவர்கள், அதிக வேலைப்பளுவால் ஓய்வின்றி உழைக்க வேண்டியதிருக்கும். பணிகளை அவசரமாக முடிக்க விரைந்து செயல்படுவீர்கள். கூட்டு வியாபாரத்தில் லாபம் அதிகமாகும். மூலப்பொருட்களை வாங்கி சேர்ப்பீர்கள். பணப்பொறுப்பில் உள்ளவர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.




சில செயல்களில் மட்டுமே வெற்றிபெற முடியும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, சக ஊழியர்களின் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்க்கும் பணவரவுகள் சிறிது தள்ளிப்போக நேரிடும். மேலதிகாரிகளின் கேள்விக்கு சிலநேரங்களில் பதில் சொல்ல முடியாமல் தடுமாற வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்களில் சிலருக்கு, பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர்களின் அறிமுகமும், வேலைவாய்ப்பும் கிடைக்கும். கூட்டுத் தொழிலில் போட்டிகளால் லாபம் சிறிது குறையலாம்.




எந்த முடிவுகளிலும் நிதானம் தேவை. உத்தியோகஸ்தர்கள், அலுவலகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவுடன் பல சலுகைகளைப் பெறுவார்கள். சொந்தத் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். அதே நேரம் அவசர வேலைகள், ஓய்வு நேரத்தை குறைக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் பெருகும். புதிய தொழில் தொடங்க பங்குதாரர்களிடம் பேசி முடிவெடுப்பீர்கள் தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கவும், பழைய பொருட்களை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும்.




சிறு தடை தோன்றும். தடைபட்ட காரியங்கள் வெற்றி பெற, தகுந்த நபர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்துசேரும். சக ஊழியரிடம் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. சொந்தத் தொழில் செய்பவர்கள், பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபர்களின் அறிமுகம் பெறுவீர்கள். கூட்டு வியாபாரத்தில் போட்டிகளை சமாளிக்க கடினமாக உழைப்பீர்கள்.




எதிர்பாராத தனலாபமும், பொருள் சேர்க்கையும் உண்டாகும். தகுந்த நபர்கள் இல்லாத காரணத்தால் சில காரியங்கள் நிறைவடையாமல் போகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளில் அதிக கவனம் தேவை. உங்கள் சிறிய தவறும், உயர் அதிகாரிக்கு பெரியதாகத் தோன்றும். சொந்தத் தொழில் செய்பவர்கள் பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய நபரின் அறிமுகத்தைப் பெறுவர்.




எடுத்த காரியத்தை முயற்சியுடன் செய்து பலனை அடைவீர்கள். சொத்து சம்பந்தமான பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பாராத பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகக் கடன் கைக்கு வந்தடையும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு புதிய நபர்கள் மூலம் அதிக வேலைகள் வந்துசேரும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு வியாபாரம் நன்றாக நடைபெற்று லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்படும்.




எதிர்பார்த்த காரியங்களில் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். சில விஷயங்களுக்கு அதிக முயற்சிகள் தேவைப்படும். முக்கிய பணிகளை கவனத்துடன் செய்யுங்கள். உத்தியோகத்தில் சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படலாம். சக ஊழியர்களிடம் வீண் வாதங்களை தவிர்ப்பது நல்லது. பணப் பரிவர்த்தனைகளை தள்ளி வைப்பது நன்மை தரும். சொந்தத் தொழிலில் பரபரப்பான சூழ்நிலை காணப்படும். அவசர வேலைகளை செய்ய ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியதிருக்கும்.




சிறு அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும். எண்ணங்கள் ஈடேற வாய்ப்பு உண்டாகும். நீதிமன்ற வழக்குகள் சாதகமாகும். கடந்த கால கசப்பு மாறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தள்ளிவைத்த காரியம் ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியதிருக்கும். சக ஊழியர்கள் அனுகூலமாக இருப்பார்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், வேலைப்பளுவால் அவதிப்படுவர். கூட்டுத் தொழிலில் போட்டிகள் காரணமாக வியாபாரம் சுமாராக நடைபெறும்.





எதிர்பாராத விருந்தினர் வருகையால் சுபச் செலவு உண்டு. பழைய பகை மறையவும், நீதிமன்ற வழக்கு சாதகமாகவும் மாறும் சூழல் உருவாகும். உத்தியோகத்தில் சிலருக்கு, பொறுப்புள்ள பதவிகள் வந்துசேரும். உத்தியோக ரீதியான முயற்சிகள் சாதகமாக இருக்கும். சொந்தத் தொழில் சிறப்படையும் வண்ணம் வாடிக்கையாளர்கள் பெருகுவர். குடும்பத்தில் சீரானப் போக்கு காணப்படும்.




வழக்கமான பொறுமையால் மறைமுகமான எதிர்ப்பை சமாளிப்பீர்கள். தளர்வடைந்த காரியங்களில் தக்கவர்களின் ஆதரவோடு வெற்றியை நோக்கிச் செல்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு செல்வாக்குடன் கூடிய புதிய பொறுப்புகள் வந்துசேரும். சிலருக்கு அதிகாரமுள்ள பதவிகள் கிடைக்கக்கூடும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் வழக்கமான லாபம் குறையாது.




செய்யும் காரியங்களில் எதிர்பார்த்த திருப்தியான சூழ்நிலை இல்லாமல் போகலாம். நிதிஉதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில், நண்பர்களால் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களில் சிலர் அதிக வருமானமுள்ள புதிய வேலைக்குச் செல்ல முயற்சி மேற்கொள்வார்கள். எதிர்பார்த்த கடன் உதவிகள் தள்ளிப்போகும். சொந்தத்தொழில் செய்பவர்களில் சிலருக்குப் புதிய வேலைகள் கிடைத்து, பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். முன்னேற்றமான பலன்கள் ஏற்படலாம்.





எதிலும் கவனம் தேவை. உறவினர் மற்றும் நண்பர்கள் எதிர்பார்த்த உதவியை செய்வதால், ஓரளவு பிரச்சினைகள் தீரும். எதிர்கால வாழ்விற்கு ஏற்ற திட்டங்களை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் நல் ஆதரவால் நலம் பல சேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள் புதிய நபரின் அவசர வேலையை செய்து கொடுக்க ஓய்வின்றிப் பணிகளில் ஈடுபடுவார்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும், வழக்கமான லாபம் குறையாது. பண முதலீடுகள் லாபகரமாக அமையும். புதிய உபகரணங்கள் வாங்கவும் வாய்ப்புண்டு.

ஈழநாடு



# பா. ஜ. க. வை தோற்கடிக்க முடியுமா?



சென்னை மடல்

-பகவான் சிங்-

'இந்து' நாளிதழில், நண்பர் கோலப்பன், முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் நிகழ்த்திய, மிக அருமையான பேட்டி வெளியாகியிருக்கிறது. ஒரு தேர்ந்த பத்திரிகையாளராக, சிறப்பான பதில்களைக் குறிவைத்துக் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டிருந்தது மட்டுமன்றி, முதல்வர் அவற்றுக்கு அளித்த பதில்களும் என்னை மிகவும் கவர்ந்தன.

ஜூன்14 அன்று அமுலாக்கத்துறை, கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதைத் தடைசெய்யும் சட்டத்தின்கீழ், சர்ச்சைக்குரிய அமைச்சர் செந்தில் பாலாஜியைக் கைதுசெய்ததால் ஏற்பட்டிருக்கும் அரசியல் அனலின் சூழலில் இந்த நேர்காணல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் பொருளாதாரச் சட்டங்களை அமுல்படுத்தவும் பொருளாதாரக் குற்றங்களை எதிர்த்துப் போராடவும் அதிகாரம் பெற்று மத்திய நிதியமைச் சகத்தின் கீழ் செயல்படும் அமுலாக்கத் துறையின் அதிகாரிகள்,

அமைச்சரது வீட்டில் நடத்திய தீவிர விசாரணைக்குப் பிறகு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தத் தீவிர விசாரணைக்குப் பிறகு, பாலாஜி மாரடைப்பால் அவதிப்பட்டு, இருதய அறுவை சிகிச்சை செய்துகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. பாலாஜியின் கைது குறித்தும், அதனால் முதல்வர் ஸ்டாலின் மற்றும் அவரது அரசியல் கூட்டணிக் கட்சித் தலைவர்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு குறித்தும் இங்கு முன்னரே எழுதியிருக்கிறேன். பாஜக, தனது அரசியல் எதிரிகளை அடிபணிய வைக்கவும், அவர்களை அரசியல் களத்திலிருந்து வெளியேற்றவும், மத்திய அரசு அமைப்புகளான சிபிஐ, அமுலாக்கத் துறை மற்றும் வருமானவரித் துறைகளை ஆயுதங்களாகப் பயன்படுத்துவதாக நரேந்திர மோடி அரசின்மீது ஸ்டாலின் குற்றம்

சாட்டியுள்ளார். நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் பாஜக அல்லாத கட்சிகளின் தலைவர்களுக்குத் தொடர்புடைய இடங்களில் இந்த அமைப்புகள் மூலம் சோதனைகள் நடத்தப்பட்டதையும், இவற்றில் குற்றம் உறுதி செய்யப்பட்டது மிகவும் சொற்பமான வழக்குகளில் மட்டுமே என்பதையும் அவர் சுட்டிக்காட்டி, இந்தச் சோதனைகள் அடிப்படை ஆதாரமில்லாத, அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளே என்று குறிப்பிட்டுள்ளார்.

'இந்து'வில் வெளியான கோலப்பனின் இந்த நேர்காணல், செந்தில் பாலாஜியின் கைதுக்குப் பிறகு, ஸ்டாலின் பலமுறை கூறிய கருத்துகளின் மீட்சியாகவே இருந்தது. எனினும், தனது அரசியல் நிலைப்பாட்டைச்

## ஆளுநரை எதிர்த்து நீதிமன்றை நாடுகிறார் ஸ்டாலின்?

சந்தேகத்துக்கிடமின்றி ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்திய விதம் என்னைக் கவர்வதாக இருந்தது - "இந்த மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் நாங்கள் அடிபணியமாட்டோம். அமுலாக்கத் துறை நடவடிக்கை காரணமாக, பாஜக குறித்த திமுகவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை". 2024 மே மாதம் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், பாஜக வென்று, மோடி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வருவதைத் தடுக்க, ஒரு தேசிய முன்னணியை உருவாக்கத் தான் எடுத்துவரும் தீவிர முயற்சிகள் காரணமாகவே தானும் தனது அமைச்சர்களும் இலக்காக்கப்படுவதாக அவர் தனது வாதத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

எனது பார்வையில், இந்த பேட்டியில் ஒரு கேள்வி மிகச் சிறப்பாக இருந்தது. பாஜவின் முகமாக மோடி முன்னிறுத்தப்படும் நிலையில், அப்படி ஒரு முகத்தை முன்னிறுத்த எதிர்க்கட்சிகளால் இயலவில்லை என்பதைக் குறிப்பிட்ட கோலப்பன், "இந்தச் சூழலில், பாஜகவைத் தோற்கடிக்க முடியுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஸ்டாலினின் பதில்: "தேசிய அளவில் பாஜக மோடியை முன்னிறுத்தவில்லை. உங்களின் அந்தக் கற்பனையால் இந்தக் கேள்வியை எழுப்புகிறீர்கள். இன்னும் பல மாதகாலம் இருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள். ஒரு கூட்டணிக்குத் தலைவர் தேவையில்லை, இலக்குத் தான் தேவை. ஜனநாயகம், மதசார்பின்மை, சமூக நீதி, கூட்டாட்சி, அரசியல் அமைப்பு இவற்றுக்கு எதிரான பாஜகவைத் தோற்கடிப்போம் என்ற எங்கள் கொள்கைதான் எங்கள் கூட்டணியை வழிநடத்துகிறது."

செய்தி ஊடகத் துறையைச் சேர்ந்த எங்களில் பலருக்கும் அரசியல் களத்தில் இருக்கும் பலருக்கும் கூடத் தெரியாத ஒரு விஷயம் ஸ்டாலினுக்குத் தெரிந்திருக்குமோ என்று எனக்கு வியப்பு ஏற்படுகிறது - பாஜகவும், அக் கட்சி மற்றும் அரசின் பல முடிவுகளில் செல்வாக்கு பெற்றிருக்கும் அதன் தாய் அமைப்பான ஆர் எஸ் எஸ்ஸும் கூட, மோடி தலைமை குறித்த மாற்றுக் கருத்துகளைக் கொண்டுள்ளன என்பது ஸ்டாலின் வாதமா? அப்படி ஒரு விஷயம் சாத்தியமாகுமா? மோடி குஜராத் முதல்வராக இருந்த காலத்திலிருந்து இன்று அடைந்திருக்கும் பிரம்மாண்டமான உயரத்தைக் கருத்தில் கொண்டால், அக்கட்சியில், சமூக - அரசியல் தளத்தில், அவருக்குப் பதிலாக பிரதமராக முன்னிறுத்தப்படும் அளவுக்கான தகுதி வேறு யாருக்கும் இருப்பதாக நான் கருதவில்லை. ஸ்டாலின் இப்படிக் கூறியது, வெறும் அரசியல் காரணாங்களுக்காக அவர் வீசிய ஓர் ஈட்டியாக இருக்கலாம். மோடியை விட பலவீனமான ஒரு தலைவரே முன்னிறுத்தப்படுவார் என்ற ஆறுதலையும், பாஜக - ஆர் எஸ் எஸ் இடையே தலைமை மோதல்கள் தீவிரமடைந்துள்ளன என்ற நம்பிக்கையையும் திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளிடையே கொடுத்து ஊக்கப்படுத்த அவர் இப்படிக் கூறியிருக்கலாம்.

அதே நேரத்தில், ஒருங்கிணைந்த எதிரணியில் யார் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவார் என்ற



## 'தலைவர் தேவையில்லை, இலக்குதான் தேவை' - ஸ்டாலின்

கேள்விக்கும் பதிலில்லை. இந்தச் சங்கடமான கேள்விக்கு இப்போதைக்குப் பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை. தேர்தலுக்கு இன்னும் 11 மாதங்களே இருக்கும் நிலையில், மோடியை அகற்றுவதில் ஸ்டாலினுக்கும் கூட்டணிக் கட்சிகளுக்கும் இந்த நிச்சயமற்ற தன்மையால் பாதகமே விளையக்கூடும். தேர்தல் வெற்றிகள் எட்டப்படும் விதத்தைக் கவனித்து வரும்

எனக்கோ, அரசியலைக் கூர்ந்து நோக்கி வரும் எவருக்கோ, "கூட்டணிக்குத் தலைவர் தேவையில்லை, இலக்கு தேவை" என்ற ஸ்டாலினின் கூற்று பகல் கனவாகவே தோன்றலாம். காரணம், ஓர் இந்திய வாக்காளருக்குத் தனது அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பதைத் தாண்டியும் சில அம்சங்களை எடைபோட்டு வாக்களிக்கும் அரசியல் முதிர்ச்சியில்லை என்று நான் வருந்துகிறேன். ஜனநாயகத்தின் ஆழமான வேர்களான அனைவரையும் உள்ளடக்கும் தன்மை, மதசார்பினை, சமூக நீதி, கூட்டாட்சி, அரசியலமைப்பு போன்றவை குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் நாம் ஏற்படுத்தவேண்டும். இந்த மாபெரும் இலக்கை, இருக்கும் குறுகிய காலத்தில் எட்ட, இந்த எதிர்க்கட்சிக் கூட்டணியால் இயலுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். விரும்பப்படாத அவசர கால ஆட்சியைத் தொடர்ந்து இந்திரா காந்தியைத் தோற்கடிக்க ஒரே குடையின் கீழ் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று கூடி, மக்களையும் துரிதமாகத் திரளச் செய்தது போன்ற ஒரு சூழல் இப்போது இல்லை. ஒரு வலுவான தலைவரைப் பதவியிலிருந்து இறக்கச் செய்யும் அளவுக்கு உணர்ச்சிபூர்வமான பிரச்னை எதுவும் வாக்காளர்கள் முன் இப்போது இல்லை. எனவே, எதிர்க்கட்சியினர் உடனடியாக ஒரு தகுதியான பிரதமர் வேட்பாளர் முகத்தை முன்னிறுத்தவேண்டிய அவசியம் இருப்பதா கவே நான் கருதுகிறேன். "Bull in a China shop" என்று ஒரு சொலவடை உண்டு. அதாவது, வெறிகொண்ட காளை ஒரு பீங்கான் கடையில் புகுந்தது போல். 'வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல்' என்றும் கூறுவ துண்டு. தமிழக ஆளுநருக்கான, ஆங்கிலேயர் காலக் கட்டடமான ராஜ் பவனில் அதுதான் நடந்து கொண்டி ருக்கிறது. ஒரு மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்ப ட்ட அரசின் ஆட்சிக்கு உதவியாகவும் சில தீவிர காரணங்களால் அந்த அரசு பெரும்பான்மை இழந்து விட்டாலோ, ஆட்சிக் கலைப்பு செய்யப்பட்டாலோ நிர்வாகத்தைத் தொடர்ந்து கவனிக்கவோதான் மத்திய அரசால் ஆளுநர்கள் நியமிக்கப்படுவதாக அரசியல் சாசனம் கூறுகிறது. ஆனால் பல ஆண்டுகளாக, குறிப் பாக, அதிகாரம் மிக்க இந்திரா காந்தி ஆட்சிக்காலத்திலிருந்து, மத்தியில் ஆட்சி செய்யும் கட்சிக்கு எதிரான மாநில அரசுகளுக்குக் குடைச்சல் கொடுக்கவே ஆளுநர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். வடகிழக்கு மாநிலமான நாகாலாந்தின் ஆளுநராக இருந்த ரவி இரண்டாண்டுகளுக்கு முன் தமிழக ஆளுநராக மாற்றப்பட்டபோது, திராவிட ஆட்சியாளர்கள் புருவங்களை உயர்த்தினார்கள். நாகாலாந்திலும் அதற்கு முன்னர் மேகாலயாவிலும் ஆளுநராக இருந்த காலத்தில், அவர்மீது பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அந்தச் சூழலில், தமிழகத்தில் திமுக ஆட்சியமைத்த சில மாதங்களில் அவர் இங்கு மாற்றப்பட்டமை, முதல்வர் மு. க. ஸ்டாலினுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தவே என்ற ஐயம் எழுந்தது.

இந்த ஐயம் நியாயமானது என்பதை ஆளுநர் ரவி நிரூபித்து வருகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அர சின் முடிவுகளையும் நடவடிக்கைகளையும் மதிக்காமல், அரசியல் சாசனத்தை மீறி, டில்லியில் உள்ள தனது முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவது என்ற ஒரே குறுகிய நோக்கத்துடன் செயல்படுவதாக அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு அவரது செயல்பாடுகளே காரணம். அவரது அனுமதிக்காக அரசால் அனுப்பப்படும் கோப்புகளைக் கிடப்பில் போட்டு வைப்பது, பொருளாதாரக் குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகியுள்ள செந்தில் பாலாஜியைத் தனது அதிகாரத்தை மீறிப் பதவி நீக்கம் செய்தது (நீக்கம் திரும்பப் பெறப்பட்டது) போன்ற அரசியல் சாசன விரோத நடவடிக்கைகளை எதிர்த்து, திமுகவும் ஸ்டாலின் அரசும் நீதிமன்றத்தை நாடவுள்ளதாக நான் அறிகிறேன்.

ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டதாலேயே ஓர் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்படவேண்டியதில்லை என்று திமுகவும் ஸ்டாலினும் கூறுவது நியாயமே. இதுபோன்ற வழக்குகளில் சிக்கியும் அமைச்சர்களாகத் தொடரும் பிற மாநில, பிற கட்சியைச் சேர்ந்தவர்களின் ஒரு பட்டியலையும் திமுகவினர் வெளியிட்டுள்ளனர். இதில், இதுபோன்ற வழக்கில் கைதான பிறகும் அமைச்சராகத் தொடர்ந்த மத்திய உள்துறை அமித்ஷா பெயரும் இருக்கிறது. ஓர் அமைச்சரோ முதலமைச்சரோ குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றம் உறுதி செய்யப்பட்டால்தான் அவர்களைப் பதவி நீக்கம் செய்வது கட்டாயமாகிறது.

ரவியின் ஜனநாயக விரோத, அப்பட்டமான அரசியல் அறிக்கைகளும் செயல்பாடுகளும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் கவனத்தையும் ஈர்த்துள்ளன. ஆளுநர் அரசியலில் ஈடுபடக் கூடாது என்றும் ஊடகங்களுக்கு அறிக்கைகள் அளிக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தவறு செய்யும் ஆளுநருக்கு ஆதரவு தெரிவிப்பதால் பாஜகவின் பிம்பம் சிதைவதைத் தடுக்க அவர் விரும்புகிறார். மேலும், யார் தவறு செய்தாலும் அதை விமர்சிப்பதும் யார்

சரியானதைச் செய்தாலும் அதை ஆதரிப்பதும் பாஜகவின் நேர்மைக்கு ஒரு சான்று என்ற பிம்பத்தை உருவாக்கவும் அவர் முயல்கிறார்.

ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த ஆளுநர் பதவி, தற்காலத்தில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் செயல்பாடுகளில் தலையிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மாநில அரசுகளுக்குத் தொல்லை கொடுத்து, அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் ஆன்மாவைச் சிதைப்பதாகக் கூறி, இந்தப் பதவியையே அகற்ற வேண்டும் என்று எழும் கோரிக்கைகளை ரவியின் செயல்பாடுகள் வலுப்படுத்துகின்றன. நாம் இரண்டு தவறுகளை, இல்லை, இரண்டு பாவங்களைத் தொடர்ந்து செய்து வருகிறோம். நம்மை ஆண்ட வெள்ளைக்கார ஆட்சியாளர்கள், தங்களின் ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ள உருவாக்கிய ஆளுநர் போன்ற பதவிகளையும் பழக்கங்களையும் நாம் இன்றளவும் பின்பற்றி வருகிறோம். கால மாற்றங்களுக்கு ஏற்ப, பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள நமது அரசியல் சாசனம், நமக்களிக்கும் சுதந்திரம் இதனால் பாதிக்கப்படுகிறது.

இரண்டாவது குற்றம், ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிப் பல கொடுமைகளை அனுபவித்த நமது முன்னோர்கள் நமக்குப் பெற்றுத் தந்த சுதந்திரத்தையும் அரசியல் ஞானத்தையும், பின்னர் ஆட்சிக்கு வந்த ஊழல் மிகுந்த, சுயநல அரசியல்வாதிகளின் காலடியில் போட்டுவிட்டோம். இது, ஆங்கிலேயர்கள் அடிமைப்படுத்திய, இலங்கை உள்ளிட்ட, அநேக ஆசிய நாடுகளுக்கும் பொருந்தும். நம் தவறுகளைத் திருத்திக்கொண்டு, ஜனநாயகத்தின் உண்மையான பலன்களைப் பெறும் வழிகளை நாம் ஆராயவேண்டும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

ஈழநாடு



# கடந்த வருடம் இன்றைய தினத்தில்...!



வீரகத்தி தனபாலசிங்கம்

## ‘அறகலய’ மக்கள் கிளர்ச்சி குறித்து ஒரு மீள்பார்வை



இலங்கை வரலாறு முன்னென்றும் கண்டிராத மக்கள் கிளர்ச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை அதிகாரத்தில் இருந்து விரட்டி நாட்டை விட்டு வெளியேற வைத்து இன்றுடன் சரியாக ஒரு வருடம் கடந்தோடிவிட்டது.

ஜூலை 9 இலங்கை அரசியலில் மாத்திரமல்ல, தெற்காசிய பிராந்திய அரசியலிலும் கூட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தினமாக பதிவாகிவிட்டது எனலாம். எமது பிராந்தியத்தின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஜனநாயக தேர்தல் ஒன்றில் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஆட்சியாளரை அதே மக்கள் கிளர்ச்சிசெய்து பதவியில் இருந்து இறங்கச் செய்ததாக வரலாறு இல்லை.

அரசியல் புரட்சி ஒன்றின் பரிமாணங்களை எடுத்திருந்த “அறகலய” என்று அழைக்கப்படும் அந்த மக்கள் கிளர்ச்சி அதன் முதற்கட்ட வெற்றியை அடைந்த பிறகு படைபலம் கொண்டு அரசாங்கத்தினால் அடக்கியொடுக்கப் பட்டிருந்தாலும், அதன் மூலமான வலுவான “அரசியல் செய்தி” ஆட்சியதிகார வர்க்கத்தை இன்றும் கலங்கவைத்துக் கொண்டேயிருக்கிறது. மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சி மூளாதிருப்பதை உறுதிசெய்வதற்கு விதம்விதமான கொடூரமான சட்டங்களைக் கொண்டுவருவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இடையறாது கவனம் செலுத்திக் கொண்டிருப்பதில் இருந்து இதை விளங்கிக்கொள்ள முடியும்

எதிர்ப்புக்களை அடக்குவதில் ஈவிரக்கமற்ற போக்கை கடைப்பிடிக்கக் கூடியவர் என்று பரவலாக நம்பப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரியான ஒரு தலைவரை அரசியல் அதிகார பீடங்களின் வாசல்களுக்கு திரண்டுவந்து பதவியில் இருந்து விரட்டியதன் மூலம் எதிரணி அரசியல் கட்சிகளோ அல்லது சிவில் சமூக அமைப்புக்களோ கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமுடியாத “சாதனையை” இலங்கை மக்கள் நிகழ்த்திக் காட்டினார்கள்.

சுதந்திர இலங்கையின் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் சொல்லொணா துன்பங்களை அனுபவித்த மக்கள் ஓர் எல்லைக்கு அப்பால் பொறுத்துக்கொள்ள முடியாமல் வீதிகளில் இறங்கி செய்த கிளர்ச்சி ஆட்சியதிகாரத்தின் வலுவற்ற தன்மையையும் மக்கள் சக்தியின் பலத்தையும் வெளிக்காட்டியது. அதுபோக, ராஜபக்ச குடும்பத்தின் தணியாத அதிகாரத் தாகத்தையும் நாட்டு மக்களின் வாழ்வு மற்றும் கண்ணியம் மீதான அவர்களின் அலட்சியத்தையும் அம்பலப்படுத்தியது.

தெளிவான அரசியல் தலைமைத்துவமோ அல்லது ஒழுங்கமைப்போ இல்லாமல் ஒரு மக்கள் போராட்டம் ஆட்சியாளர்களை உலுக்கும் அளவுக்கு பிரமாண்டமான சக்தியாக வெளிப்பட்டது என்பது உண்மையில் ஆச்சரியமான ஒன்றுதான்.

ஆனால், ஒரு நான்கு தசாப்த காலப் பகுதிக்குள் ஒரு உள்நாட்டுப் போரையும் இரு ஆயுதக் கிளர்ச்சிகளையும் கண்ட நாட்டில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் என்பது ஒன்றும் புதுமையானவையல்ல. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆட்சியாளர் முனரும் ஒரு தடவை போராட்டத்தின் விளைவாக பதவியில் இருந்து இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டதை நாடு கண்டது.

பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் உணவு மானியங்களில் குறைப்பு செய்ததை அடுத்து 1953 ஆகஸ்ட் 12 இடதுசாரி கட்சிகளின் தலை மையில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் போராட்டம் இலங்கையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்கு எதிரான முதலாவது மக்கள் போராட்டமாக அமைந்தது. அதை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த கடுமையான நடவடிக்கைகளில் குறைந்தது பத்துப் பேர் பலியான கொந்தளிப்பான நிலைவரத்துக்கு மத்தியில் அமைச்சரவையே கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற பிரிட்டிஷ் கப்பலில் தான் கூடியது.

ஆனால், கடந்த வருடம் கோட்டாபய பதவி விலகியதைப் போன்று டட்லி சேனநாயக்க உடனடியாக பிரதமர் பதவி விலகவில்லை. இரு மாதங்கள் கழித்து அக்டோபரில் தான் பதவி விலகினார். அவருடன் பணியாற்றிய சில உயரதிகாரிகள் பிற்காலத்தில் எழுதிய தங்களது நினைவுக் குறிப்புகளில் அவர் சுகவீனம் காரணமாக பதவி விலகியதாக குறிப்பிட்டிருக்கின்ற போதிலும், ஹர்த்தால் போராட்டத்தின் விளைவாக தோன்றிய அரசியல் நெருக்கடிகளே பதவி விலகலுக்கான உண்மையான காரணம் என்பதில் சந்தேகமில்லை.

ஹர்த்தாலுக்கு இடதுசாரிக் கட்சிகள் தலைமைதாங்கி வழிநடத்தியதைப் போன்று “அறகலய”வுக்கு அரசியல் தலைமை எதுவும் இருக்கவில்லை. அதில் தான் அந்த கிளர்ச்சியின் தனித்துவம் வெளிப்பட்டது. தன்னியல்பான மக்கள் கிளர்ச்சியின் இறுதிக்கட்டங்களில் தீவிரவாத அரசியல் சக்திகள் ஊடுருவி வன்முறைகளுக்கு வழிவகுத்துவிட்டதாக அதிகார வர்க்கம் குற்றஞ்சாட்டி அடக்குமுறைக்கு நியாயம் கற்பித்த போதிலும், தங்களது வாழ்வை அவலத்துக்குள்ளாக்கிய தவறான ஆட்சி முறைக்கும் ஊழல் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிரான வெகுஜனங்களின் சீற்றம் இலங்கையை நோக்கி முழு உலகத்தையும் பார்க்கவைத்தது.

“அறகலய” மக்கள் கிளர்ச்சியின் குறுகிய வரலாற்றை நான்கு கட்டங்களாக சுருக்கமாக கூறலாம்.

இயற்கைப் பசளை பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கென்று கூறிக்கொண்டு இரசாயன பசளை வகைகள் இறக்குமதிக்கு தடைவிதித்த கோட்டாபயவின் முன்யோசனையற்ற தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முதலில் நாட்டுப்புறங்களில் எதிர்ப்பியக்கங்களை பல மாதங்களாக முன்னெடுத்தனர்.

பிறகு பொருளாதார இடர்பாடுகளை தாங்க முடியாமல் சில வாரங்களாக தலைநகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் ஆங்காங்கே சிறிய கவனஈர்ப்பு எதிர்ப்பியக்கங்களை நடத்திய மக்கள் தினமும் பல மணி நேர மின்வெட்டு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்று நிலைமை தொடர்ந்து மோசமடையவே 2022 மார்ச் 31 கொழும்புக்கு வெளியே மிரிஹானவில் உள்ள ஜனாதிபதி கோட்டாபயவின் வீட்டுக்கு வெளியே திரண்டு “கோட்டா வீட்டுக்கு போ” என்று முழக்கங்களை எழுப்பினார்கள்.

பொலிசார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்ப்பீரங்கி தாக்குதல்களை நடத்தி அவர்களைக் கலைத்தார்கள். நிலைவரத்தை கட்டுப்படுத்த இராணுவமும் அழைக்கப்பட்டது.

மக்கள் வீதிகளில் இறங்குவதை தடுக்க ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

(மறுபக்கம் பார்க்க)



அதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டப் பிரகடனமும் வந்தது. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை தீவிரவாதிகள் என்று வர்ணித்து அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதி இலங்கையில் "அரபு வசந்தம்" ஒன்றை முன்னெடுக்க அவர்கள் சதி செய்வதாக குற்றஞ்சாட்டினார்.

ஊரடங்கு சட்டத்தையும் அவசர காலச் சட்டத்தையும் அலட்சியம் செய்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் வீதிகளில் இறங்கி ஆட்சியாளர்கள் மீதான தங்கள் ஆவேசத்தை வெளிக்காட்டினார்கள். அடுத்து ஒரு வாரத்தில் காலி முகத்திடலில் "கோட்டா கோ கம" போராட்டக்கிராமம் அமைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மையாக பேரை வாவிக்கு பக்கத்தில் "ஆர்ப்பாட்ட இடம்" ஒன்றை பிரகடனம் செய்து எதிர்ப்பியக்கங்களை மதிக்கும் ஒருவராக உலகிற்கு தன்னைக் காட்டிக்கொள்ள முயன்ற கோட்டாபய காலிமுகத்திடல் முழுவதையும் முற்றுகை செய்து தனக்கு எதிராக ஒரு போராட்டக் கிராமமே நாளடைவில் உருவாகும் என்று ஒரு போதும் நினைத்திருக்கமாட்டார்.

மக்கள் கிளர்ச்சியின் உலகறிந்த சின்னமாக "கோட்டா கோ கம" மாறியது. அதே போன்ற கிராமங்கள் வேறு நகரங்களிலும் போராட்டக்காரர்களினால் அமைக்கப்பட்டது. குறிப்பாக காலி முகத்திடல் "கோட்டா கோ கம" ராஜபக்ச அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான மக்கள் போராட்டத்துக்கு ஒருமைப்பாட்டை வெளிக்காட்டுவதற்கு சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்தவர்களுக்கு ஒரு பரந்த அடையாளபூர்வமான களமாக அமைந்தது.

மூன்று மாத காலமாக இன, மத பேதமின்றி ஆண்கள், பெண்கள், முதியவர்கள், ஊனமுற்றவர்கள், சிறுவர்கள், குழந்தைகளை கையில் ஏந்திய இளம் தாய்மார்கள், கல்விமான்கள், மதத் தலைவர்கள், அறிவுஜீவிகள், கலைஞர்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் என்று பல தரப்பினரும் "கோட்டா கோ கம"வுக்கு படையெடுத்தனர்.

ஏப்ரல் 9 ஆம் திகதியில் இருந்து போராட்டங்கள் கடுமையாக தீவிரமடையத் தொடங்கின. அலரிமாளிகை முன்பாகவும் போராட்டக்காரர்கள் "மைனா கோ கம" வை அமைத்து பிரதமர் மகிந்த ராஜபக்சவை பதவி விலகுமாறு கோரினர். ஜனாதிபதி செயலகமும் முற்றுகைக்குள்ளானது.

பிறகு முக்கிய சம்பவங்கள் எல்லாமே ஒரு நாடக பாணியில் 9ஆம் திகதிகளிலேயே நடந்தேறியதை காணக்கூடியதாக இருந்தது.

சரியாக ஒரு மாதம் கழித்து மே 9 ஆம் திகதி தனது பெருமளவு ஆதரவாளர்களை அலரிமாளிகைக்கு வரவழைத்த மகிந்த ஆவேசமாக உரையாற்றி காலிமுகத்திடலில் முகாமிட்டிருந்த போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அவர்களைக் கட்டவிழ்த்துவிட்டார். பொலிசார் பார்வையாளர்களாக இருந்தனரே தவிர வன்முறையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அந்த தாக்குலுக்கு பதிலடியாக நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகள் மூண்டன. எழுபதுக்கும் அதிகமான அரசாங்க அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இதையடுத்து பிரதமர் பதவியில் இருந்து மகிந்த விலக வேண்டியேற்பட்டது. அலரிமாளிகையை மக்கள் முற்றுகையிட்ட நிலையில் தனது குடும்பத்தினருடன் அங்கிருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஹெலிகொப்டர் மூலம் வெளியேறிய அவர் திருகோணமலையில் கடற்படை தளத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார்.

அதற்கு பிறகு ஒரு தடவை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ராஜபக்ச சகோதரர்களில் மூத்தவரான சமல் ராஜபக்ச சகோதரர் மகிந்த ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.



ஜூன் மாதம் 9 ஆம் திகதி முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். அன்றைய தினம் செய்தியாளர்கள் மகாநாட்டைக் கூட்டிய அவர் தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவாக நாடு வங்குரோத்து நிலையடைந்ததற்காக மக்களிடம் வருத்தம் தெரிவிப்பதற்கு பதிலாக மக்களும் கூட நெருக்கடி நிலைக்கு பொறுப்பு என்று கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அடுத்து ஜூலை 9 நாடு பூராவுமிருந்து இலட்சக் கணக்கில் மக்கள் தலைநகரில் திரண்டு ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர். இராணுவத்தின் உறுதியான ஆதரவைக் கொண்டவர் என்று நம்பப்பட்ட கோட்டாபய கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி மாளிகையின் கொல்லைப்புறமாக வெளியேறி துறைமுகத்தில் கப்பல் ஒன்றில் தங்கியிருந்து பிறகு வெளிநாடு சென்றார்.

முதலில் மாலைதீவுக்கும் சிங்கப்பூருக்கும் பிறகு தாய்லாந்துக்கும் மனைவி சகிதம் சென்ற அவருக்கு எந்த நாடுமே தஞ்சம் அளிக்க முன்வராத நிலையில் இறுதியில் செப்டெம்பர் முதல் வாரத்தில் நாடு திரும்பி முன்னாள் ஜனாதிபதிக்குரிய அரசாங்க வசதிகளுடன் தற்போது வாழ்ந்துவருகிறார். அடிக்கடி வெளி நாடுகளுக்குச் போய்வருகிறார்.

உலகில் மக்கள் கிளர்ச்சியை அடுத்து நாட்டில் இருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட வேறு எந்த ஆட்சியாளரும் கோட்டாபயவைப் போன்று சுலபமாகவும் விரைவாகவும் நாடு திரும்பக்கூடியதாக இருந்ததாக நாம் அறியவில்லை.

இலங்கையில் முன்னைய எந்த ஜனாதிபதிக்கும் எதிராக மக்கள் கிளர்ச்சி செய்ததில்லை. கோட்டாபயவே பதவிக்காலத்தின் இடைநடுவில் அதிகாரத்தைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்ட முதல் இலங்கை ஜனாதிபதியாவார். நீண்ட காலத்துக்கு தங்களது குடும்ப ஆட்சியை தொடருவதை எவரா லும் தடுக்கமுடியாது என்று நம்பிக் கொண்டிருந்த ராஜபக்சாக்கள் தங்க ளுக்கு எதிராக சிங்கள மக்கள் இவ்வளவு விரைவாக கிளர்ந்தெழுவார்கள் என்று கனவிலும் ஒரு போதும் நினைத்திருக்க மாட்டார்கள்.

விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு கடமைப் பட்டவர்கள் என்று கர்வத்தனமாக கருதிய ராஜபக்சாக்கள் அதனால் ஆட்சியதிகாரம் என்பது ஏதோ தங்களிடம் இருந்து பறிக்க முடியாத உரித்து என்ற நினைப்பில் தங்களின் முறைகேடான ஆட்சியை மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்று விபரீதமாக நம்பினார்கள்.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான பேரினவாத அணிதிரட்டல் என்றென்றைக்கும் தங்களுக்கு கைகொடுக்கும் என்றும் ராஜபக்சாக்கள் நம்பினார்கள்.

இலங்கை அரசியல் முன்னரும் கூட சில உயர்வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் அந்த குடும்பங்களுக்கு எதிராக மக்கள் ஒரு போதும் கிளர்ச்சி செய்தில்லை. குடும்ப ஆதிக்க அரசியலை ராஜபக்சாக்கள் மிகவும் அருவருக்கத்தக்க மட்டத்துக்கு கொண்டுசென்றார்கள். ஆனால், மக்கள் கிளர்ச்சியில் இருந்து அவர்கள் பாடம் எதையும் கற்றுக்கொண் டதாக தெரியவில்லை. வெளிநாடுகளின் குறிப்பாக மேற்குலக நாடுகளின் சதி முயற்சியின் காரணமாகவே தாங்கள் அதிகாரத்தை இழக்கவேண்டிவந்ததாக கூறும் அவர்கள் மீண்டும் தங்களால் தேர்தல்கள் மூலம் ஆட்சியதிகாரத்துக்கு வரமுடியும் என்று மக்களின் உணர்வு களை அவமதிக்கும் வகையில் கூறுகி றார்கள்.

தவறான ஆட்சிமுறைக்கும் வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கும் கோட்டாயவும் அவருக்கு ஆலோசனை கூறியவர்களும் மாத்திரமே பொறுப்பு என்பது போல அவரின் ஆட்சிக்கால செயற்பாடுகளில் இருந்து தங்களை தூரவிலக்கும் ஒரு தந்திரோபாயத்தை கடைப்பிடிக்க ஏனைய ராஜபக்சாக்கள் முயற்சிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் கோட்டாபயவை ஒரு "அப்பாவி" போன்று காட்டுவதற்கு அவருக்கு நெருக்கமானவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஜூன் 20 கோட்டாபயவின் 74 வது பிறந்ததினம். அவரின் அந்தரங்க செயலா ளராக இருந்த சுஜீஸ்வர பண்டார என்ப வர் அதற்கு இரு நாட்கள் முன்னதாக சண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். "வர லாற்றினால் தவறிழைக்கப்பட்ட ஒரு ஜனாதிபதி" என்பது அதன் தலைப்பு.

"பண்டார ஒரு விசித்திரமான சில கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். பதவி விலகிய நேரத்தில் கோட்டாபய மக்கள் செல்வாக்குடன் இருந்தாரா இல்லையா என்பதை தேர்தல் ஒன்றின் மூலம் மாத்திரமே அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். அத்தகைய ஒரு தேர்தல் இல்லாத நிலையில் தீய நோக்குடைய நிகழ்ச்சி நிரலைக் கொண்டவர்கள் வெற்றிபெற்றுவிட்டார்கள்.

"முன்னாள் ஜனாதிபதியின் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் அறியாதவர்கள் குடும்பத்தவர்களுடன் சேர்த்து அவரையும் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆளுமையைப் பொறுத்தவரையிலும் கூட அவர் ஏனைய சகோதரர்களையும் விட வித்தியாசமானவர். அவர் பதவியேற்றபோது நாட்டின் பொருளாதாரம் ஏற்கனவே வீழ்ச்சியின் விளிம்பில் இருந்தது. கொவிட் - 19 பெருந்தொற்று நோயே வீழ்ச்சியை விரைவுபடுத்தியது.

"உண்மை ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்து தவறான குற்றச்சாட்டுக்கள் சகலவற்றில் இருந்தும் முன்னாள் ஜனாதிபதியை விடுவிக்கும் என்று அவருடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றியவன் என்ற முறையில் நான் உறுதியாக நம்புகிறேன் " என்று பண்டார எழுதியிருக்கிறார்.

கடந்த வருடம் ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டபோது அவர்களை சுடுவதற்கு உத்தரவை தருமாறு இராணுவ அதிகாரிகள் கோட்டாபயவை கேட்டதாகவும் அதனால் அமைதியிழந்த அவர் "உங்களுக்கு என்ன பைத்தியமா? இந்த மக்கள் தான் எனக்கு வாக்களித்து அதிகாரத்துக்கு கொண்டுவந்தவர்கள். அவர்களை எவ்வாறு சுட முடியும்?" என்று அவர்களைப் பார்த்து திருப்பிக் கேட்டதாகவும் பண்டார கூறுகிறார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தன்னை பதவி விலகுமாறு கோரியபோது 69 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாக தெரிவான தான் எதற்காக சொற்ப எண்ணிக்கையானவர்களின் வற்புறுத்தலுக்காக பதவி விலகவேண்டும் என்று கேட்டவர் இந்த கோட்டாபய. ஆனால், இறுதியில் கிளர்ச்சியில் இறங்கியவர்கள் தன்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்த மக்களே என்பதை ஒத்துக்கொள்கின்ற அளவுக்காவது அவரிடம் ஒருவித "நேர்மை" இருந்திருக்கிறது.

வரலாற்றினால் தவறிழைக்கப்பட்டவரா கோட்டாபய அல்லது வரலாறு தந்த வாய்ப்பை பயன்படுத்துவதற்கு பரிதாபகரமான முறையில் தவறியவரா கோட்டாபய என்பதே முக்கியமான கேள்வி.

•



ஈழநாடு



# புலம்பெயர் தேசத்திலிருந்து தாயகத்தை நோக்கிய நிதி

## உட்பாய்சலுக்கான விருப்பத் தெரிவுகளில் மாற்றம் அவசியமா?

கந்தையா அருந்தவபாலன்

அரசியல் ஆய்வாளரும் பத்தி எழுத்தாளருமான நிலாந்தன் சென்ற வாரம் எழுதிய ‘ காற்றுவெளிக் கிராமத்தில் ஒரு கண்ணகி அம்மன்’ என்ற யதார்த்தமான கட்டுரை தொடர்பாக எழுந்துள்ள எதிர்மறையான கருத்துக்களைப் பார்க்கும்போது அக்கட்டுரையின் உண்மையான கருப்பொருளைப் பலர் புரிந்து கொள்ளவில்லையா அல்லது அவர்களுக்கு அதைப் புரிந்து கொள்ளும் மனப்பாங்கு இல்லையா என்ற ஐயமும் கவலையும் ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் சிந்திக்கும்ஒவ்வொருவருக்கும் எழுவது இயல்பு. தமிழர்களின் ஒன்றுதிரளும் பலத்தினூடாகவே அவர்கள் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வதுஅவசியம். ஒன்றுதிரளவேண்டிய பலம் எனும்போது இன்று அரசியல் கட்சிகளின் ஒற்றுமை பற்றியேஅதிகம் எதிர்பார்க்கும் நாம் அரசியல், சமூகம் உட்பட அனைத்துக்கும் அடிப்படையாக அமையக்கூடிய பொருளாதாரப் பலத்தின் அவசியம் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தத் தவறிவிடுகிறோம். பொருளாதாரப் பலத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு காரணிகள் அவசியமாயினும் அவற்றுள்முக்கியமானது முதலீடுகளாகும். தேவைப்படும் முதலீடுகளுடன் தொழில்நுட்ப, விஞ்ஞான அறிவுகளையும்வழங்குவதற் கான பெருமளவு இயலுமையையும் விருப்பத்தையும் புலம்பெயர் உறவுகள் கொண்டிருந்தாலும் அதனைக் கையகப்படுத்துவதற்குப் பொருத்தமானதொரு களத்தை இன்னும் நாம் உருவாக்கிக் கொள்வில்லை என்பதே யதார்த்த நிலையாகும். குறிப்பாக ஒருமுகப் படுத்தப்பட்ட, அவசியமான நிறுவனக் கட்டமைப்புகள்,நிபுணத்துவ ஆலோசனைக் குழுக்கள், முன்னுரிமை அடிப்படையிலமைந்த திட்டங்கள் மற்றும் ஆளணிகள் போன்ற எவையுமே எம்மிடம் இல்லை. ஒழுங்கானவரம்பு, வாயக்கால் இல்லாது பாய்ச்சப்படும் நீரால் பயிர் வளரும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என்பதற்கு மேலாக நீர் விரயமும் ஏற்படுவது போன்று புலம்பெயர்ந்தோரின் நிதி உட்பாய்ச்சல்கள் அமையக்கூடாது என ஆதங்கப்படுவதும், அதற்கான கட்டமைப்புக்கள் உருவாக வேண்டும் எனஆசைப்படுவதும், அருமையான வளங்களை தேவைகளின் முன்னுரிமைக்கிணங்க பயன்படுத்த வேண்டும்எனச் சுட்டிக்காட்டுவதும் ஒருபோதும் தவறாக அமையாது.

ஈழத்தமிழர்கள் அதிலும் குறிப்பாக வடபுலத் தமிழர்கள் பலவீனமான அடிக்கட்டுமானத்தில் பலமான மேற்கட்டுமானங்களை கொண்டு வாழ்பவர்கள். அதாவது உறுதியான உற்பத்திக் கட்டமைப்பின்றிஉறுதியான நுகர்வுக் கட்டமைப்பை கொண்டவர்கள். உறுதியான அடிக்கட்டுமானமொன்றுக்குகைத்தொழிலும் அதற்கான துணைச்சேவைகளும் அடிப்படையாக இருப்பதுடன் மிகை வருமானத்தைக்கொண்ட விவசாயத் துறையும் பக்கபலமாக இருக்கும். இங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறானநிலை இருந்ததில்லை. 1980 களுக்கு முன்னர் வடபுலத் தமிழ் மக்களின் பிரதான முயற்சிகளாகவி வசாயம், வர்த்தகம் ,கல்வி(வெண்ணுடைத் தொழில்) ஆகிய மூன்றுமே காணப்பட்டன. விவசாயத்தில் காசுப்பயிர்கள் முக்கியம் பெற்றிருந்தன. அதேபோல வர்த்தகம் வடக்குக்குள் மட்டுப்படுத்தப்படாது தலைநகர் உட்பட இலங்கை முழுவதும் விரவியிருந்தது. அக்காலத்தில் வளர்ந்த நாடுகளில்காணப்பட்டதைவிட மேலான மட்டத்தில் இங்கு கல்வி இருந்ததுடன் அது ஒரு தொழில் முயற்சியாகவும் கருதப்பட்டது. 1980 களுக்குப் பின் உள்நாட்டு யுத்தமும் வேகமடைந்த இன ஒடுக்கலுக்கானஅணுகுமுறைகளும் இந்நிலைமையை பெருமளவு மாற்றிவிட்டன. 83 யூலைக்கலவரம் தமிழர்களின் வர்த்தகத்தை முழுமையாகப் புரட்டிப் போட்டுவிட்டது. ஒருபுறத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டப்பிரதேசங்களில் பணப்பயிர் உள்ளிட்ட விவசாயத்துறையின் வளர்ச்சி மறுபுறத்தில் வலிகாமத்தில் படைத்துறை ஆக்கிரமிப்பும் மக்களின் இடப்பெயர்வும் தமிழர்களின் விவசாயத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கல்வியைப் பொறுத்த மட்டில் அது தொடர்பான மக்களின் மனப்பாங்கில் பெரியமாற்றம்இன்னும்



ஏற்படவில்லையாயினும் அதன்மூலமான வாய்ப்புகள் முன்னரைப் போலில்லாது வெகுவாகச்சுருங்கி விட்டதுடன் அது போட்டித்தன்மையையும் அதிகரித்துள்ளது. இக்காரணிகள் எல்லாம் சேர்ந்து80 களுக்குப்பின் தமிழர்களின் புதிய கவர்ச்சிகரமான முயற்சியான ‘வெளிநாடுகளுக்குச் செல்லல்’ வளரத் தொடங்கி இன்றுவரை தொடர்ந்த வண்ணமுள்ளது.

இவ்வாறான ஒரு பின்புலத்தில் தனது உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடிவரும் ஒரு தேசம்அதனது இருப்பைத் தக்க வைக்கவும் பேரம்பேசவும் மட்டுமன்றி யுத்தத்தினால் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் உட்பட இங்கு வாழும் ஒவ்வொரு குடிமகனதும் வளமான வாழ்க்கையை உறுதிசெய்வதற்கும் பொருளாதார ரீதியாக பலம் பெறுவது மிக அவசியமானதாகும். இதற்கு தமிழர் தாயகத்தின்உற்பத்தி இயலளவு அதிகரிக்கப்படுதல் வேண்டும். அதன்மூலம் மொத்த உற்பத்தி, வேலைவாய்ப்புகள், வருமானம், சேமிப்பு என்பவற்றை மேம்படுத்த முடியும். இந்நோக்கங்களைஅடையவேண்டுமெனில் புலம்பெயர்ந்தோரின் பண உட்பாய்ச்சல்களில் கணிசமான பங்கு துறைசார்முதலீடுகளை நோக்கியதாக அமையவேண்டும். தற்போது உள்வரும் நிதிப்பாய்ச்சலில் எவ்வளவு பங்கு இவ்வாறான முதலீடுகளுக்கு மாற்றப்படுகின்றன?

புலம்பெயர்ந்த தேசங்களிலிருந்து தாயகத்தை நோக்கிய பண உட்பாய்ச்சலை நோக்கங்களின்அடிப்படையில் இரு பிரிவாக வகைப்படுத்தலாம்.

1. தனிப்பட்ட குடும்பத் தேவைகளுக்கானவை.

2. பொதுத் தேவைகளுக்கானவை

புலம்பெயர் தேசத்திலிருக்கிற ஒருவர் இங்குள்ள தனது குடும்பத்தின் அல்லது உறவினர், நண்பர்களின்வாழ்க்கைச் செலவு, மங்கல, அமங்கல நிகழ்வுகள், வீடுகட்டுதல், சொத்துகள் கொள்வனவு, கடன்தீர்ப்பனவு, தொழில் முயற்சிகள் மற்றும் வெளிநாடுகளுக்கு அழைத்தல் போன்ற தேவைகளுக்காக பணம் அனுப்புதல் முதலாவது வகையினுள் அடங்கும்.

வாழ்வாதார உதவிகள், கற்றலுக்கான உதவிகள், விளையாட்டுக கழகங்கள், சனசமூக நிலையங்கள்போன்ற சமூக நிறுவனங்களுக்கான உதவிகள், பாடசாலை, வைத்தியசாலை போன்ற பொது நிறுவனங்களுக்கான உதவிகள், கோயில் போன்ற சமய நிறுவனங்களுக்கான உதவிகள்,அரசியல்செயற்பாடுகளுக்கான உதவிகள் போன்றன இரண்டாவது வகுதியினுள் அடங்கும். இவ்வுதவிகளின் பருமன் 90 கோடி ரூபா கோயில் கட்டுமான உதவியாகவோ 40ஆயிரம் ரூபா சைக்கிளாகவோ அல்லது இவற்றை விடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்.

தனிப்பட்ட தேவைகளுக்காக உள்வரும் பணம், குறித்த குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில்கணிசமான முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருவதுடன் சமூகக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தைத் தோற்றுவித்து வருகிறது. எனினும் அண்மைக்காலத்தில் இப்பணம் சில தவறான முன்னுதாரணங்களைத் தோற்றுவித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.குறிப்பாகக் குடும்பங்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளில் தேவையற்ற ஆடம்பரச் செயற்பாடுகள் மற்றும் இளைஞர்களின் தவறான செயற்பாடுகளுக்கு அனுசரணையாக இருப்பது. இவை நிச்சயமாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும். இதைவிட நாம் கூடிய கவனஞ் செலுத்த வேண்டியது பொதுப் பயன்பாட்டுக்காக உள்வரும் பணமும் அவற்றின் பயனுறுதித்தன்மை பற்றியுமே. பொதுப் பயன்பாட்டுக்காக உள்வரும் பணத்தில் பெரும் பகுதிமீள் உற்பத்திகளுக்கான முதலீடுகளாக அன்றி சமூகநலன்புரி சார்ந்த செலவுகளாக மாற்றப்படுகின்றன. இவை தேவயற்ற அல்லது அனாவசியமான செலவுகள் என்று கூறமுடியாது எனினும் எமது தேசத்தின் எதிர்காலம் கருதி இவற்றைவிட முக்கியமான தெரிவுகளுக்கு மாற்றப்படவேண்டும். அதாவது உற்பத்தி இயலளவை அதிகரித்து அதன்மூலம் வெளியீடு, வேலைவாய்ப்பு, வருமானம் என்பவற்றை மேம்படுத்தும் துறைகளிலான முதலீடுகளாக பெரும்பகுதி நிதி அமையவேண்டும்.

கைத்தொழில், பண்ணை முயற்சிகள், சேவைத்துறை போன்ற அனைத்துப் பரப்புகளிலும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புகள் நிறையவே இங்குண்டு. பண்ணைத் தொழிலுக்காக மட்டுமன்றி இனத்தின் பாதுகாப்புக்காகவும் வளம்நிறைந்த வன்னிப் பெருநிலம் ஏங்கிக்கொண்டிருக்கிறதை நாம் இன்னும் கண்டுகொள்ளவில்லை. வெறுமனே வாங்கி விற்கும் வியாபாரத்துடன் நின்றுவிடாது உருமாற்றும் உற்பத்தி முயற்சிகளில் அதிகளவு முதலிடப்பட வேண்டும். உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய கைத்தொழில்கள் பலவுள்ளன. பழம், கடலுணவு,பனம்பொருள் உட்பட பல உணவு பதனிடும் தொழில்களை உருவாக்கமுடியும்.இவை உள்ளூர் சந்தைகளை மட்டுமல்லாமல் ஏற்றுமதி நோக்கியதாகவும் விரிவுபடுத்த முடியும். தென்பகுதியிலிருந்துவந்து “சிரட்டை, சிரட்டை” எனக் கூவி வாங்கி அங்கு கொண்டு சென்று பொருளாக்க முடியுமென்றால்அக்கைத்தொழிலை ஏன் நாம் இங்கு உருவாக்க முடியாது என்று சிந்திக்க வேண்டும். நாள்தோறும் கோடிக்கணக்கான பணத்தை மது பானங்களுக்காக தென்னிலங்கைக்கு வாரிவழங்கும் நாம் எமதுபிரதேச பனம், தென்னங் கள்ளிலிருந்தான மதுபானத் தொழிற்சாலையை உருவாக்குவதன் மூலம் பணவெளிப்பாய்ச்சலைத் தடுப்பதுடன் பல நூறு பேருக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்கமுடியும். ஒவ்வொருமாவட்டத்திலும் ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்துவதற்கான இயற்கை வளங்கள் நிறையவே இங்குண்டு. இங்கு ஆளணி வளத்துக்குப்பஞ்சமில்லை. எந்தத் தொழிலுக்கும் இசைவுபடுத்தக் கூடிய படித்த இளைஞர் கூட்டம் நிறையவுண்டு. தேவையான குறுங்காலப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இலகுவாக வேண்ணடிய தொழிலாளர்களைப்பெறமுடியும்.

தமிழர் தாயகத்தின் நிதி மேலாண்மையை இன்றுவரை காலமும் தென்னிலங்கை நிறுவனங்கள்தான் கொண்டிருக்கின்றன என்பதை நாம் எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா? எமது தாயகத்துக்கானஅல்லது இலங்கை முழுவதற்குமான நிதி நிறுவனங்களை ஏன் நாம் உருவாக்கக் கூடாது? வங்கிகள், குத்தகை நிதி நிறுவனங்கள்,நுண்கடன் நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்குவதுதொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும். கிராம மட்டத்தில் இளைஞர், மகளிர் அல்லது தொழில் சார் மக்கள் கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றினூடாக உருட்டல் கடன்களை வழங்கி சுய தொழில்களைஊக்குவிக்க முடியும். இதன் மூலம் நுண்கடன் நிறுவனங்களின் சுரண்டல்களிலிருந்தும் எம்மவரைக் காக்க முடியும். இவையெல்லாம் ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே.

இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை தாயக மக்களின் மனமாற்றமும் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புமே. அர்ப்பணிப்புடன் துணைவரக்கூடிய துறைசார் வல்லுநர்கள் எம்மிடையே நிறைய உள்ளனர். பயனுள்ள வகையில் முதலிடுவதற்கான நிதியை வழங்குவதற்கு புலம் பெயர் உறவுகள் தயாராக உள்ளனர். இப்போது எமக்குத் தேவை ஆரோக்கியமான கலந்துரையாடல்கள், சட்டரீதியானகட்டமைப்புகள்,செயற்றிட்டங்கள்,முன்னோக்கிய செயற்பாடுகள் மட்டுமே. எனவே புலம்பெயர்ந்தோரின்பண உட்பாய்ச்சலில் பெரும்பகுதியை முதலீடுகளாக மாற்றுவது பற்றிச் சிந்திப்போம். இவ்வகையில் எதிர்காலத்தில் பொருளாதார பலத்தை நாம் பெறும்போது எமது பேரம் பேசும் வலுஉயரும்.அதுமட்டுமன்றி இப்போது அனுப்புவது போல் சமூக நலன்புரிகளுக்கு பணம் அனுப்ப வேண்டியதேவையும் ஏற்படாது. ஏனெனில் அவற்றை இங்கு வளரும் தொழில் நிறுவனங்களே தாங்கிக் கொள்ளும்.

# சிங்களத்தின் எதிர்காலத் தலைமைக்கு
# சிங்க(ள)க் குட்டிகள் இரண்டு களத்தில்!

மகிந்த தரப்பிலிருந்து அவரது மகன் நாமலும், ரணில் தரப்பிலிருந்து அவரது மைத்துனர் ருவான் விஜேவர்த்தனவும் சிங்களத் தேசத்தின் எதிர்கால தலைமைக்கு மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் வளர்க்கப்பட்டு வருகின்றனர். இவர்களால் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கையில்லை. இவர்களுக்கு நிகராக தமிழர் உரிமைகளுக்கு நீதி கேட்டுப் போராடக்கூடிய ஓர் இளந்தலைவர் எப்போது வரப்போகிறார்?

இலங்கை அரசியல் என்பது தீர்க்கமான எந்த முடிவையும் எட்டாது, அல்லது எட்ட விடாது பிரச்னைகளை நகர்த்திச் செல்லும் பாணியையே தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. சிங்களத் தலைமைகள் எப்போதும் தங்களை ஆளும் வர்க்கமாக வைத்துப் பார்ப்பதால் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை இது.



நாடு எத்தகைய பிரச்னைகளை எதிர்கொண்டாலும் அதற்கான தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் ஆட்சித் தலைமைகள் ஒருபோதும் அக்கறையில்லாது இருப்பதே இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படாமைக்கு முக்கிய காரணம்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் மதவாத பௌத்த பிக்குகளின் பேரெதிர்ப்பால் ஒருதலைப்பட்சமாக சிங்களத் தலைமையால் கிழித்தெறியப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் ஐந்தாண்டுகளுக்கு டட்லியின் தேசிய அரசாங்கத்தை முழுமையாக்க உதவியதே தவிர தமிழருக்கு எதுவும் கிடைக்கவில்லை.

கடந்த ஏழரை தசாப்த காலத்தில் தமிழரின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணக்கூடிய எத்தனையோ வழிமுறைகள் அடையாளம் காணப்பட்டன. ஆனால் அவை எதனையும் நிறைவேற்ற சிங்கள தேசம் முன்வரவில்லை. மாவட்ட சபை, மாகாண சபை என்பவை கானல் நீராய்ப் போயின. சிங்களத் தலைமைகளின் எதேச்சாதிகாரப் போக்கு தமிழர் பிரச்னைத் தீர்வுகளின் முயற்சியை கருச்சிதைவாக்கியது.

ஓர் இனத்தின் அடையாளத்தை காப்பதற்கான அடிப்படை அம்சங்களை நிராகரிப்பது மட்டுமன்றி, தொல்பொருள் என்ற பெயரில் அவற்றை அடாத்தாக பறித்தெடுப்பதே ஜனநாயகம் என காட்சிப்படுத்தப்படுகிறது. இதனூடாக தமிழ் இனம், தமிழ் மண், தமிழர் பண்பாடு, தமிழர் பாரம்பரியம் என்பவற்றை இல்லாமல் செய்ய முடியுமென சிங்கள தேசம் கங்கணம் கட்டி நிற்கிறது.

1987ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்ற சட்ட வரையறை அற்றவையல்ல. 13வது திருத்தம் என்பது சட்டத்துக்கு உட்பட்டது. அதனை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்குண்டு. அதனை நிறைவேற்றுமாறு வலியுறுத்தும் பொறுப்பு இந்தியாவுக்குண்டு.

ஆனால், இரண்டு நாடுகளும் 13ம் திருத்தத்தை மையப்படுத்தி கிளித்தட்டு விளையாடுகின்றன. தமிழ்த் தலைமை கள் இந்த விளையாட்டைப் புரிந்து கொண்டும் தெரியாததைப்போல அறிக்கைகள், கடிதங்கள், கோரிக்கைகள் என்று விளையாட்டுக் காட்டுகின்றன.

காணி அதிகாரமும் காவற்துறை அதிகாரமும் தமிழர்களுக்கு அவர்களின் பாரம்பரிய வாழ்விடத்தில் கிடைக்கக் கூடாதென்பதில் சகல சிங்கள கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு ஒரே தண்டவாளத்தில் பயணிக்கின்றன. தேர்தலில் தங்களுக்குள் தோல்வி ஏற்பட்டாலும் தமிழரைத் தோற்கடிப்பதில் அவர்களுக்குள் வேற்றுமையில்லை. இதன் வெளிப் பாடே 1978ன் பின்னரான பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் முடிவுக ளும் அவர்களின் செயற்பாடுகளும்.

அரசியல் யாப்பின் அடிப்படையில் ரணிலின் ஜனாதிபதித் தெரிவு ஏற்கப்பட வேண்டியதொன்றாயினும், தேர்தல் வாக்களிப்பின் அடிப்படையில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அதற்கான ஆணையை மக்களிடம் பெறவில்லையென்பது ஒரு வாதமாகவே தொடர்கிறது. ஆனாலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற கோதாவில் தமிழர் பிரச்னைத் தீர்வு முயற்சியைத் தவிர மற்றெல்லாவற்றிலும் ரணில் தாம் விரும்பியவைகளை நிறைவேற்றி வருகிறார்.

அதேசமயம் தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெற்று ஜனாதிபதிப் பதவியை தொடர்வதிலும் அவர் தீவிர முனைப்புக் காட்டி வருவது தெரிகிறது. எவ்வகையிலாவது அதற்கான தேர்தலை அடுத்த வருட இறுதிக்குள் அவர் நடத்துவாரென பொதுவான எதிர்பார்ப்புண்டு.

மகிந்தவின் பொதுஜன பெரமுன, ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி, சஜித் பிரேமதாசவின் மக்கள் சக்தி ஆகிய மூன்றுமே இப்போது பிரதான அரசியல் கட்சிகளாக இயங்குகின்றன. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் போது இரண்டு கட்சிகளே நேரடியாக மோதும் நிலை ஏற்படும் சாத்தியமுண்டு.

இந்தப் பின்னணியில் பார்க்கின், எதிர்கால சிங்களத் தலைமைக்காக இரண்டு சிங்க(ள)க் குட்டிகள் போதிய தீனி போட்டு வளர்க்கப்படுவதை பார்க்க முடிகிறது. மகிந்தவின் வாரிசான நாமல் ராஜபக்ச இதில் ஒருவர். அடுத்தவர் ரணிலின் பரம்பரையைச் சேர்ந்த ருவான் விஜேவர்த்தன. இவர்கள் இருவரும் போட்டி அடிப்படையில் அரசியலுக்காக உருவாக்கப்பட்டு வருகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இவர்களது குடும்பப் பின்னணி, அரசியல் அடையாளம், நிகழ்கால செயற்பாடுகள் என்பவற்றை சற்று விரித்துப் பார்ப்பதே இந்தப் பத்தியின் அடிப்படை அம்சம்.

மகிந்த ராஜபக்சவின் மூன்று புதல்வர்களில் மூத்தவர் நாமல் ராஜபக்ச. 1986ல் பிறந்த இவருக்கு இப்போது 37 வயது. இங்கிலாந்தின் லண்டன் சிற்றி பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் மூன்றாந்தரத்தில் பட்டம் பெற்றவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 166,660 விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்று பரம்பரை அரசியலுக்குள் புகுந்தவர்.

இவ்வாறு கூறுவதற்கான காரணம் ராஜபக்ச குடும்பம் சட்டசபை காலத்திலி ருந்தே சிலோன் அரசியலில் நேடியாக ஈடுபட்டதனால். நாமலின் பட்டனாரான (மகிந்தவின் தந்தை) டொன் அல்வின் ராஜபக்ச அம்பாந்தோட்டையி லுள்ள பெலியத்த தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக 1947ல் தெரிவாகி 1965 வரை இருந்தவர். டொன் அல்வின் ராஜபக்சவின் சகோதரரான டொன் மத்தியு ராஜபக்ச அம்பாந்தோட்டைத் தொகுதியின் சட்டசபை உறுப்பினராக 1936ல் தெரிவு செய்யப்பட்டவர்.

மகிந்த ராஜபக்ச 1970ல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற போது முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானவர். பின்னர் பிரதமராகவும் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தவர். மகிந்தவின் சகோதரர்களான சமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் அமைச்சர்களாகவிருந்தவர்கள். மற்றொரு சகோதரரான கோட்டாபய சில வருடங்கள் ஜனாதிபதியாக இருந்தவர். நாமல் ராஜபக்ச 2020 முதல் 2022 வரை அமைச்சராக விருந்து அறகலய பேரெழுச்சியால் பதவி துறக்க நேர்ந்தது.

இப்போது குடும்ப பாரம்பரியத்தை முன்னிறுத்தி ராஜபக்ச குடும்பத்திலி ருந்து ஜனாதிபதியாகும் சுயவிருப்பை முன்னிறுத்தி அதற்கான செயற்பாடு களில் இறங்கியுள்ளார் நாமல். தனது மகனின் கனவை நனவாக்குவதில் மகிந்த முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்.

மறுதரப்பில் ஐக்கிய தேசிய கட்சி தங்களின் அரசியல் வாரிசாக ருவான் விஜேவர்த்தனவை வளர்த்து வருகிறது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் தாய்மாமன் மகனே ருவான். இவர் தற்போது ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராகவும், ஜனாதிபதி ரணிலின் காலநிலை மாற்ற மூத்த ஆலோசகராகவும் பணியாற்றுகி றார். நல்லாட்சி அரசில் பிரதிப் பாது காப்பு அமைச்சராக பதவி வகித்தவர்.

விஜேவர்த்தன பரம்பரை, சேனநாயக்க பரம்பரை ஆகியவற்றின் அரசியல் வாரிசாக ருவான் அடையாளப்படுத்தப்படுகிறார். லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரான டி.ஆர்.விஜேவர்த்தனவின் மகன் றஞ்சித் விஜேவர்த்தனவின் புதல்வர் இவர். (றஞ்சித் விஜேவர்த்தனவின் சகோதரி நளினி விக்கிரமசிங்கவின்

பனங்காட்டான்

புதல்வரே ரணில் விக்கிரமசிங்க).

றஞ்சித் விஜேவர்த்தன திருமணம் புரிந்தது றஞ்சினி சேனநாயக்க என்பவரை. இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் புதல்வர் றொபேர்ட் சேனநாயக்க றஞ்சினியின் தந்தை. முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்க, றோபேர்ட் சேனநாயக்கவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியை நோக்கில் ருவன் விஜேவர்த்தன பரம்பரை - சேனநாயக்க பரம்பரையின் வாரிசாக கணிக்கப்படுகிறார். இவருக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன பரம்பரையுடனும் இரத்த உறவுண்டு. ஜே.ஆரின் தாயாரின் கூடப்பிறந்த சகோதரரே ருவானின் பாட்டனாரான லேக்ஹவுஸ் நிறுவனர் டி.ஆர்.விஜேவர்த்தன.

அதுமட்டுமன்றி, ஐலன்ட் பத்திரிகை



நிறுவனரும் பிரபல தொழில் அதிபருமான உபாலி விஜேவர்த்தனவின் தந்தையும் ருவானின் பாட்டனாரும் கூடப் பிறந்த சகோதரர்கள். 1975இல் பிறந்து குறுகிய காலத்தில் அரசியலில் முன்தள்ளிக் கொண்டுவரப்பட்ட ருவன் விஜேவர்த்தன, எதிர்கால அரசியலில் நாமல் ராஜபக்சவின் போட்டியாளராக களத்தில் வளர்க்கப்பட்டு வருகிறார்.

இவைகள் அனைத்தையும் கூட்டி பெருக்கி கழித்துப் பார்க்கையில் சிங்கள தேசத்தின் எதிர்கால ஆட்சிக்கு இரண்டு அரசியல் குடும்பங்களின் வாரிசுகள் சுவீகார புதல்வர்களாக - எதிரும் புதிருமாக உருவகப்படுத்தி முன்நகர்த்தப்படுகின்றனர்.

இவர்களுக்கு நிகராக தமிழர் உரிமைகளுக்கு நீதி கேட்டு போராட்டம் நடத்தும் வல்லமை உள்ள ஒரு தமிழர் இதுவரை உருவாக்கப்படவில்லையென்றே தெரிகிறது. மூப்பும் பிணியும் பிணைந்திருக்கும் இன்றைய தமிழ்த் தலைமைகள் எப்போது இதுபற்றிச் சிந்திக்கப் போகின்றன?

●



# மாரியுடன் மீண்டும் வடிவேலு

நடிகர் வடிவேலு மீள்பிரவேசத்தில் நாயகனாக நடித்த நாய்சேகர் ரிட்டர்ன்ஸ் என்ற படம் அவருக்கு வெற்றியை கொடுக்கவில்லை. இந்த நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த குணசித்திர வேடத்தில் நடித்த மாமன்னன் படம் மிகப்பெரிய வெற்றியை கொடுத்திருக்கிறது. தற்போது வரை 50 கோடி இந்திய ரூபாய் வசூலித்துள்ள இப்படம் ரசிகர்கள் மத்தியில் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. முக்கியமாக வடிவேலுவின் கதாபாத்திரம் அனைவரையும் கவர்ந்திருப்பதோடு வித்தியாசமான வடிவேலுவை மாரி செல்வராஜ் திரையில் கொண்டு வந்திருக்கிறார் என்று கூறி வருகிறார்கள்.

அந்த வகையில், மறுபிரவேசத்தில் மாமன்னன் படத்தின் மூலம் வெற்றி பாதையை நோக்கி மீண்டும் திரும்பி இருக்கிறார் வடிவேலு. இந்த நிலையில் அடுத்தபடியாக லைவ் இஸ் பியூட்டிபுல் என்ற இத்தாலியன் படத்தை வடிவேலுவை நாயகனாக வைத்து ரீமேக் செய்யப் போகிறாராம் மாரி செல்வராஜ்.

# தமிழுக்கு வரும் மால்வி

திலீப், கீர்த்தி சுரேஷ், ஹனிரோஸ் உட்பட பலர் நடித்த மலையாள படம், 'ரிங் மாஸ்டர்'. ரஃபி இயக்கி இருந்த இந்தப் படத்துக்கு கோபி சுந்தர் இசை அமைத்திருந்தார். 2014ஆம் ஆண்டு வெளியான இந்த நகைச்சுவை படம்பெரு வெற்றி பெற்றது.

இது இப்போது தமிழில் மீளுருவாகியுள்ளது. ஆர். கண்ணன் இயக்கும் இந்தப் படத்தில்ஆர். கே. நாயகனாக நடிக்கிறார்.

பிக்பாஸ் அபிராமி முக்கிய வேடத்தில் நடிக்கிறார். நாயகியாக மால்வி மல்ஹோத்ரா நடிக்கிறார். பஞ்சாபி, தெலுங்கு, மலையாள படங்களில் நடித்துள்ள மால்வி, இந்தப் படம் மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.






# குவியும் வாய்ப்புகள்

ஷங்கரின் 'கேம் சேஞ்சர்'', 'இந்தியன் 2' ஆகியவற்றில் நடித்துவருகிறார் எஸ். ஜே. சூர்யா. தவிர, தெலுங்கில் வெளியான 'மாநாடு', 'டான்' இரண்டிலும் சொந்தக் குரலில் பேசியதில், அங்கிருந்தும் அவருக்கு ஏராளமான வாய்ப்புகள் குவிகின்றன. 'இசை' படத்துக்குப் பின் இயக்கம் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கும் அவர், அடுத்து அதிரடியான இயக்கத்துக்கும் தயாராகி வருகிறார். படத்தின் பெயர் 'கில்லர்'. கிடைக்கிற இடைவெளிகளில் எல்லாம் 'கில்லர்' கதையையும் மெருகேற்றி வருகிறார்.

# இரட்டை வேடத்தில் சிம்பு



தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் நடிகர் சிலம் பரசன் தனது 48ஆவது படத்தில் நடிக்கவுள்ளார். நடி கர் கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தின் படப் பிடிப்பு விரைவில் தொடங்க வுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு இந்த படத்தை அதிகார பூர்வமாக அறிவித்தனர்.

தற்போது இந்த படத்தில் நடிக்க நடிகர், நடிகை தெரிவு தொழில்நுட்பவியலாளர்களை ஒப்பந்தம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தப் படத்தில் சிம்பு இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். நாயகன் மற்றும் வில்லன் என இரண்டு கதாபாத்திரத்தில் அவர் நடிக்கிறாராம்.




**திரைப்படம் - இன்ஃபினிட்டி**
**இயக்கம் - சாய் கார்த்திக்**
**இசை - பாலசுப்ரமணியன் ஜி**
**நடிப்பு - நட்ராஜ், வித்யா பிரதீப்**

திரில்லர் கதைகள் ரசிகர்களை அதிகமாகக் கவர்கிறது என்ற எண்ணத்தில் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார்கள். ஆனால், திரில்லர் கதைக்குரிய திரைக்கதை படத்தில் எந்த இடத்திலும் இல்லாத தால் இந்த 'இன்ஃபினிட்டி' ஆரம்பம் முதலே நம்மை ஈர்க்கத் தவறுகிறது.

சென்னையில் ஓர் இளம் பெண், ஓர் எழுத்தாளர், ஒரு காவல்துறை ஆய்வாளர், ஒரு குடிகாரர் என அடுத்தடுத்து கொலைகள் நடக்கின்றன. அந்த வழக்குகள் பற்றிய விசாரணையை சி. பி. ஐ. அதிகாரியான நட்ராஜ் மேற் கொள்கிறார். கொலைகளுக்கான காரணம் என்ன, அவற்றை யார் செய்தது என அவர் கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




சாய் கார்த்திக் என்பவர் இப் படத்தை இயக்கியிருக்கிறார். 'சதுரங்க வேட்டை' படத்தில் கதாநாயகனாக நடித்து ரசிகர்களை கவர்ந்த நட்ராஜை இப்படிப்பட்ட ஒரு படத்தில் நடிக்க வைத்து அவருடைய நடிப்பார்வத் தையும் கெடுத்திருக்க வேண்டாம். கதையாக ஓரளவுக்கு யோசித்துவிட்டு அதைத் திரைக்கதை அமைத்து படமாக்கியதில் படம் முழுவதுமே 'அமெச்சூர்தனம்' அதிகமாக உள்ளது. படத்தில் சில நாட்கள் நடித்த பிறகே படம் எப்படி வரும் என அனுபவசாலியான ஒளிப்பதிவாளராகவும் இருக்கும் நட்ராஜ்க்கும் தெரிய வந்திருக்கும். அதன் பிறகும் இந்தப் படத்தில் தொடர்ந்து நடித்திருக்கிறார் என்றால் அவருடைய நம்பிக்கையைப் பாராட்ட வேண்டும்.

படத்தில் யார் கொலையாளியாக இருப்பார்கள் என்ற மர்மத்தை மட்டும் இயக்குநர் ஓரளவுக்கு காப்பாற்றியிருக்கிறார். ஆனால், கொலையாளி யார் என இரசிகர்களுக்கு காட்டிய பின் திருப்பம் மேல் திருப்பங்களை தந்து குழப்புகிறார். சி. பி. ஐ. அதிகாரி நட்ராஜூக்கு உதவும் அரசு மருத்துவமனை மருத்துவராக வித்யா பிரதீப். இவரது கதாபாத்திரத்திலும் ஒரு மர்மத்தை வைத்திருக்கிறார்கள். மற்ற கதாபாத் திரங்களில் காவல்துறை அதிகாரி யாக வரும் முனிஷ்காந்த் நகைச்சுவை என்ற பெயரில் எரிச்சலூட்டுகிறார்.

படத்தின் உருவாக்கமே தொலைக்காட்சி தொடரை விடவும் தரம் குறைவாக உள்ளது. இந்த டிஜிற்றல் யுகத்தில் பல புதியவர்கள் பல மேம்பட்ட தொழில்நுட்பங்களுடன் என்னென்னவோ செய்து கொண்டிருக்க, ஒரு முக்கியமான நடிகரை வைத்து இப்படி ஒரு படத்தை எதற்கு எடுத்தார்கள் என்பதுதான் புரியவில்லை.

# நட்சத்திர மகள்!




ஷாருக்கான் தன் மகள் சுஹானாவின் நடிப்பு ஆர்வத் திற்கு ஊக்கம் கொடுத்துவருகிறார். மகளை பொலிவூட்டில் அறிமுகப்படுத்தி தமது தயாரிப்பில் படம் எடுக்கவிருக்கிறார். இந்தப் படத்தை ஷாருக்கா னின் ஆஸ்தான இயக்குநர் சித்தார்த் ஆனந்த் இயக்கி, தயாரிப் பிலும் இணைகிறார். இந்தப் படத்தில் தன் மகளுக்காக ஷாருக் கௌரவத் தோற்றத்தில் நடிக்கவும் உள்ளார்.

# வருகிறார் முருகதாஸ்



ரஜினியின் 'தர்பார்' படத் துக்குப் பின்னர் ஏ. ஆர். முருக தாஸ், 'துப்பாக்கி 2' படத்தை இயக்குவார் எனப் பேச்சு அடிபட்டது. ஆனால், எந்தப் படத்தையும் அவர் இயக்க வில்லை. அதன்பிறகு அவர் சிவகார்த்திகேயனை வைத்து படம் இயக்கவிருந்தார்.

சிவா நடித்த 'மான் கராத்தே' படத்தின் கதையை எழுதியதுடன் தனது பேனரில் முருகதாஸ் அதைத் தயாரித்துமிருந்தார். இந்த நிலையில், இந்தக் கூட்டணி விரைவில் இணையவுள்ளது.




# பங்களாதேஷின் அடையாளம்

பங்களாதேஷ் அணியின் தொடக்க இடது கை ஆட்டக்காரர் தமீம் இக்பால் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆடிய பிறகே அனைத்துக் கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுவதா கக் கண்ணீர் மல்க அறிவித்தார். 34 வயதிலேயே அவர் ஓய்வு அறிவித்தது வங்கதேச ரசிகர்களை கடும் அதிர்ச்சியி லும் சோகத்திலும் ஆழ்த்தியது. தற் போது அவர் அந்த முடிவை திரும்பப் பெற்றுள்ளார்.

தமீம் இக்பால் 241 ஒருநாள் போட்டிக ளில் 8,313 ஓட்டங்களை 36.62 என்ற சராசரியில் எடுத்துள்ளார். 14 சதங்களும் 56 அரைச்சதங் களும் இதில் அடங்கும். டெஸ்ட் கிரிக்கெட் டில் 70 போட்டிகளில் 5,134 ஓட்டங் களை எடுத்துள்ளார் தமீம். சராசரி 39.10 சதங்களும் 31 அரைசதங்களையும் அவர் எடுத்துள்ளார். 78 இருபது -20 சர்வதேசப் போட்டிகளில் 1,758 ஓட்டங்களை எடுத்ததோடு ஒரு சதமும் எடுத் துள்ளார்.

அச்சமின்றி ஆடக்கூடிய தொடக்க வீரர் 2007 உலகக் கிண்ணத்தில் இந்திய பந்துவீச்சாளர்கள் சகீர் கான், முனாப் படேல் ஆகியோரை இறங்கி வந்து சிக்ஸர்களை விளாசியதை மறக்க முடியாது. பாகிஸ்தான் முன்னாள் தொடக்க வீரர் சயீத் அன்வர் பாணியில் தன் துடுப்பாட் டத்தை வடிவமைத்துக் கொண்டவர் தமீம் இக்பால்.

தமீம் இக்பால் 8,313 ஓட்டங்களை ஒருநாள் போட்டிகளில் எடுத்துள்ளார். பங்களாதேஷில் 8,000 ஓட்டங்களை கடந்த ஒரே வீரர் தமிம்தான். இவர் அடித்த 14 ஒருநாள் சதங்களும் பங்களா தேஷ் சாதனை. இவர்தான் அதிக ஒருநாள் சதங்களை அவரின் அணிக்கா எடுத்துள்ளார். மற்ற வீரர்கள் 10 சதங்களைக்கூட எடுத்ததில்லை. மொத்தம் 15,148 ஓட்டங்களுடன் அதிக சர்வதேச ஓட்டங்களை எடுத்த வீரரும் தமிம் இக்பால்தான். மூன்று வடிவங்க ளிலும் தமீம் எடுத்த 25 சதங்களும் வங்கதேச சாதனைப் பட்டியலில் முதலிடம் வகிக் கின்றது.

டெஸ்ட்டில் இரட்டைச் சதம், ஒருநாள் சர்வ தேசப் போட்டியில் 150, இருபது-20இல்ல் சதம் கண்ட வகையில் உலகின் 6 வீரர்களில் தமீமும் ஒருவர். 2016இல் இந்த ட்ரிபிள் சாதனையை தமீம் செய்யும்போது பிரெண்டன் மக்கலமும், கிறிஸ் கெய்லும்தான் இந்தச் சாதனையில் இவருக்கு முன்னோடியாக இருந்தனர்.

தமீம் இக்பால் எடுத்த டெஸ்ட் அதிகபட்ச ஓட்டமான 206 ஓட்டங் களை பாகிஸ்தானுக்கு எதிராக குல்னா வில் 2015ஆம் ஆண்டு எடுத்தார். இதே போட்டியில் இம்ருல் கயேஸீடன் இணைந்து 312 ஓட்டங்களை முதல் விக்கெட் டுக்காக சேர்த்தனர். இது 2ஆவது இன்னிங்ஸில் எந்த அணியும் எடுக்காத உலக சாதனை தொடக் கக் கூட்டணி ஓட்டங்களாகும். 451 சந்தர்ப் பங்களில் 450 முறை தொடக்க வீரராகவே களமிறங்கியுள்ளார் தமீம் இக்பால், இது ஒரு தனித்துவ சாதனையாகும்.

---

குழுவை தீர்மானிக்கும் போட்டி

# இலங்கை - நெதர்லாந்து இன்று மோதுகின்றன!

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக ஹராரேயில் வெள்ளிக்கிழமை நடை பெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் சுற் றின் கடைசி சுப்பர் 6 போட்டியில் 8 விக்கெட்களால் இலங்கை அமோக வெற்றியீட்டியது.

மஹீஷ் தீக்னவின் 4 விக்கெட் குவி யல், ஆரம்ப வீரர்களான பெத்தும் நிஷங்க குவித்த சதம், திமுத் கருணா ரட்னவின் அரைச் சதம் என்பன இலங் கையின் வெற்றியை சுலபப்படுத்தின.

இதன் மூலம் தாகுதிகாண் சுற்றில முதல் சுற்று மற்றும் சுப்பர் 6 சுற்றில் 7ஆவது தொடர்ச்சியான வெற்றியை ஈட்டி தோல்வி அடையாத ஒரே ஒரு அணியாக, இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதியாளர் 1 மற்றும் தகுதியாளர் 2 அணிகளைத் தீர்மானிக் கும் இறுதிப் போட்டியில் நெதர்லாந்தை இலங்கை எதிர்த்தாடவுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியினர் பங்குபற்றவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான உலகக் கிண்ண தகுதிகாண் சுப்பர் 6 போட்டியில் தனஞ்சய டி சில்வா, வனிந்து ஹசரங்க ஆகிய இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டு துஷான் ஹேமன்தவும் சஹான் ஆராச்சிகேயும் இலங்கை அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

சஹான் ஆராச்சிகே இந்தப் போட்டி மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் அறிமுகமானார். மேற்கிந்தியத் தீவுகளினால் நிர்ணயிக்கப்பட்ட 244 ஓட்டங்களை வெற்றி இலக்ககாகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை 44.2 ஓவர்களில் 2 விக்கெட் களை இழந்து குறிப்பிட்ட வெற்றி இலக்கை அடைந்தது.

பதும் நிஷங்க, திமுத் கருணாரட்ன ஆகிய இருவரும் ஆரம்ப விக்கெட்டில் 190 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ஆனால், இருவரும் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர்.

பெத்தும் நிஸ்ஸன்க தனது இரண் டாவது தொடர்ச்சியான சதத்தைக் குவித்து அசத்தினார். 113 பந்துகளை எதிர்கொண்ட பதும் நிஷங்க 14 பவுண் டறிகளுடன் 104 ஓட்டங்களைக் குவித்தார். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவர் பெற்ற 3ஆவது சதம் இதுவாகும்.

அவருக்கு பக்கபலமாகத் துடுப் பெடுத்தாடிய திமுத் கருணாரட்ன நிதா னத்துடன் துடுப்பெடுத்தாடி 7 பவுண்டறிகளுடன் 83 ஓட்டங்களைப் பெற்றார். அவர்கள் இருவரை தொடர்ந்து குசல் மெண்டிஸ் ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டங்களையும் சதீர சமரவிக்ரம ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்று வெற்றி இலக்கை அடைய உதவினர். அவர்கள் இருவரும் பிரிக்கப்படாத 3ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் 48.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் இலங் கைக்கு எதிராக 200 ஓட்டங்க ளைக் கடந்த முதலாவது அணி என்ற பெரு மையை மேற்கிந்தியத் தீவுகள் பெற்றுக்கொண்டது.

மத்திய வரிசை வீரர் கியசி கார்ட்டி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி அரைச் சதம் குவித்ததன் பலனாகவே மேற்கிந்தியத் தீவுகள் கௌரவமான மொத்த எண்ணிக்கையைப் பெற்றது.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் முன்வரிசை வீரர்கள் எதிர் பார்த்தளவு பிரகாசிக்கவில்லை. 35ஆவது ஓவரில் மேற்கிந்தியத் தீவுக ளின் 8ஆவது விக்கெட் வீழ்த்தப்பட்ட போது அதன் மொத்த எண்ணிக்கை 155 ஓட்டங்களாக இருந்தது. இதன் காரண மாக மேற்கிந்தியத் தீவுகளையும் 200 ஓட்டங்களுக்குள் இலங்கை கட்டுப்படுத் தும் என கருதப்பட்டது.

ஆனால், கியசி கார்ட்டி, கெவின்



சின்கிளயா ஆகிய இருவரும் 9ஆவது விக்கெட்டில் 63 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கை 200 ஓட் டங்களைக் கடக்க உதவினர். முன்னதாக கய்ல் மேயர்ஸூடன் 6ஆவது விக்கெட் டில் 41 ஓட்டங்களை கியசி கார்ட்டி பகிர்ந்திருந்தார். அதுவே அணியின் இரண்டாவது சிறந்த இணைப்பாட்ட மாக அமைந்தது. மொத்த எண்ணிக்கை 62 ஓட்டங்களாக இருந்தபோது 6ஆம் இலக்க வீரராக களம் புகுந்த கியசி கார்ட்டி 6 பவுண் டறிகள், ஒரு சிக்ஸூ டன் 87 ஓட்டங்க ளைப் பெற்று கடைசி யாக ஆட்டம் இழந்தார்.

அவரைவிட ஆரம்ப வீரர் ஜோன்சன் சார்ள்ஸ் (39), பின்வரிசை வீரர்களான ரொமாரியோ ஷெப்பர்ட் (26), கெவின் சின்க்ளயா (25) ஆகிய மூவரே 25 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்க ளைப் பெற்றனர். இலங்கையால் பயன் படுத்தப்பட்ட 6 பந்துவீச்சாளர் களும் குறைந்தது ஒரு விக்கெட்டை வீழ்த்தி னர். அவர்களில் மஹீஷ் தீக்ஷன 34 ஓட் டங்களுக்கு 4 விக்கெட்களை வீழ்த்தியது டன் துஷான் ஹேமன்த 49 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# ஒட்டுசுட்டான் வனப்பகுதியில் தொடரும் சட்ட விரோத கருங்கல் அகழ்வுப் பணிகள்

**சண்முகம் தவசீலன்**



ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக கருங்கல் அகழ்வுப் பணிகள் சட்ட விரோதமாக இடம்பெற்று வருவதால் பாரிய சுற்றுச்சூழல் சீர்கேடு கள் ஏற்பட வாய்ப்புள்ளது என அப்பகுதி மக்கள் தொடர்ந்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழி வாய் என்று இயற்கை உரக்கப் போதித்தாலும், நாங்கள் செவிமடுப்பதாக இல்லை. நாங்களே இயற்கையை ஆளப் பிறந்தவர்கள் என்ற மமதையில் இயற்கையை தொடர்ந்தும் அடிமைப்படுத்துகிறோம்.

நிலத்துக்கு நீரை பருக்கும் வாய்களான குளங்களை இறுக்கி மூடியும், வெள்ள வாய்க்கால்களை கூட விட்டு வைக்காமல் கம்பள வீதிகளாக்கியும், சதுப்பு நிலங்களை குடியிருப்புகளாக்கியும் இயற்கையை எமக்கு ஏற்ற வகையில் கட்டமைத்து வருகிறோம்.

தற்போதைய மனிதனை விட புத்திக்கூர்மையுள்ள மனிதன் பரிணாம வளர்ச்சியின்போது எதிர்காலத்தில் தோன்றினாலும், அவனாலும் கூட இயற்கையை ஒருபோதும் வெல்ல முடியாது.

இன்றைய சூழலில் இயற்கையை அழிப்பதற்கு பலர் முண்டியடிக்கின்றனர். மாறாக, இயற்கையை பாதுகாப்பதற்காக சட்டம் சார்ந்தவர்களோ மக்களோ முன்வரவில்லை என்பதே இயற்கையை நேசிக்கின்ற பலரின் குற்றச்சாட்டாக காணப்படுகிறது.

குறித்த மாவட்டத்தை பொறுத்தவரையில், கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு, மணல் அகழ்வு, காடழிப்பு என பல்வேறு வழிகளில் இயற்கை வளங்கள் அழிக்கப் படுகின்றன. அபிவிருத்தி என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாததாக இருப்பினும், இந்த அபிவிருத்தி பணிகளுக்காக முறைகேடாக இடம்பெறும் இயற்கை வள சுரண்டல்கள் மக்களை பாரிய இயற்கை அனர்த்தங்களுக்குள் கொண்டு செல்லும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இவ்வாறாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட் டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட் டான் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக வகைதொகை யின்றி இடம்பெறும் கருங்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக பாரிய சூழல் பிரச்சினைக்கு அப்பகுதி மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

அப்பகுதியில் இடம்பெறுகின்ற கருங்கல் அகழ்வி னால் பாரியளவில் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், பாரியளவில் காடுகளும் அழிக்கப்படுகின்றன. அதேவேளை, குறிப்பிட்ட இடத்தில் உரிய நிபந்தனை களை மீறி, வெடி மருந்துகள் பிரயோகிக்கப்படுவதால் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்களால் அருகில் உள்ள வீடுகளில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் பாதிக்கப்படுகின்ற னர்.

மேலும், கருங்கல் அகழ்ந்தெடுக்கப்படும் இடத் தினை அண்டிய பகுதிகள் விவசாய கிராமங்களாக உள்ளன. இந்நிலையில், அதிக ளவான ஆழத்தில் கிடங்குகள் தோண்டப்படு வதனால் அப்பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் வற்றிப்போகின்றன. இதனால் மக்கள் கடுமை யான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளோடு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், வனவள பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்கள், திணைக் களங்கள் தொடர்புகொண்டிருக்கின் றன. இவற்றோடு தொடர்புடைய அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டு நாட்களை கடத்துகின்றனரே ஒழிய, கருங்கல் அகழ்வினால் மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய, பிர சித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்-தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள வாவெட்டி மலை இந்த கருங்கல் அகழ்வினால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொல்பொருள் வலய0மாக காணப்படும் இந்த மலை யில் பாரியளவில் கருங்கல் அகழ்வு இடம்பெறுகின்றன.

தமிழர்களின் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை அண்மித்த பிரதேசத்தில் கருங்கல் அகழ்வுப் பணிகள் இடம்பெறுவது தெரிந்தும், கருங்கல் அகழ்வுப் பணிகளால் தொல்பொருள் சான்றுகளுக்கும் பாதிப்பு கள் ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுவதை அறிந் தும் தொல்பொருள் திணைக்களத்தினரும் கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளை கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். குறிப்பாக, கருங்கல் அகழ்வு தொடர்பில் அபிவிருத்தி குழு கூட்டங்களில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வந்தாலும், இதற்கு இன்று வரை தீர்வுகள் எட்டப்படவில்லை.

இக்கருங்கல் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் அதனை சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாரியதொரு பிரச்சினை நேரக்கூடும். எனவே, ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெறும் கருங் கல் அகழ்வு விடயத்தில் உரிய அதிகாரிகள் தலையிட்டு, இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பது அப்பிரதேச மக்களின் கோரிக்கையாக உள்ளது.

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எஸ்.பீற்றர்போல், இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்ற வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந் திர மோடிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு கடிதம் ஒன்றை இந்த வார இறுதிக்குள் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்றும் தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளுடனும் கூட்டிணைந்து அனுப்பவுள்ளதாகவும் செய்தி வெளியாகியிருந்ததே. ஒரு கடிதம் அனுப்புவ தற்கும் ஏன் இவ்வளவு காலம் தேவைப்படுகின்றது இவர்களுக்கு?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு... அவர்கள் கடிதமனுப்புவது என்று முடிவெடுத்தது குறித்தே நீங்கள் சந்தோசப்பட வேண்டும். அண்மையில் லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்குவைத்து தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரைவாசித்துாரத்தை அடைந்துவிட்ட தாக கூறியிருந்தார். அவர் இதனைக் கூறியது கனடா வின் முன்னாள் பிரதமரிடம். ஆனால் அதனைக் கண் டித்து இங்குள்ள தமிழ்பத்திரிகைளுக்கு அறிக்கை வெளி யிட்டதோடு நமது தலைவர்கள் அமைதியாகிவிட்டார் கள். சிலவேளை ரணில் சொன்னது சரியோ என்று எண்ணத்தோன்றியது. இப்போது ரணில் ஜனாதி பதியான பின்னர் இந்தியாவிற்கு முதல்தடவையாக செல்லவிருக்கிறார். அவர் மோடியைச் சந்திப்பதற்கு முன்னர் நமது தலைவர்கள் கடிதம் எழுதவிருக்கி றார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கடிதம் எழுதுவதென்றால் சாதாரண விடயமா? ஒவ்வொரு வரும் தத்தம் மேதாவித்தனங்களை கடிதத்தில் புகுத்த வேண்டும் என்று அடம்பிடிப்பார்கள். கடைசியில் ரணில் அங்கு போவதற்கு முதல்நாளாவது அனுப்புகி றார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

---

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பௌத்த - சிங்கள கடும்போக்குவாதிகள் படையெடுத்துள்ளனர் என்றும் அவர்கள் அந்த மாவட்டத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களைச் சந்தித்துள்ளதுடன் சர்ச்சைக்குரிய குருந்துார் மலைக்கும் சென்றுவருகின்றனர் என்றும் ஒரு செய்தி பார்த்தேன். அது என்ன அவர்களுக்கு திடீர் என்று முல்லைத்தீவு மீது திடீர் மோகம் வந்திருக் கின்றது?

**வியுக்தியார்:** அவர்கள் வன்னியில் இருந்து ஒருவரையாவது சிங்கள எம்.பி.யாக பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்று வேலைசெய்கிறார்கள். நமது தலைவர்கள் நமக்கு சமஷ்டியைப் பெற்றுத்தருகின்ற போது கிழக்கு மாகாணம் போல வடக்கும் வந்துவிடும்போலத்தான் இருக்கின்றது. இருக்கின்ற மாகாணசபைகளின் மூலம் இதுபோன்ற அத்துமீறல்களை முற்றாக தடக்க முடியாவிட்டாலும் குறைக்கவாவது முடியும் என்றால் அதனை செய்யவும் நமது தலைவர்கள் தயாராக இல்லாதபோது நாம் என்னதான் செய்யமுடியும்,?

---

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்**

**கேள்வி:** மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக் கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படும் என புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்திருக்கிறாரே. இனிமேல் இந்து ஆலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படாது என்று நம்ப லாமா?

**வியுக்தியார்:** மத நல்லிணக்கம் என்று அவர் சொல்வது என்ன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இலங்கையிலுள்ள சட்டங்கள் எல்லாமே நாடு முழுவதும் ஒரே மாதிரி அமுல்படுத்தப் படுகின்றது என்று நீங்கள் நம்புவதுபோல அல்லவா இருக்கின்றது?. பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் தலைவர், சில வாரங்களிலேயே பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டார்.. ஆனால் அதே சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக ஏன் பல தசாப்தங்களாக சிறையில் வாடுகிறார்கள் தமிழ் இளைஞர்கள். சட்டம் எப்போது நமது நாட்டில் ஒரேமாதிரி செயற்பட்டிருக்கின்றது. அவர்கள் பௌத்த மதத்திற்கு குந்தகம் செய்பவர்களை 'உள்ளே தள்ள" புதிய சட்டம் கொண்டுவரப்போகிறார்களோ தெரியவில்லை.

---

**போல் சத்திதாசன், அச்சுவேலி, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வன்னியில் உள்ள அரச காணி, தனியார் நிறுவனமொன்றுக்கு பணப்பயிரை பயிரிடுவதற்கு வழங்கப்படவுள்ளதாகவும் இது அப்பகுதி தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனவும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பிருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளாரே. அது என்ன பணப்பயிர். நாமும் அதனை பயிரிட்டால் பணம் வரும் என்றால் நல்லதுதானே?

**வியுக்தியார்:** வவுனியாவில் ரொலோ கட்சியின் ஏற்பாட்டில் சீனித் தொழிற்சலை என்று வரவிருப்பது பற்றியே பலரும் இப்போது பேசிவருகின்றனர். சீனித் தொழிற்சாலை வந்தால் அதற்கு சீனி தயாரிக்க கரும்பு தேவை. அதனை பயிரிட அரசாங்கம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு காணி வழங்கவிருக்கின்றது என்று கூறப்படுகின்றது. கரும்பு பயிரிட நீர்வளம் அதிகமாகத் தேவைப்படும் என்பதால், அது ஏற்கனவே நீர் பிரச்சினையில் இருக்கும் வடக்கு மாகாணத்திற்கு பொருத்தமான பயிர் அல்ல என்று, கடந்த மாகாணசபை ஆட்சிக்காலத்தில் இதுபோன்ற ஒரு திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.
இப்போது ஆளுனர் ஆட்சியில் இருக்கும் மாகாணத்தில் அதுபோன்ற ஒரு திட்டத்தை கொண்டுவர முயற்சி நடக்கின்றது. இதற்காகத்தான் மாகாணசபைகளை தற்காலிக தீர்வாக ஆவது நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிலர் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் இந்த சீனித் தொழிற்சாலையை வன்னி மக்களும் வன்னி அரசியல்வாதிகளும் விரும்பவில்லை என்றால் அதனை இங்கு கொண்டுவரமாட்டேன் என்று ரெலோ செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் அறிவித்து விட்டரே. சிலவேளை யாழ்ப்பாணத்து அரசியில்வாதிகள் மட்டும் எதிர்ப்பதால் அவர் இந்த திட்டத்தை கொண்டு வருவாரோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

# எரிந்த சிறகுகள்

சாந்தினி வரதராஜன்

முகில்களின் கைகளும் கால்களும் நீண்டு படர்ந்து கறுக்கத் தொடங்கின. அம்மாவின் முகமும் அது போலவே. எடி. பிள்ளை இந்த தேங்காய் மட்டைகளை எடுத்து அடுக்கு. இந்த சனியன் பிடிச்ச மழை எப்ப வரும் எப்ப போகும் எண்டும் தெரியாது. இந்த அம்மாவுக்கு மழையை திட்டத்தான் தெரியும். பாவம் மழை. முந்தி நாங்கள் சிலேற் காயவேணும் எண்டாலும் மழை போ வெய்யில் வா எண்டுதானே பாடுறனாங்கள்.

நான் கத்துறது உனக்கு கேக்கேல்லையே?

இதை எங்க அடுக்கினாலும் நனையத் தானே போகுது. அதைவிட இதிலேயே கிடந்து நனையட்டும்.

உனக்கு நல்லா வாய் கூடிப்போயிற்றுது. எல்லாம் உன்ரை அப்பா தர்ற செல்லம்.

சே இந்த அம்மாவுக்கு ரசனையே இல்லை. எப்ப பார்த்தாலும் மழையை பேசிக்கொண்டே இருப்பா. பிறகு தண்ணி இல்லையெண்டும் அழுது கொண்டு இருப்பா. மழையைக் கண்டா மரம், செடி, கொடி எல்லாம் மகிழும். இந்த மண்ணும் மழையை சேர்த்து வைத்துக்கொண்டு எனக்காகக் காத்திருக்கும். நானும் என்ரை சொந்தக் கிணற்றில் சுகந்தி, ராகினி, கமலா மாதிரி அள்ளி அள்ளிக் குடிப்பன், குளிப்பன். தண்ணி எண்டு கேட்டு வாறா எல்லாரையும் நீங்களே அள்ளிக்கொண்டு போங்கோ எண்டுதான் சொல்லுவன். அவையள் என்னைக் கண்டா வேணுமெண்டு தங்கட துலாவில் தொங்கி தொங்கி அள்ளுவினம். எனக்கும் ஆசையாக இருக்கும் நானும் எப்பவாவது ஒரு நாள் அவையள் மாதிரி துலாவில் தொங்கி தொங்கி அள்ளவேணும். நான் பார்க்கிறது தெரிஞ்சா இன்னும் கொஞ்சம் கூட தொங்குவினம். ஒரு நாளைக்கு இந்த கயிற்றை தொட்டுப் பார்க்கவேணுமெண்டு ஆசை துளிர் விடும். ஆனால் சரஸ்வதி பூஜை அன்று நடந்ததை நினைச்சா துளிர்த்த வேகத்தில் கருகி விழும்.

பாவம் சிவராசா நானும் அமுதாவும் தான் கேட்டனாங்கள். எங்களாலதானே அவன் இப்ப பள்ளிக்கூடத்துக்கு வாறதே இல்லை. அதுக்கு பிறகு இந்த துலாவைப் பார்க்கிற நேரமெல்லாம் ஆறுமுக வாத்தியரின்ட கோப முகமும் சிவராசாவின்ர சிவந்த முகமும் தான் ஞாபத்தில வரும். மனுசரின்ர தோற்றத்துக்கும் அவையளுக்கும் சம்பந்தமே இருக்காதெண்டு வாத்தியரைப் பார்த்துதான் எனக்கு தெரிஞ்சது. ஏன் என்ரை அப்பாவையும் தான். ஊத்தை துரை எண்டுதானே என்ரை அப்பாவை எல்லாரும் கூப்பிடுவினம். அதுக்குள்ள இருக்கிற வெள்ளை மனசை ஆருக்கும் தெரியாது. ஆனா எனக்கு மட்டும் இல்லை என்ரை அம்மாளாச்சிக்கும் தெரியும்.

அண்டைக்கெண்டு பார்த்து கிணத்தில் தண்ணி எடுத்து தர ஆரும் இல்லை. அப்பவும் ஆறுமுக வாத்தியார் சொல்லுவார்.

எடி பெடிச்சியள் வாளியில முட்டாமல் குடியுங்கோ.

இவர் டாப்பு கூப்பிடேக்க மட்டும் தான் எங்கட பெயரை சொல்லுவார். அண்டைக்கும் இப்பிடித் தான் தேவிகா எண்டு கூப்பிட்டுட்டு,

ஏனடி உன்ரை கொப்பர் நல்லா படம் பார்ப்பாரோ?

ஏன் இப்பிடி கேட்கிறார் எனக்கு அன்று விளங்கவே இல்லை. ஆனா வகுப்பில எல்லாரும் சிரிச்சவை. அதிலேயும் சுகந்தியின்ரை சிரிப்பு தனிச்சு கேட்டுது. ஆனா நான் அமுததைப் பார்த்து அமுதாவும் அமுதவள். வாத்தியாருக்கு வெக்கையா இருந்தா பிள்ளையள் வாங்கோ இன்டைக்கு மா மரத்துக்கு கீழ இருந்து படிப்பம் எண்டு சொல்லி விட்டு என்னையும் அமுதாவையும்தான் அவரின்ர கதிரையை தூக்கிக்கொண்டு வரச் சொல்லுவார். பிறகு மகாபாரதக் கதை சொல்லுவார். அவர் கதை சொல்லேக்க எனக்கு வாத்தியார் சகுனி மாதிரி, துரியோதனன் மாதிரித்தான் தெரிவார். ஆனா இதே கதையை வைகுந்தசாமி வாத்தியார் சொல்லேக்க அவர் கர்ணன் மாதிரி, தருமன் மாதிரி இருப்பார். அவர் தான் இந்த பள்ளிக்கூடத்துக்கு அதிபர். எங்களைப் பெயர் சொல்லித்தான் கூப்பிடுவார். சில நேரத்தில இங் முடிஞ்சு போயிற்றா தன்ரை பேனாவை தருவார். இப்ப அவரின்ர இடத்தில எனக்கு பிடிக்காத இவர். உண்மையான அதிபர் எப்ப வருவார்? எனக்குள் இக்கேள்வி எழுந்து கொண்டே இருக்கும்.

வகுப்பு தொடங்கி விட்டதுக்கு அடையாளமா ஆறுமுக வாத்தியார் நமச்சிவாய பதிகம் சொல்லத் தொடங்கிவிடுவார். எல்லாரும் கத்தி கத்தி பாடுவினம். ஆனா எனக்கு அந்த பாட்டு பாடவே பிடிக்காது. இது செத்த ஆட்களுக்கு படிக்கிற தேவாரம் எண்டு பயம். ஆனா அவர் பாடேக்க எத்தனை பிறப்புக்கு பிறகு கிடைச்ச பிறப்பு இந்த மனுச பிறப்பு என்று மனதுக்க எண்ணிக்கொண்டே இருப்பன். அவரும் கண்ணை மூடிக்கொண்டு எல்லோரும் ஏற்க்க பணிந்து என்று சொல்லேக்க நல்லவர் மாதிரித்தான் தெரிவார். வாத்தியாரின்ர வெள்ளை வேஷ்டியும், நஷனலும், கழுத்தை சுற்றி பாம்பு மாதிரி இருக்கிற சால்வையும். அந்த சால்வை மடிப்பு விரிஞ்சா நாக பாம்பு படம் விரிச்ச மாதிரி இருக்கும். அதை தொட்டு பார்க்க வேணும் எண்டு எனக்கு ஆசை. ஆனா பயம். என்ரை அப்பா பாவம். அவருக்கும் இப்பிடி போட்டா எப்பிடி இருக்கும்? அப்பாட்டை ஒரே ஒரு சாறம் தான். அதில இனி தைக்கிறதுக்கு இடமே இல்லை. அம்மா சொல்லுவா..

ஏனுங்க ஒரு சாறமேனும் வாங்கலாம்தானே?

உனக்கென்ன விசரே எனக்கு சாறம் வாங்கிற காசில என்ரை பிள்ளைக்கு சட்டை துணி எடுத்திடுவன். எனக்கென்னத்துக்கு பிள்ளை. இந்தா தீபாவளி வருகுது. அதுக்கு ஆரும் பலகாரம் தரேக்க கோடித் துணியும் தருவினம் தானே. தாற எண்டு தான் சொன்னவை.

அப்பா தீபாவளியை எதிர்பார்த்து ஏமாந்து போவார். பிறகு சரி சரி தைப் பொங்கலுக்கு தருவினம். இப்பிடியே எல்லாம் வரும் போகும். ஆனா அப்பாவை விட்டு அந்த கிளிஞ்ச சாறம் மட்டும் போகாது.

என்ரை கவலையை மகிழ்வை எல்லாம் நான் முற்றவெளி மீனாட்சி அம்மனிடம் தான் சொல்லுவன். மதியம் ஆரும் இருக்க மாட்டினம். அவவின்ரை ஆலமர வேரில் இருந்து கொண்டு நான் கவலையை சொல்லி அழேக்க அவவும் அழுவா. நான் சிரிச்சா அவவும் சிரிப்பா. பிறகு அங்கை விழுந்து கிடக்கிற அரளி பூக்களை எடுத்து அவவின்ரை வாசலில வைப்பன். அம்மாளாச்சி உன்ரை கிணத்திலையும் தண்ணி அள்ள என்னை ஆரும் விடுகினம் இல்லை. நீ அவைக்கு சொல்லலாம்தானே. நீ சொன்னா கேட்பினம். அவை உனக்கு சரியான பயம். நீ கனவில வந்து சொன்னபடியால தானே உனக்கு கோயில் கட்டினவையாம். சித்திரா பவுர்ணமி அன்று மாத்திரம் எங்களுக்கு சில சலுகைகள் தருவினம். அம்மா சொல்லுறவா அது அம்மாளாச்சிக்கு பயந்து தான் விடுகினம். அண்டைக்கு என்ரை அம்மாளாச்சி என்னை பார்த்து பார்த்து சிரிப்பா, பின்னேரம் வீதிவலம் வரத் தொடங்கினா எண்டா விடியத்தான் இருப்பிடத்துக்கு வருவா. நாங்களும் அவவுக்கு பின்னால் போவம். நல்ல சாப்பாடெல்லாம் கிடைக்கும். சுகந்தி, ராகினி, கமலா எல்லாரின்ர வீட்டி லையும் மண்டபடி நடக்கும். நான் அப்பாட்டைசொல்லி யிருவன்.

அங்கை மாத்திரம் சுண்டல் அவல் வாங்கக் கூடாது.

ஏன் பிள்ளை வாங்கக் கூடாது?

அது வாங்கக் கூடாது எண்டா வாங்கக் கூடாது தான்.

சுகந்தி கண்கொத்தி பாம்பு மாதிரி அவ்வளவு சனத்துக்கையும் என்னை துலாவுவாள். நான் அம்மனின்ரை சக்கரத்துக்கு பின்னால ஒழிஞ்சிடுவன். நல்லா தேடட்டும் எண்டு ஒழிச்சிருப்பன். பிறகு கேட்பாள்,

ஏனடி நீ அண்டைக்கு வரேல்லை?

எங்க? எண்டு நானும் தெரியாத மாதிரி கேட்பன். அவள் என்னை ஒரு மாதிரி பார்த்திட்டு போவாள். இவை மூன்று பேரிலையும் இவள்தான் பொல்லா ணதவள் எண்டு அமுதா சொல்லிறது சரி. என்னை கண்டா காணும் மூக்கை பிடிச்சுக் கொண்டு.

எடியே நீ உன்ரை அப்பாட்டை சொல்லு நாங்கள் பள்ளிக்கூடம் வரேக்க அந்த வண்டில தள்ளிக் கொண்டு வரவேண்டாம் எண்டு. சீக் ஒரே நாத்தம். ஏனடி உனக்கு உன்ரை அப்பாவில அரியண்டம் இல்லையே? எங்கட கோடிக்குள்ளால் உன்ரை அப்பா வந்து போனால மணக்கும் எண்டு சொல்லி முகத்தை கோணலாக்கி சிரிப்பாள். நான் அப்பாட்டை போய் அழுவன்.

அப்பா சொல்லுவார், இந்த ஊத்தை துரை இல்லாட்டி அவையளின்ரை வீடு மணக்கத் தொடங்கிவிடும். சரி சரி விடம்மா அது சின்னப் பிள்ளைதானே.

இல்லை அவள் சின்னப் பிள்ளை இல்லை. இந்த அப்பாவுக்கு அவளைப் பற்றி ஒண்டும் தெரியாது. அப்பாவுக்கு எல்லாரும் நல்லவை. வைகுந்தசாமி வாத்தியார் சொன்னவர். ஒரு நாள் துரோணர் தருமனிட்டையும் துரியோதனட்டையும் சொன்னாராம், இந்த உலகத்தில எவ்வளவு நல்ல மனுசர் கெட்ட மனுசர் இருக்கினம் எண்டு கணக்கெடுத்திட்டு வாங்கோ என்றாராம். துரியோதனுக்கு எல்லாரும் கெட்டவர்களாகவே தெரிஞ்சுதாம். தருமனுக்கு எல்லாரும் நல்லவர்களா தெரிஞ்சுதாம். அதுக்கு துரோணர் சொன்னாராம். எல்லாம் அவரவர் மனசை பொறுத்தது எண்டு சொல்லிற்று என்னை பார்த்து சிரிச்சவர். அவரும் அம்மாளாச்சி மாதிரித்தான் சிரிப்பார். அவர் வருத்தம் மாறி வந்த உடனே எங்களை கேட்டவர்,

எப்பிடி பிள்ளையள் படிக்கிறீங்களோ? கவன படிக்கவேணும் என்ன.

எனக்கும் அமுதாவுக்கும் சரியான சந்தோஷம். நாங்கள் அவருக்காக அம்மாளாச்சியிற்றை நேர்த்தி வைச்சதையும் ஆரும் இல்லாத நேரத்தில கோயிலை சுற்றி அடிஅளிச்சதையும் சொல்ல வேணும் போல இருந்தது.

என்ன பிள்ளையள் சிரிக்கிறியள்? எண்டு தலையை தடவிவிட்டவர். நானும் அமுதாவும் அமுதிட்டம். அவர் சிரிச்சுக்கொண்டு சின்னக் குழந்தைகள் தேவதைகள் அவை சிரிக்கவேணும் அழக்கூடாது. அவர் வந்தாப்பிறகு பள்ளிக்கூட தோட்டப்பூக்கள் எல்லாம் பூத்து சிரிச்சது. அதால வில்லூன்றி சுடலைக்கு போறவையை பார்த்து எனக்கும் அமுதாவுக்கும் பயமே வரேல்லை. ஆனா ஆறுமுக வாத்தியார் மட்டும் இன்னும் கோபமா உலாவினார். அவரை பார்த்தா எனக்கு பகடைக்காய் இழந்த சகுனி போல இருந்தார். ஆனாலும் அவர் சூரன் சாகேல்ல உருவம் மட்டும்தான் மாறியிருக்கு எண்ட மாதிரித்தான் எங்களை பார்த்தார்.

(17ஆம் பக்கம் பார்க்க)



# கொசோவோவில் தொடரும் அல்பேனிய - செர்பிய முரண்பாடு

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதம்!

கொசோவோ சுதந்திரம் அறிவித்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, கொசோவோவின் வடக்கு எல்லையில் உள்ள 90,000 சிறுபான்மை செர்பியர்கள் கொசோவோ அரச கட்டுமானங்களை அங்கீகரிக்க மறுக்கின்றனர். இன்னமும் செர்பியாவின் பட்ஜெட்டில் இருந்து மட்டுமே ஊதியம் மற்றும் சலுகைகளைப் பெறுகின்றனர்.

இந்த வருட ஏப்ரல் தேர்தலுக்குப் பிறகு வடக்கு கொசோவோவின் செர்பியப் பெரும்பான்மை பகுதியில் அல்பேனிய இன மேயர்கள் பதவியேற்றதில் இருந்து அப்பகுதியில் அமைதியின்மை தீவிரமடைந்துள்ளது. இதன் போது செர்பியர்கள் புறக்கணிக்கப்பட்டது மட்டுமின்றி, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் கண்டிக்க வழிவகுத்தது.

மேற்கு பால்கனில் உறுதியற்ற தன்மையைத் தூண்டும் நீடித்த நிலைப்பாடு இன்னமும் தொடர்கிறது.

பெப். 17, 2008 இல், அல்பேனிய-பெரும்பான்மை கொண்ட கொசோவோவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அது 100க்கும் மேற்பட்ட அமெரிக்க சார்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது.

இருப்பினும், செர்பியா, கொசோவோவை அதன் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இன்னும் முறையாகக் கருதுகிறது. அதேவேளை கொசோவோவில் வாழும் சிறுபான்மை செர்பியர்களின் உரிமைகளை நசுக்குவதாக செர்பிய அரசு நீண்ட காலமாக குற்றம் சாட்டியுள்ளது.

கொசோவோவின் 1.8 மில்லியன் மக்களில் 5




வீதமானவர்கள் செர்பியர்கள் மற்றும் 90வீத இனம் அல்பேனியர்கள். வடக்கு கொசோவோவில் உள்ள செர்பியர்கள் தங்கள் சுயநிர்ணயத்தை தொடர்ந்தும் வெளிப்படுத்துகிறார்கள்.

**நேட்டோ ஆதரவில் கொசோவோ**

கொசோவோ பிரிந்தபோது அதை பல நேட்டோ நாடுகள் ஆதரித்திருந்தன. அதன் பிரிவினையானது எதிர்காலத்தில் உலகின் மற்ற பகுதிகளுக்கான முன்னுதாரணமாக ஆகாது என்று அந்த நாடுகள் அப்போது கூறின.

அதிலும் குறிப்பாக, பிரிவினை இயக்கங்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு இது ஒரு கடினமான பிரச்சினையாக எழுந்தது. அந்த காரணத்தால்தான் ஸ்பெயின் நாடானது, மற்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ நாடுகளின் நிலையிலிருந்து விலகி கொசோவோவின் சுதந்திர பிரகடனத்தை ஏற்க முடியாது என்று அறிவித்தது.

**ஒசெட்டியா -அப்காசியா நாடுகள் உருவாக்கம்**

ஆனால் கொசோவோவின் பிரிவினை நிலைப்பாட்டை ரஷ்யா ஒருபோதும் ஏற்கவில்லை. இக்காலத்திலேயே 2008 ஆம் ஆண்டு ரஷ்ய படைகள் ஜியார்ஜியாவுக்குள் சென்றன. இதன் விளைவாக, தென் ஒசெட்டியா மற்றும் அப்காசியா ஆகிய இரண்டு குட்டி நாடுகள் உருவாக வழிபிறந்தது. ஆனால் இந்த இரு நாடுகளையும் இதுவரை வெகுசில நாடுகள் தான் அங்கீகரித்துள்ளன.

செர்பியாவைப் பொறுத்தவரை கொசோவோ மீதான தனது அழுத்தத்தை வலியுறுத்துவதைவிட, ஐரோப்பிய ஒன்றியத்துடனான தனது உறவுகளை மேம்படுத்துவது எப்படி என்பது தான் அதன் முக்கிய கவலையாக தற்போது இருக்கின்றது.

**கொசோவோ போரில் போர்க்குற்றங்கள்**

கொசோவோ போரின் போது, 90,000க்கும் மேற்பட்ட செர்பிய மற்றும் அல்பேனியரல்லாத பிற அகதிகள் போரினால் பாதிக்கப்பட்டு மாகாணத்தை விட்டு



வெளியேறினர். யூகோஸ்லாவிய இராணுவம் பின்வாங்கிய நாட்களில், 164,000 க்கும் மேற்பட்ட செர்பியர்கள் (சுமார் 75வீதம்) மற்றும் 24,000 ரோமாக்கள் (சுமார் 85 வீதம்) கொசோவோவை விட்டு வெளியேறினர் மற்றும் மீதமுள்ள பொதுமக்கள் பலர் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகினர் என்பதும் உண்மையே.

**அல்பேனிய - செர்பிய பின்னணி**

அல்பேனிய-செர்பிய மோதலின் ஆரம்பம் 1877-1878 இல் உருவாகியது. கொசோவோவில் குடியேறிய செர்பியர்களின் மீது 1876 மற்றும் 1878 க்கு இடையில் பல படுகொலைகள் தாக்குதல்கள் நடந்தன.

1998-99 இல் கொசோவோவில் அல்பேனியர்கள் செர்பியர்களின் யூகோஸ்லாவியா அரசாங்கத்துடன் போரிட்டபோது கொசோவோ மோதல் பாரிய அளவில் ஏற்பட்டது. இந்த மோதல் பரவலான சர்வதேச கவனத்தைப் பெற்றது. பின்னர் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) தலையீட்டால் தீர்க்கப்பட்டது.

கொசோவோவில் செர்பியர்கள் படுகொலை

உண்மையான இறப்பு எண்ணிக்கை ஒருபோதும் அறியப்படாவிட்டாலும், 1998 மற்றும் 2000 க்கு இடையில் கொசோவோ போரில் குறைந்தது 2,197 செர்பியர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் 400 பேரைத் தவிர மற்ற அனைவரும் பொதுமக்கள். மோதலின் உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கை 11,000 முதல் 13,500 வரை இருந்ததாக அறியப்படுகிறது.

போரின் கொடுமையால் அதேசமயம், கொசோவோவில் இருக்கும் செர்பியர்கள் அதிகம் வாழும்பகுதிகளை கொசோவோவிலிருந்து பிரித்து செர்பியவுடன் இணைக்கவேண்டும் என்கிற கோரிக்கைகளும் எழுந்தது.

பரந்துபட்ட அளவில் பால்கன் பகுதியிலும், குறிப்பாக போஸ்னியாவிலும், தற்போதைய எல்லைகள் மாற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளின் எதிர்கால நிலைத்த தன்மை குறித்த கேள்விகளும் எழுந்துள்ளன. ஆனால் அதைபற்றி விவாதிப்பதற்கு மேற்குலக ராஜாங்க அதிகாரிகள் யாரும் தயாராக இல்லை என்பதையும் அவதானிக்க வேண்டும்.

**செர்பியர்கள் கொசோவோவை ஏன் வெறுத்தார்கள்?**

செர்பிய தேசியவாதிகள் 1389 இல் ஒட்டோமான் துருக்கியர்களுக்கு எதிரான போரை அதன் தேசியப் போராட்டத்தின் அடையாளமாகக் கருதுகின்றனர். கொசோவோவின் பெரும்பான்மை இன அல்பேனியர்கள், அவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள். கொசோவோவை தங்கள் நாடாகக் கருதுகின்றனர் மற்றும் செர்பியா ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறையைக் குற்றம் சாட்டுகின்றனர்.

கொசோவோ என்பது செர்பியாவின் தெற்கு மாகாணம், கத்தார் அளவில் உள்ளது. முதன்முதலில் இலிரியன் மற்றும் திரேசியன் பழங்குடியினர் வசித்து வந்தனர். பின்னர் ரோமானியர்களால் ஆளப்பட்டது. பின்னர் 6 ஆம் நூற்றாண்டில் ஸ்லாவ்களால் (Slavic) ஆழப்பட்டது.

**கொசோவோ எப்போது அல்பேனிய இனமாக மாறியது?**

1910 ஆம் ஆண்டில், அல்பேனிய எழுச்சி தலைநகர் பிரிஸ்டினாவிலிருந்து எல்லா இடங்களுக்கும் பரவியது. மற்றும் ஒட்டோமான் சுல்தானின் கொசோவோவில் ஜூன் 1911 இல் ஆதிக்கம் செய்யும் வரை நீடித்தது. கொசோவோவில் செர்பியர்கள் இரண்டாவது பெரிய சமூகம். சனத்தொகையின் படி 37,000 ரோமானி, 15,000 பால்கன் முஸ்லீம்கள் (அஷ்கலி, போஸ்னியாக்கள் மற்றும் கோரானி உட்பட) மற்றும் 7,000 அல்பேனிய ரல்லாத குடிமக்கள் வாழ்கின்றனர்.

1999-க்கு முந்தைய கொசோவோவின் செர்பிய மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (226,000) மத்திய செர்பியா மற்றும் மொண்டெனே குரோவுக்குத் கட்டா யப்படுத்தி தொடர்ந்து வெளி யேற்றப்பட் டனர்.

வரலாற்று ரீதியாக 2008 கொசோவோ சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து, ரஷ்யா உடனடியாக செர்பிய சார்பு நிலைப் பாட்டை எடுத்தது. மேலும் கொசோவோவின் சுதந்தி ரத்தை கடுமையாக எதிர்த்தது. ரஷ்ய அதிபர் விளாடி மிர் புடின் அதிபரானதிலிருந்து கொசோவோவின் சுதந்திரத்திற்கு எதிரான எதிர்ப்பு இருந்து வருகிறது.

ஆயினும் பின்னர் மார்ச் 2014 இல், கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை ரஷ்யா கிரிமியாவின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதற்கான ஒரு நியாயமாகப் பயன்படுத்தியது.

**செர்பியா - கொசோவோ முறுகல்:**

செர்பியா - கொசோவோ முறுகலால் எல்லைக்கு இராணுவத்தை அனுப்பியது செர்பியா. வடக்கு கொசோவோவில் உள்ள பெரும்பான்மையான செர்பிய நகரத்தில் ஒரு சிறிய குழு எதிர்ப்பாளர்களும் காவல் துறையினரும் மோதிக்கொண்டதை அடுத்து, செர்பியா தனது இராணுவத்தை அதிக எச்சரிக்கையுடன் நிறுத்தி, கொசோவோவின் எல்லைக்கு அருகில் செல்ல சில பிரிவுகளுக்கு உத்தர விட்டது.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அல்பேனிய இன

> **கொசோவோ இனப்படுகொலை என்பது கொசோவோ போரின் போது அல்பேனியர்களை செர்பியப் படைகள் படுகொலை மற்றும் இன அழிப்பு செய்தனர் என்றே உலகம் அறியும். ஆனால் கொசோவோவில் ஒடுக்கப்படும் சிறுபான்மை செர்பியரை அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்படுவதை உலகம் கண்மூடி பார்த்துக் கொண்டுள்ளது கவலைக்குரியதே**

மேயரை அவரது அலுவலகத்திற்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில், கொசோவன் நகரமான Zvecan இல் உள்ள முனிசிபல் கட்டிடங்களுக்கு முன்னால் திரண்டிருந்த செர்பியர்களைக் கலைக்க காவல்துறையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மோதலில் சுமார் 10 பேர் சிறிய காயமடைந்ததாக மருத்துவமனை அதிகாரி டானிகா ராடோமிரோவிக் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் வீசிய கையெறி குண்டுகள் மற்றும் பிற கடினமான பொருட்களால் ஐந்து அதிகாரி கள் காயமடைந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

நேட்டோ அமைதி காக்கும் பணியில் இருந்து கொசோவோவிற்கு பல வாகனங்கள் ஸ்வெக்கனின் மையத்திற்கு வந்ததாக தன்ஜெக் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. கொசோவோ காவல்துறையினர் இந்த சம்பவங்கள் குறித்து எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)



# எரிந்த சிறகுகள்....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கும் அவர் படிப்பிக்கிறதுக்கும் சம்பந்தமே இருக்காது. பாரதியார் பாட்டில் எனக்கு பிடிச்ச பாட்டு காணி நிலம் வேண்டும் பராசக்தி பாட்டை சொல்லி தரேக்க கத்தும் குயிலோசை எண்டு சொன்னவர், எனக்கு கேட்க வேணும் போல இருந்தது. குயில் கூவும் எப்பிடி கத்தும்? வாய் உன்னிக்கொண்டு இருந்தது கீழ கிடந்த பிரம்பு என்னை பார்த்து சிரிக்கிற மாதிரி இருந்ததால் வாய் தன் பாட்டில் மூடிற்று. சிலர் கையால அடிக்கவே தேவையில்லை. அதைவிட கொடுமையான அடியை வேறுவிதமாய் தருவினம். அண்டைக்கு இப்பிடித்தான் சிவராசா எங்களுக்காக துலாக்கயிறை தொட்டதுக்கு...

உங்களுக்கு தண்ணி அள்ளக் கேட்குதோ எண்டு எவ்வளவு அடி அடிச்சவர். நாங்கதான் அழுதனாங்கள். சிவராச அழவே இல்லை. அவனுக்கு அப்பிடியொரு கோபம் வந்ததை நான் பார்த்ததே இல்லை.

ஏன் மாஸ்ரர் அள்ளக் கூடாது?

கூடாது எண்டா பிறகென்ன கேள்வி.

அப்ப ஏன் சாதிகள் இல்லையடி பாப்பா எண்டு படிப்பிக்கிறீங்கள்?

எட வாத்தியார் எண்ட மரியாதை இல்லாமல் எதிர்த்தோ கதைக்கிற. உங்களுக்கு இடம் கொடுத்தா கடைசியில காகத்துக்கு இடம் கொடுத்த கொக்கின்ரை கதையாப் போயிடும் எண்டு எத்தனை அடி அடிச்சவர். எல்லாரும் பார்த்துக்கொண்டு சும்மா இருந்ததை பார்க்க. அஸ்தினாபுரத்து அநீதிகளை எல்லா கண்களும் பார்த்துக்கொண்டு இருந்தது போல விழிகள் விழித்திருக்க மனங்கள் கோழைகளாகி எங்கேயோ ஓடி ஒழிந்திருந்தது.

அம்மாளாச்சியிற்றை நான் சத்தியம் பண்ணியிருக்கிறன். எப்பிடியாவது ஒரு கிணறு வெட்டுவன். பிறகு அதில் அரளி மரம் வைச்சு மரத்தில இருந்தே பூ பிச்சு உனக்கு தருவன். ஆனா எப்பிடி வெட்டுறது? சிவராசாவும் நானும் இதை பற்றி கதைப்பம். அவனும் அவையளின்ரை அப்பாவோட கிணறு வெட்ட போறவன். அவன் சொல்லுவான்.

கிணறு வெட்டுறது நாங்கள். தண்ணி அள்ளுறது அவையள். ம் என்ன செய்யலாம். நான் வெடிவைக்கவும் பழகீட்டன். இனி கொஞ்ச காசும் மனுசரும் வேணும். உன்ரை அப்பாட்டை கேட்டா அவர் பயப்பிடுறார். எத்தனை நாளுக்கு இவையளின்ரை கை தண்ணி அள்ளுறதை நாங்க வாய் பார்த்துக் கொண்டு இருக்கிறது. இதுக்கு ஒரு முடிவு வேணும். நீதான் உன்ரை அப்பாட்டை சொல்லி உங்கட காணிக்கை வெட்ட விடவேணும். அதில நல்ல தண்ணி வரும் எனக்கு தெரியும். எல்லாருக்கும் பொதுக் கிணறா இருக்கட்டும் எண்டு சொல்லிக் கொண்டே போனான். அவனோட சேர்ந்து அம்மன் கோவில் மண்ணும் போனது. நானும் அம்மனும் பார்த்துக்கொண்டே இருந்தம்.

எவ்வளவு நேரமெண்டு ஆரும் வராயினமோ எண்டு பார்த்துக்கொண்டு இருக்கிறது. நிழல் இன்றி முற்றவெளி அந்த நீண்ட பகல் பொழுதில் தவித்துக் கொண்டிருந்தது. நானும் குடத்தோடும் தாகத்தோடும் தவித்துக்கொண்டு இருந்தன். இந்த பொழுதுகளில் தான் குளத்தின்ரை நடுவில எறிந்த கல்லு வட்டம் போட்டு அது விரிஞ்சு விரிஞ்சு பெரிசாகிற மாதிரி எனக்குள்ள புதைந்து கிடக்கிற கவலை எல்லாம் விரிஞ்சு வெடித்து வெளியில வரும். அம்மாளாச்சியிற்றை எல்லா கவலைகளையும் பகிர்ந்துகொள்வேன். அவவும் கவலையா கேட்டுக்கொண்டு இருப்பா.

மிகுதி நேரத்தில் பஞ்சு பஞ்சாய் குவிந்திருக்கும் வானத்தை பார்த்துக் கொண்டே இருப்பன். முகில்கள் முதலை போல மலை போல எல்லாம் இருக்கும். அதை அள்ளி அள்ளி விளையாடுவன். என்னோட விளையாட தேவதைகள் வருவினம். அவை என்ரை கையை பிடிச்சுக்கொண்டே விளையாடுவினம். ஒரே கோப்பையில சாப்பிடுவம். என்னை தண்ணி அள்ளி விளையாட விடுவினம். ஆரும் ஒன்றும் சொல்ல மாட்டினம்.

என்ன தண்ணி வேணுமோ? என்ற குரல் என்னை நரகத்தில் மறுபடியும் இறக்கியது.

நீங்கள் எல்லாரும் இப்ப பெரியாக்கள் ஆகிட்டீங்களாக்கும்?

என்ன கேட்கிறார் ஐயர் என்று யோசிச்சுக் கொண்டு நிற்க,

கிணறெல்லாம் வெட்டுறீங்களாம் எல்லாம் கலிகாலமா போயிற்றுது அம்மாளாச்சி.

எனக்கு ஒரே ஆச்சரியமா இருந்தது. இவருக்கு என்ன செய்யுது? அதை வெட்டுறதுக்கும் அப்பாவை சம்மதிக்க வைக்கிறதுக்கும் நானும் சிவராசவும் பட்ட பாடு எங்களுக்குதான் தெரியும். அம்மாளாச்சி என்று முற்ற வெளி காற்றை எல்லாம் ஒருமுறை இழுத்து சூறாவளியாய் வெளியே தள்ளினபடி ஆயத்த மணியை அடித்தார். இனி அம்மனை சுற்றி கூட்டம் இருக்கும். அவையள் அம்மாளாச்சியை பார்த்து அழுவினம், கதைப்பினம். என்னை கண்டா மாத்திரம் முகத்தை சுழிப்பினம். அதுக்கிடையில கெதியாய் போயிடுவம்.

ஒவ்வொரு அடியும் எனக்கு பலதையும் நினைவு படுத்தியது. அம்மாளாச்சி கிணறு வெட்டி முடியும் மட்டும் மழை பெய்யக் கூடாது. மழையும், இடி முழக்கமும் எனக்கு நன்றாகவே பிடிக்கும். ஆனா சண்டைக்கோழி மாதிரி திரியிற சுகந்திக்கு இடி முழக்கம் எண்டா பயம், உனக்கு பயமில்லையேடி? ம் இதைவிட சத்தத்தோட வெடி வெடிச்சு தண்ணி சீறிபாய்கிற நாளுக்காக பார்த்துக்கொண்டிருக்கிற எனக்கு பயமோ? சொல்லவேணும் போல இருக்கும்.

அந்த நாளும் வந்தது. எல்லா அனுமதியும் பெற்று நாளைக்கு வெடி வைக்கிற நாள். இரவிராவா நித்திரையே இல்லை. அம்மாவும் அம்மாளாச்சி அம்மாளாச்சி எண்டு கும்பிட்டுக் கொண்டே இருந்தா. அப்பாவை பார்த்தன். புரண்டு புரண்டு படுப்பது தெரிந்தது. கண்ணை மூடினாலும் முளிச்சாலும் தண்ணி சீறிக்கொண்டு வாற மாதிரியே இருந்தது. எப்படா விடியும் என்று மனம் ஏங்கியது.

அப்பாவும் சிவராசாவும் கிணற்றுக் குள்ள இறங்க வெளிக்கிட நான் அம்மாளாச்சியிற்ற ஓடி வந்திட்டன். என்னால அம்மனோட ஒன்றும் கதைக்கவும் முடியேல்ல. நடப்பமா இருப்பமா என்ன செய்ய? மனம் என்னவோ செய்தது.

என்ன குட்டி போட்ட ஏதோ மாதிரி நடந்து திரியிறாய்? ஐயரின் கேள்விக்கு எப்பவும் போல மௌனம் சாதித்தாலும். மனம் ஒரு நிலை இல்லாமல் தவித்துக் கொண்டு இருந்தது. ஒரு நிமிடம் முற்ற வெளியே இரண்டாக பிளப்பது போல் ஒரு சத்தம். என்ரை உடம்பெல்லாம் நடுங்கியது. ஐயர் அம்மா ளாச்சி என்று கத்தியபடி தட்டத்தை கீழே போட நெய்வேத்தியம் எல்லாம் சிதறியது. நான் அம்மனை பார்த்தன். அவ சிரிக்கவே இல்லை. திரும்பவும் நிலம் நடுங்கியது. அதோட அம்மாவின்ரை சத்தமும்.

அம்மா ஏன் கத்திறா சந்தோஷத்திலையா? இல்லை அழுகிறவா? என் கால்கள் காற்றை விட வேகமாக ஓடியது. எல்லாரும் கிணற்றை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிவராசா அம்மாவை பிடிச்சபடி நின்றான்.

என்ன நடந்தது? தண்ணி வந்திட்டுதா? எனக்கு எதுவும் புரியவில்லை. அம்மா பிள்ளை பிள்ளை என்று கிணறை காட்டிறாவே தவிர வேற எதுவும் சொல்லிறாவே இல்லை. கிணற்றை எட்டிப் பார்த்தேன் அங்கே தண்ணி சீறி பாய்ந்து வெளியே வந்து கொண்டிருந்தது. தண்ணியோட தண்ணியோட என்ரை குஞ்சு அப்பாவின்ரை இரத்தமும்...






# ‘ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே...’

- மாலி

‘ஓ, என் யாழ்ப்பாணமே...’ - இந்த ஏக்கம் தணிந்துபோகவில்ல. ஆனாலும், ‘ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே...’ என்று ஒன்று சொல்லத் தலைப்படுகிறது.

நம்முடைய கலைச் செழுமையும் கலா ரசனையும் நமக்கு ஏற்படுத்தித் தந்த பெருமைகள் எத்துணை!

1930 - 60களிலான காலப்பகுதியை கருநாடக இசையின் பொற்காலம் என்பார்கள். அக்காலத்து அந்த இசை உலகில் ரசிப்போடு பேசப்பட்ட ஒரு வாசகம், ‘மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி!’

‘திருவீழிமிழலை சகோதரர்கள்’ என விளங்கிய சுப்பிரமணியபிள்ளையும் நடராஜசுந்தரம் பிள்ளையும் புகழ்பெற்ற


அபிஷேக் ரகுராம்

நாதஸ்வர வித்வான்கள். சென்னை சங்கீத வித்வத் சபையின் ‘சங்கீத கலாநிதி’ விருதுபெற்ற முதல் நாதஸ்வர கலைஞர் சுப்பிரமணியபிள்ளை. இவர்களுக்கு தவில் வாசித்துக்கொண்டிருந்தவர் ‘தவில் மாமன்னர்’ நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

இவர்களுக்கிடையே ஏற்பட்டுவிட்ட பிணக்கில், மீனாட்சிசுந்தரம்பிள்ளை திருவீழிமிழலை சகோதரர்களுக்கு வாசிப்பதை நிறுத்திவிட்டார். அந்த வேளையில்தான், ‘மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி’ என்ற சுலோகத்துடன், யாழ்ப்பாணம் காமாட்சிசுந்தரம் பிள்ளையை தமது தவில்காரராக்கினார்கள் திருவீழிமிழலை சகோதரர்கள்! இந்த ‘சுலோகம்’, சங்கீத உலகில் இன்றும் அறியப்படுவது. யாழ்ப்பாணம் காமாட்சிசுந்தரம் பிள்ளை, நம்முடைய தவில் மேதை தட்சணாமூர்த்தியின் குரு.

கலைச் செழுமைக்கு இதனைச் சொன்னால், பரமேஸ்வரா கல்லூரியில் குமாரி கமலாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி. “சாதிஞ்சனே .....” ஆரபி வர்ணம். குரு வழுவூர் ராமையாபிள்ளை வழமைக்கு மாறான அதீத வேகத்துடன் ஆரம்பித்துவிட்டு, பின்னர்தான் இரண்டாம் காலம், மூன்றாம் காலம் என்னவாகப்போகிறது என்பதை எண்ணி துணுக்குறுகிறார்.

ஆனாலுமென்ன, மிகும் லாவகமாக, குமாரி கமலா அதனை ஒரு சவாலாக அந்த வேகத்திலும் ஆடி நிறைத்தபோது நிறைந்த கரகோஷம், வழுவூராரின் சஞ்சலமுற்ற மனதைப் புளகாங்கிதத்தில் நிறைத்தது.

யாழ்ப்பாணத்து மேடை என்ற உணர்வு தன்னை அந்த அதீத துரிதத்தில் எடுக்கவைத்ததையும், ஆனால், அந்த மேடை, ‘பரதம் என்றால் கமலா’ என்ற அந்த கமலாவின் கலைத்திறனுக்கான உரைகல்லானதையும் இந்திய சாஸ்திரிய இசை, நடன சஞ்சிகை ‘சுருதி’ வெளியிட்ட குமாரி கமலா சிறப்பு இதழில், வழுவூர் ராமையாபிள்ளை பெருமையோடு சொல்கிறார். - இது, நாம் பெற்றிருந்த ரசனையைச் சொல்லும்.

இவைபோக, இன்னும் சிலவற்றை அன்று ஆறு. திருமுருகன் ஆனந்தமும் ஆதங்கமுமாக யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நான்கு தினங்கள் நடைபெற்று


அருணா சாயிராம்

முடிந்த கம்பன் கழகத்து இசை விழாவில் வெளிப்படுத்தினார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூர் உற்சவத்தின்போது, யாழ். இந்திய தூதரகத்தின் அநுசரணையுடன் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற ஒரு நடன நிகழ்ச்சிக்குப் பின்னர், யாழ்ப்பாணத்தில் இந்திய கலைஞர்களுடன் பார்த்த ஓர் இசை நிகழ்வு இது. அபிஷேக் ரகுராம், நெய்வேலி சந்தான கோபாலன், டாக்டர் எஸ். சௌமியா, அருணா சாயிராம் என்ற இந்த உன்னத கலைஞர்களுடன் வர்ஜிகன், சாய் லக்ஷ்மி, சுகன்யா அரவிந்தன், பரமேஸ்வரி கணேசன் என்று, எங்கள் கலைஞர்களும் பங்குகொண்டளித்த இசை விழா.

மண்டபம் நிறைந்த ரசிகர்களும், அதில் கணிசமான அளவில் காணப்பட்ட இசை மாணவர்களும், இழந்துபோன யாழ்ப்பாணத்தின் மீட்பில், ‘சக்தி பிறக்குது மூச்சினிலே’ என்ற ஓர் உணர்வு நெருடக் காரணமாய்த் தெரிந்தனர்.


நெய்வேலி சந்தான கோபாலன்

இளம் வித்வானான அபிஷேக் ரகுராம் ஓர் அசகாய சூரர். ராக ஆலாபனைகளில் ஓர் இசைப் புலி என்றால், தாளத்திலும் பலவிதமான கணக்கு வித்தைகள் காட்டுவார். மிருதங்க மேதை பாலக்காடு ரகுவின் பேரர்.

நெய்வேலி சந்தானகோபாலன், சுகமான சங்கீதத்துக்கு ஒருவர். தெவிட்டாத தெள்ளமுதாக இசையை ஊட்டுபவர். மகாராஜபுரம் சந்தானத்தைப்போல, இயல்பாக வெளிப்படும் சங்கீதம் அவருடையது.

சௌமியா, ‘பாடகர்களின் பாடகி’ என்று சொல்லவல்ல ஒருவர். சங்கீதத்தின் சாஸ்திரீய பண்புகளிலும், உருப்படிகளின் மேன்மையிலும் மேலான பேணுதலும் கவனமும் கொண்டு அமையும் அவரின் இசை, இசை கற்போர்க்கு ஓர் அரும் பாடம்.

அருணா சாயிராமின் இசையைக் கேட்க அரங்குகள் நிரம்பி வழியும். அற்புதமான இசைப் பாரம்பரியம் இவருடையது. பிருந்தா - முக்தாவிடம் இசை பயின்றவர். அந்த வழியைப் பின்பற்றி, சுத்தமாக பாடிவந்தவரைக்கும் கேட்க கூட்டமில்லை. ஆனால், ஒரு ‘கூட்டம்’ அதனை உயர்வோடு ரசித்தது.

பாணியை மாற்றிக்கொண்டார். அமைதியான பாணியை ஒதுக்கிவிட்டு, ஆர்ப்பாட்ட உத்திகளில் இறங்கினார். ஊத்துக்காடு வேங்கடகவியின் காளிங்க நர்த்தன பாடலில் “உஷ், உஷ்” என்று பாம்பு சீறுவதுபோல் ஓசை எழுப்புவார், அரங்கம் சிலிர்த்து எழும். இப்போது கூட்டம் அலை மோதுகிறது. ஆனால் ஒரு ‘கூட்டம்’ இதனைப் பெரிதும் வரவேற்கவில்லை.

ஆக, இத்துணை பல்தரப்பட்ட ஆளுமைமிக்க கலைஞர் சங்கமத்தில் தோய்தல் நமக்கு எப்போதும் தேவை. அது, இப்போது இன்னமும் தேவை.

லய சிம்மங்களின் கர்ஜனை எதிரொலிக்கும் யாழ்ப்பாணத்தில், இக் கலைஞர்களுக்கு பக்கவாத்தியங்களாக இந்தியாவிலிருந்து வந்த மிருதங்கம் டெல்லி சாயிராமும், கடம் கிருஷ்ணாவும் காண்பித்த லய விந்யாசங்களும், கூடவே ரசிப்புடன் கவனத்தை


சௌமியா

ஈர்த்தவை.

நல்லூர், துர்க்கா மணிமண்டபத்தில் இந்த இசைவிழா நடந்தது. இன்னமும் பெரிதான மண்டபத்தில், சிறப்பான ஒலி அமைப்பும்சேர, இத்தகைய விழாக்கள் இனிவரும் நாள்களில் நடைபெறவேண்டும்.

# கொசோவோவில் தொடரும்...

(16ஆம் பக்க தொடர்ச்சி)

**சர்வதேச நீதிமன்றத்தில் கொசோவோ விவகாரம்:**

செர்பியாவில் இருந்து கொசோவா சுதந்திரம் பெற்றதாக பிரகடனம் செய்தமை சர்வதேச சட்டத்தை மீறும் செயல் அல்ல என்று தி ஹேக்கில் இருக்கின்ற சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மொத்தமான 14 நீதிபதிகளில் 10 பேர் இந்தத் தீர்ப்புக்கு ஆதரவளித்துள்ளனர்.

உலகெங்கும் உள்ள பிரிவினைவாத இயக்கங்களில் இந்த தீர்ப்பு சாதகமான தாக்கத்தை ஏற்படு இந்தத் தீர்ப்பு சட்ட ரீதியில் கட்டுப்படுத்தாதது. ஆனால், மேலதிக சர்வதேச அங்கீகாரத்துக்கு இது கொசோவோவை ஊக்குவிக்கும்.

செர்பியப் படைகளுக்கும், அல்பேனிய பிரிவினைவாதிகளுக்கும் இடையிலான போரை அடுத்து 9 வருடங்களின் பின்னர் கொசோவோவின் அல்பேனிய இன பெரும்பான்மையினர் 2008 இல் சுதந்திர பிரகடனம் செய்தனர்.

பெரும்பாலான மேற்கத்தைய நாடுகள் கொசோவோவை அங்கீகரித்தன. ஆனால், செர்பியாவும் அதன் கூட்டாளியான ரஷ்யாவும் அதனை நிராகரித்தன.

**தீர்ப்பின் தாக்கங்கள் என்ன?**

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பானது, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இரண்டு முக்கிய கேள்விகளுக்கு விடையளித்திருக்கிறது.

ஏற்கெனவே நிறுவப்பட்டு நிலை பெற்றிருக்கும் ஒரு நாட்டில் இருக்கும் ஒரு தொகுதிமக்கள், மொழியின் அடிப்படையிலோ, தேசியஇன அடையாளத்தின் அடிப்படையிலோ தாங்கள் தனித்துவமானவர்கள் என்று கூறி தாங்கள் வாழ்ந்த ஒரு நாட்டிலிருந்து தாமாகவே பிரிந்து செல்வது சரியா என்பது முதல் கேள்வி.

அது சரியென்றால், தற்போதைய நாடுகள் தங்களின் இறையாண்மையையும், தமது ஆட்புல ஒருமைப்பாட்டையும் எப்படி பாதுகாத்துக்கொள்வது.

இந்த இரண்டு கேள்விகளுக்கான பதில்களைத்தான் இத் தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது.

ஆயினும் கொசோவோ இனப்படுகொலை என்பது கொசோவோ போரின் போது கொசோவோ அல்பேனியர்களை செர்பியப் படைகள்படுகொலை மற்றும் இன அழிப்பு செய்தனர் என்றே உலகம் அறியும். ஆனால் கொசோவோவில் ஒடுக்கப்படும் சிறுபான்மை செர்பியரை அல்பேனிய அடிப்படைவாதிகளின் அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்படுவதை உலகம் கண்மூடி பார்த்துக் கொண்டுள்ளது கவலைக்குரியதே.

# 24 மணித்தியாலங்களுக்குள் ஆசிரியர்களுக்கு நியமனம்

## கிழக்கு ஆளுநர் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 09

கிழக்கு மாகாணத்தில் ஆங்கில உயர் கல்வி ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த 48 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படாதிருந்தமை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தேசிய உயர் கல்வி ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்துள்ள 48 ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு, நேற்று சனிக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது.

2017 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து நியமனங்களை பெற்றுக்கொள்ள காத்திருந்த ஆங்கில டிப்ளோமா பட்டதாரிகளுக்கு தமது நியமனம் தொடர்பிலான கோரிக்கைகளை முன்வைத்திருந்த போதிலும் அவர்களுக்கு நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்ட நிலையில் ஆளுநரின் உத்தரவின் பேரில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனத்தை பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் 6 வருடங்களுக்கு மேல் ஒவ்வொரு நாளும் இந்த நியமனத்துக்காக காத்திருந்ததாகவும், இந்த நியமனம் எமக்கு பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர்,பிரத்தியேக செயலாளர் அணில் விஜயஶ்ரீ, கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க,மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் கோபாலரட்ணம், அரச அதிகாரிகள் மற்றும் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## பொலிஸ்மா...

உள்ளதாக பொலிஸ் தலைமையகத் தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோளிட்டு செய்தி வெளியாகியுள்ளது.

பொலிஸ் மா அதிபராக இருந்த விக்ரமரத்ன எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி ஓய்வுபெறவிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று மாத காலத்துக்கு அவரின் சேவையை நீடித்தார்.

இந்த சேவை நீட்டிப்பு கடந்த ஜூன் 25ஆம் திகதியுடன் முடிவடைந்தது

பொலிஸ் மா அதிபர் ஒருவர் ஓய்வு பெறும்போது அவருக்கு பொலிஸ் மரியாதை செலுத்தப்படுவதாகவும், ஆனால் அவரது சேவை நீடிப்பு முடிந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்தப்படவில்லை எனவும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

விக்கிரமரத்ன 2020 இல் பொலிஸ் மா அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார். (அ)

## கூட்டமைப்பு...

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர்.

டான் தொலைக்காட்சியில் ஞாயிறு இரவு 8 மணிக்கு ஒளிபரப்பாகும் ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெலியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை குலையக்கூடாது என்பதற்காகவே அதில் பங்காளிக் கட்சியாக இணைந்து நாம் பயணிக்கின்றோம். ஏனெனில் அது எமது தலைமையினால் உருவாக்கப்பட்ட கட்சி. அதில் பங்காளிகளாக இருப்பவர்கள் அதனை விளங்கிக் கொண்டு செயற்படவேண்டும்.

ஜனநாயகப் போராளிகளாகிய எங்களுக்கு பதவி ஆசை கிடையாது. அதற்காக நாங்கள் இந்தக் கூட்டமைப்பில் இணையவில்லை. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் அரசியல் ரீதியாக எமது இலக்கை அடைவதற்காகவே நாங்கள் கூட்டமைப்பில் இணைந்து பயணிக்கின்றோம்.

கூட்டமைப்பு பயணிக்கும் பாதை தவறானது எனக் கண்டால் அதிலிருந்து வெளியேறத் தயங்கமாட்டோம்.

வவுனியாவில் சீனித் தொழிற்சாலை நிறுவ எடுக்கப்படும் முயற்சியை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். அந்த தொழிற்சாலைக்கான முதலீடு எந்த நாட்டினுடையது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதும் எமக்கு தெரியும். இதைப் பற்றி பூரண தகவல்களை எமது சர்வதேச வலையமைப்புகள் ஊடகப் பெற்றுள்ளோம்.

இந்த விடயத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் செயற்படும் விதம் மிகத் தவறானது. அதனை நாம் ஒருபோதும் ஏற்கத் தயாரில்லை. இது பற்றி எம்மோடு எதுவும் பேசப்படவில்லை. இதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். அந்த தொழிற்சாலையை நிறுவ நாம் இடமளிக்கப்போவதில்லை.

எமது அண்டை நாடு இந்தியா. அந்த நாட்டுடன் உண்மையான உறவைப் பேணுவதற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தவறிவிட்டார்கள். இதனால் நாங்கள் அந்த நாட்டுடன் எமது உரிமைகளை அடைவதற்காக பல வழிகளில் தொடர்புகளை பேணுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி இனிமேல் உரிமை கோரமுடியாது. அந்தக் கட்சி இப்போது தனித்து விடப்பட்டுள்ளது. தனி ஒரு கட்சி கூட்டமைப்பாக முடியாது-என்றார்.

(அவரது செவ்வியின் முழுவிவரம் இன்று இரவு 8 மணிக்கு டான் தொலைக்காட்சியின் ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும்). (அ)

## மைத்திரிக்கான...

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு 7.5 கோடி ரூபாயும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 5 கோடி ரூபாயும், முன்னாள் தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிர மென்டிஸ் ஒரு கோடி ரூபாயும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எவ்வாறாயினும், பிரதிவாதிகள் எவரும் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் நிதியில் பணத்தை வரவு வைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி உரிய இழப்பீடு வழங்கப்படாவிட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும் என சட்ட வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ)

## கொக்குத்...

தெரிவிக்கையில்-

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பிரதானமாக தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துவது பற்றியும் உறுப்பினர்களையும் கிளைகளையும் பதிவு செய்வதைப் பற்றியும் இனப்படுகொலைக்கு ஒப்பான ஜூலைப் படுகொலைகளின் 40 ஆண்டு நிறைவு சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் பற்றியும் முக்கியமாக பேசியிருந்தோம். இத்துடன் இந்த மாத இறுதியில் துக்க நாட்களாக அனைத்து மாவட்டங்களிலும் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தும்படியும் கலந்தாலோசித்திருந்தோம்.

போரின்போது இடம்பெற்ற இனப்படுகொலை சம்பந்தமாக நாங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு மனித உரிமை ஆணைக்குழுவில் அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தோம்.

தற்போது கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்படுகின்றபோது துயரம் மிக்க கண்டுபிடிப்புக்கள் இடம்பெகின்றன. பல இடங்களில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இவை சர்வதேசத்தின் முன்னிலையில் இனப்படுகாலையை நிரூபிப்பதற்குரிய ஆதாரங்களாகும். இதற்கு அரச மற்றும் சர்வதேச ஆணைக்குழு முறையாக இயங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட பின் மாநாடு நடத்தப்படும். தமிழரசுக் கட்சியின்ய மாநாட்டு அமைப்பை அடுத்த மத்திய செயற்குழு கூட்டத்தில் அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம்.


மநாட்டில்தான் பதவி மாற்றம் இடம்பெறுவது சம்பிரதாயம். அதையே கட்சியின் அமைப்பு விதியும் சொல்கின்றது.

தற்போது 7 இலட்சத்துக்கு மேற்பட்டோர் உதவித் தொகை நிறுத்தத்தால் முறையீடுகள் செய்வதற்காக போராடுகின்றார்கள். அதை பற்றி மிக விரைவில் அரசுடனும் சர்வதேச மட்டத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்களூடாக கலந்தாலோசிக்கப்படும் .

இதேவேளை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரை பதிவு செய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நிராகரித்திருந்தது. கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிட்டிருந்தனர்.

அவர்கள் அந்தச் சின்னத்தில் போட்டியிட்டதால் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்களாகவே கருதப்படுவர். இந்நிலையில் தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு எந்தப் பரிந்துரைகளை முன்வைத்து பதிவு செய்வதற்கு அனுப்பினார்கள் என்பது எமக்குத் தெரியாது-என்றார். (அ)

# மட்டக்களப்பில் 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு




நிந்தவூர், ஜூலை 09

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம்-இலங்கை, சிவராம் ஞாபகார்த்த மன்றம் - சுவிஸ் ஆகியன இணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய "தராக்கி" ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத் தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41 பேர் எழுதிய கட்டுரைகள் இத் தொகுப்பில் உள்ளடங்குகின்றன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், ஊடகவியலாளர் ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்துகிறார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா ஜெயானந்தமூர்த்தி, பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், காத்தான்குடி நகர சபை நூலகல் திருமதி க.ருத்ரகுமார், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆர்.பாரதி, 'ஆகவே' ஜபார், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பெர்டி கமகே ஆகியோரும் உரையாற்றவுள்ளனர். நிகழ்வின் நிறைவாக கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் நன்றியுரையைற்றுவார். (அ)

## ரணில்...

மேற்கொள்ளவுள்ளார். அமைச்சர்களான அலி சப்ரி, டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியத்துவமிக்க இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். (அ)

## அமைச்சரவை...

திட்டமிட்டுள்ளது.

மேலும் நியமிக்கப்படும் மாகாண அமைச்சர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு இருக்கும் சகல அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகளையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இதற்கு முன்னர் மாவட்ட அமைச்சர்களை நியமிக்கத் தயாரானபோதும் அது வெற்றியளிக்கவில்லை.

எது எப்படி இருந்தபோதிலும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவை பிரதிநிதித்துவப்படுத்தும் அணியின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கம் மாகாண அமைச்சர்களை நியமிக்க தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த அணியினர் தொடர்ந்தும் தமக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கோரி வந்தனர்.

எனினும் அரசாங்கம் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

இதன் காரணமாக இந்த அணியினர் அரசாங்கத்துடன் முரண்பாடுகளுடன் செயற்படும் விதத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில், இவர்களை திருப்திப்படுத்துவதற்காக மாகாண அமைச்சர் பதவிகளை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகப் பேசப்படுகிறது. (அ)

## காணாமல்...

இணைப்பாளர் நிசாந்தன் ஜீட் பீரிஸ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது ஆதங்கத்தினை வெளியிட்டனர்.

போராடுவதற்கான உரிமை உள்ளதாகவும், பதிவுக்காக வருகை தருபவர்களுக்கு இடையூறு இல்லாமல் செயற்படுமாறும் ஆணையாளர் அவர்களிடம் தெரிவித்தார். (அ)

## மருதங்கேணி...

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இலண்டனில் இருந்து உறவினரின் மரண சடங்குக்கு வந்திருந்த 6 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வடமாகாண...

முதல் தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றிய உமா மகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிறஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பற்றிக் டிறஞ்சன் முன்னதாக உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், செயலாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஐ.நாவின் ஆதாரங்களைப் பதிவு செய்யும் பிரதிநிதிகள் முன் அகழ்வு நடக்கவேண்டும்

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி பற்றி ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் கருத்து



யாழ்ப்பாணம், ஜூலை 09

**இடைநிறுத்தப்பட்ட கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் அகழ்வானது ஐ.நாவின் சாட்சியங்களை பதிவு செய்யும் பிரதிகள் முன்னே முன்னெடுக்கப்படவேண்டும் என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கு தொடுவாயில் அகழ்வு செய்யப்பட்ட மனிதப் புதைகுழிகள் தமிழ் மக்களுடையவை என்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசமே கொக்குத்தொடுவாய். நடந்து முடிந்த இறுதி யுத்தத்தில் மாத்திரமல்ல அதற்கு முற்பட்ட காலங்களிலும் இந்தப் பிரதேசங்களில் தமிழ் மக்களின் இருப்பு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்துள்ளது.

மேலும் யுத்த காலங்களில் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் இந்தப் பிரதேசங்களில் நடைபெற்றுள்ளன என்பதை ஐ.நா உட்பட பல அறிக்கைகள் உறுதி செய்துள்ளன.

பல்லாயிரக்கணக்கான நமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நடந்தது என்ன என்று தொடர்ந்தும் அவர்களின் உறவுகள் நீதி கோரிப் போராடி வருகின்றனர்.

மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையின் அடிப்படையிலும் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளின் பிரகாரமும் யுத்தக் குற்றங்களுக்கு எதிரான சாட்சியங்களை பதிவு செய்யும் செயலணி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயலணிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான அதிகாரிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இடைநிறுத்தப்பட்ட மனிதப் புதைகுழிகளின் அகழ்வானது ஐ.நாவின் சாட்சியங்களை பதிவு செய்யும் பிரதிகள் முன்னே முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் மூலமே நமது மக்கள் கோரி நிற்கும் சர்வதேச நீதிக்கு இச்சாட்சியங்கள் உறுதுணையாக அமைய வாய்ப்பாகும் - என்றார்.

# மீசாலை விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 09

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ-9 வீதியின் மீசாலை சந்தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மீசாலையில் உள்ள உறவினர் ஒருவரது வீட்டுக்கு செல்வதற்காக பஸ்ஸில் வந்திறங்கிய குறித்த முதியவர் வீதியை கடக்க முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்துள்ளார்.

விபத்தையடுத்து மீசாலைச் சந்தியில் நின்ற ஓட்டோச் சாரதிகள் காயமடைந்த முதியவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இவ்விபத்தில் 78/7சி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 66 வயதான பத்மநாதன் கதிர்வேல் என்பவரே பலியாகியுள்ளார்

விபத்தை ஏற்படுத்தியவர்கள் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விபத்தை ஏற்படுத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இரும்பு கம்பியால் தாக்கப்பட்ட 10 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

## 12 வயது சிறுமி கைது

கொழும்பு, ஜூலை 09

விளையாடிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சிறுமி ஒருவரால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான இரண்டு சிறார்களும் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் 12 வயதான சிறுமி ஒருவரால் 10 வயதான சிறுவனின் நெற்றிப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த குறித்த சிறுவன் நீர்கொழும்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட 12 வயதான சிறுமியைக் கைது செய்து நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியதன் பின்னர் பாதுகாப்புக் காரணமாக சிறுவர் நிலையமொன்றில் தடுத்து வைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு திரைமறைவில் இரகசிய பேச்சு?

கொழும்பு, ஜூலை 09

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நிதிச் சட்டமூலம் ஒன்றைத் தோற்கடித்து அரசாங்கத்தை கலைப்பது தொடர்பான இரகசியப் பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் நடந்து வருவதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட முன்னாள் அமைச்சர் ஒருவரே இந்த பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கி வருவதாகவும் பேசப்படுகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த அரசியல்வாதி, தனது மகனுக்கு மேற்கு நாட்டுத் தூதரகம் ஒன்றில் தலைமைச் செயலாளர் பதவியை பெற அரசாங்கத்தின் உதவியை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான அரசியல் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. வரவு-செலவுத்திட்டத்திற்கு மேலதிகமான நிதி சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால், பிரதமர் உட்பட அமைச்சரவையை கலைக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆலய வழிபாட்டுக்கு சென்றவர் யானை தாக்கியதில் உயிரிழப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை 09

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விவேகானந்தபுரம் - ஆயிரம்கால் மண்டபம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தும்பங்கேணி - சுரவணையடி ஊற்று கிராமத்தை சேர்ந்த 59 வயது டையை நாகமணி நாராயனபிள்ளை என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விவேகானந்தபுரம்-ஆயிரம்கால் மண்டபத்தில் உள்ள வைரவர் ஆலயத்துக்கு நேற்று முன் தினம் மாலை ஆலய வழிபாட்டுக்குச் சென்றவரே இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை அந்தப் பகுதிக்குச் சென்றவர்கள் குறித்த பகுதியில் சைக்கிள் மற்றும் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் மக்கள் காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் நிலையில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கின்றனர் என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# டான் தொலைக்காட்சிக் குழுமம் நடத்தும் மட்டு கிண்ணம் 2023 தொடர் ஆரம்பமானது





மட்டக்களப்பு, ஜூலை 09

டான் தொலைக்காட்சிக் குழுமம், மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் இணைந்து நடத்தும் மட்டு கிண்ணம் 2023 உதைபந்தாட்டத் தொடரின் பிரதான சுற்று நேற்று ஆரம்பமாகியது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஆரம்பமாகிய மட்டு கிண்ணம் 2023ன் பிரதான சுற்றுத் தொடரில், படுவான்கரை உதைபந்தாட்ட லீக் மற்றும் மட்டக்களப்பு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 32 கழகங்கள் மோதுகின்றன.

மட்டு கிண்ணம் உதைபந்தாட்ட தொடரின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன், மட்டக்களப்பு உதைபந்தாட்ட சங்கத்தின் சுற்றுப்போட்டிக்குழுத் தலைவர் உதயராஜ், டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் மட்டக்களப்பு அலுவலக முகாமையாளர் திருமதி அ.அனன்சியா, மட்டக்களப்பு உதைபந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் ரி.காந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, கொடியேற்றல் வைபவம் இடம்பெற்று, வீரர்கள் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது.

மட்டு கிண்ணம் 2023 தொடரில் சம்பியனாகத் தெரிவு செய்யப்படும் அணிக்கு 3 இலட்சம் ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

மட்டு கிண்ணம் 2023 உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது போட்டியில் அரசடித்தீவு விக்னேஸ்வரா அணியும் கல்லடி ஸ்ரீ முருகன் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் அரசடித்தீவு விக்னேஸ்வரா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.